
கம்பன் மணி மலர்

கம்பன் மணிமலர் - 1983

உள்ளுறை



"நின்[illegible]ர் பிறரன்றி நீயே ஆனாய் ;
நினை[illegible]ர்கள் மனத்துக்கோர் வித்து மானாய்."

"Who can say more than this rich praise that
you alone are you ?"

त्वमेव माता च पिता त्वमेव,
त्वमेव बन्धुश्च सखा त्वमेव,
त्वमेव विद्या द्रविणं त्वमेव,
त्वमेव सर्व मम देव देव ॥

இம்மலர்
அமரர் கம்பன் அடிப்பொடி அவர்களின்
அடிமலர்க்கு எம் அணியாம், அலங்கலாம்
அன்புப் படையல்.

"நின்னை வணங்கி, நீவகுத்த நெறியில் நிற்கும் இதுஅல்லால்
என்னை அடியோம் செயற்பால ?"

சமர்ப்பணம்

கம்பன் ஓர் உலக மகாகவி; கவிச்சக்கரவர்த்தி. காப்பிய வானில் கதிரவனாய் நின்று ஒளிர்பவன். இவன் கல்லாத கலையும் வேதக்கடலும் உலகில் இல்லை எனலாம். ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவன் நம் தந்தை பிரான் கம்பன்.

முத்தரையரிடமிருந்து தஞ்சைப் பகுதியை மீட்டுச் சோழப் பேரரசை நிறுவிய விஜயாலயன் காலத்தில் மிளிர்ந்தவன் கம்பன். விஜயாலயன் மகன், கோதண்டராமன் எனப் பெயர் சூடிக்கொண்ட ஆதித்தன் (கி.பி. 871-907) காலத்தில், அவனால் பெரிதும் மதிக்கப்பெற்றவனாய் விளங்கியவன் கவிச்சக்கரவர்த்தி.

கம்பனை, பெற்ற தந்தையினும் பேணிக் காத்து நின்றவர் சடையப்ப வள்ளல். இன்று கதிராமங்கலம் என விளங்கும் வெண்ணெய்நல்லூர்தான் சடையப்பர் வாழ்ந்த வளநகர். கம்பனின் பல்துறைப் புலமையும், எல்லையிலாக் கவிதா சன்னதமும் கற்றோரையெல்லாம் ஈர்த்து நின்றன. முடியுடைத் தார்வேந்தர்களும், ரசிகப் பெரு மக்களும், கம்பனைப் பெரிதும் மதித்துப் போற்றுவாராயினர்.

கம்பனின் பேராற்றற் பெரும்புலமைக்கு என்றும் கட்டியங் கூறிக்கொண்டு விளங்குவது அவன் அருளிய இராமாவதாரம் என்னும் இராம காதை! தமிழ் மொழியின் வளத்திற்கும், தமிழர் தலை நிமிர்வுக்கும், ஒப்பற்ற உதவியாய் நின்று நிலவுவது கம்ப ராமாயணம். தமிழ்மொழியின் தனிப்பெரும் காப்பியத்தை, எம்மப்பன் கம்பன், சடையன் பதியாம் வெண்ணெய்நல்லூரில் அரங்கேற்றினான். மன்னர்களும், மறையோர்களும், ரசிகப் பெருமக்களும், அறம் பேணும் பொதுமக்களுமாக நிறைந்திருந்த கண்ணியம் நிறைந்த அவைக்களத்திலே அரங்கேற்றம் நடைபெற்றது. பவித்திரமான அக்காப்பியம் அரங்கேறிய புனித விழா ஒரு பெரும் திருவிழாவாக, "நாவலோ, நாவல்!" என்று நடந்திருக்க வேண்டும்.

சகாப்தம் 807; கலியாண்டு 3986-க்குச் சரியான விசுவாவசு-பங்குனி 4-ஆந் தேதி (கி. பி. 886 பெப்ருவரி—22) புதன்கிழமை அஸ்த நட்சத்திரமே இராமாவதாரம் அரங்கேறிய பெருநாள், அன்றுதான் நம்முடையவன் கம்பனை, "கவிச்சக்கரவர்த்தி" என்று அறிவுடையுலகம் மனமாரப் பாராட்டி விருதளித்து மகிழ்ந்தது.

கம்பன் பிறந்த நாளை நாமறிய எவ்வகைச் சான்றுகளும் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால், "கவிச்சக்கரவர்த்தி" பிறந்த நாளை நாம் நன்கறிவோம். பங்குனி-அத்த நாளில் தானே "கவிச்சக்கரவர்த்தி" பிறந்தான்! எனவே, இராமாவதாரம் அரங்கேறியதும் "கவிச்சக்கரவர்த்தி" என்ற விருதுப்பெயரைக் கம்பன் ஏற்றருளியதுமான அந்தப் பங்குனி

அத்த நாளேயே கம்பன் திருநாளாக—ஜன்ம நட்சத்திரமாக—ஏற்று, விழா எடுத்து வருகிறோம். மகம், பூரம், உத்தரம் ஆகிய முதல் மூன்று நாள்களில் காரைக்குடியில் உள்ள கம்பன் மணிமண்டபத்திலும், பங்குனி அத்த நாளில் நாட்டரசன் கோட்டையில் கவிச்சக்கரவர்த்தி சமாதி கொண்டு எழுந்தருளி அருள் சுரக்கும் கம்பன் பள்ளிபடைத் திருக்கோயிலிலும், தூய இலக்கியப் பெருவிழாவாகக் கொண்டாடி மகிழ்கிறது கம்பன் கழகம்.

இவ்விழா எவ்விதமான சாதி, சமய, மொழி, கட்சி, பால் வேறுபாடின்றி யாவரும் கலந்துமகிழும் அருமையுடையதாகும். புலவர்களும், கலைஞர்களும், கவிஞர்களும், திறனாய்வாளர்களும், ரசிகர்களுமாக ஆயிரக்கணக்கானவர்கள் ஆண்டுதோறும் வந்து கலந்து கம்பன் புகழ் பாடியும், கம்பன் புகழ் பருகியும் பெருமை செய்கின்றனர்.

கம்பன் திருநாட்செலவு ஆண்டுக்காண்டு கூடிக்கொண்டே வருகிறது. நாற்பத்து நான்கு ஆண்டுகட்கு முன் முந்நூற்றைம்பது ரூபாய் அளவில் தொடங்கிய கம்பன் திருநாளின் செலவு ஆண்டுதோறும் வளர்ந்து, எத்துணைச் சிக்கனமாக நடத்தினும், ரூபாய் இருபதாயிரத்திற்கு மேல் உயர்ந்துவிட்டது. விழாச்செலவுக்காக இதுவரை யாரையும் நன்கொடை கேட்டு அணுகியதில்லை. நிலையறியும் உடனுறை நல்லன்பர்கள் தாங்களாகவே முன் வந்து உவந்தளிக்கும் நன்கொடை, செலவின் ஒரு சிறு பகுதியையே ஈடு செய்கிறது.

இந்நிலையில் கம்பன் பற்றிய கட்டுரைகளைத் தொகுத்துப் பயனுள்ள மலர் வெளியிடுவதென்றும், அதில் விளம்பரங்கள் வெளியிடுவதென்றும் முடிவு செய்யப் பெற்றது. அதற்குக் கம்பன்பால் அன்பும், திரு. கம்பன் அடிப்பொடியின்பால் பரிவும் உள்ள அன்பர்கள் பலர் விளம்பரங்கள் உதவி, இப்புனிதப் பணிக்கு ஆக்கம் தர முன் வந்துள்ளனர்.

இவர்கட்கெல்லாம் எளியோம் என்னை கைம்மாறு இயற்றவல்லோம்? எம்மப்பன் கம்பனும் அவன் பாடிப் பரவிடும் முழுமுதற் பரம்பொருளும், இவ் அறவோர்கட்கும் இவர்களின் முயற்சிகட்கும், தொழில்துறை வாணிபங்கட்கும் எல்லா நலன்களையும் வளங்களையும் அருளிக் காத்தருள வேண்டுமென்று மன மொழி மெய்களால் வணங்கி வாழ்த்துகிறோம்.

எல்லா வகையாலும், முன்னரும், பின்னரும் கம்பன் திருநாளுக்கும், கம்பன் திருப்பணிகட்கும் உதவிய—உதவி வருகிற—அறவுள்ளம் படைத்த பெரியோர்கள் அன்பர்கள் யாவர்க்கும் என்றும் மறவா நன்றியுடன் பணிவார்ந்த வணக்கம் செலுத்தி மகிழ்கிறோம்.

கடந்த 44 ஆண்டுகளாகக் கவிச்சக்கரவர்த்தி கம்பன் பணிக்காகவே தம்மை அர்ப்பணித்துக்கொண்டு "நும் கடன் அடியேனையும் தாங்குதல், என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற நாமமறையையே வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டு, கம்பனுக்கு விழா எடுப்பதைத் தனி ஒரு சகாப்தமாகச் செய்து, கம்பனின் பாததூளியாகவே இரண்டறக் கலந்துவிட்டார், நம் வணக்கத்துக்குரிய கம்பன் அடிப்பொடி சா. கணேசன் அவர்கள்.

சென்ற 1982 ஆம் ஆண்டு, காரைக்குடி மணி மண்டபத்தில் நிகழ்ந்தகம்பன் திருநாள்களின் போதே அடிப்பொடியவர்களுக்குத் தேக நிலை சீராக இருக்கவில்லை. நிறைவு நாளில் நன்றி கூறக்கூட முடியாத நிலையில் அவர் உடல் தள்ளாடியது. அந்த நிலையிலும் கம்பன் பணியை முறையாக ஆற்றி வந்தார். அது, கம்பன்மீது அவருக்கிருந்த ஈடுபாட்டைக் காட்டியது. அவர் செய்து, நடந்து காட்டிய வழிமுறைகள் பின்பற்றுவோருக்கு ஒரு பாடநூலாக அமைந்திருக்கிறது.

அமரர் கம்பன் அடிப்பொடியவர்கள் எதிலும் மரபு வழுவாமல் நடக்கவேண்டும் என்பதில் மிகவும் கண்டிப்பானவர். அவரது மரபை நாமும் தவருது காத்துக் கடைப்பிடிப்போமாக. எனவே, அவர் வழிவழியாகக் கம்பன் மணி மலரில் எழுதி வந்த முன்னுரையையே ஏற்றவாறு மாற்றி அவர் பாதங்களில் நன்றியுடன் சமர்ப்பிக்கின்ரேம்.

அவர் வழியில் நின்று முதல் மூன்று நாள்களும் காரைக்குடியில் பெருவிழாவாக நடத்தி, நான்காவது நாளைப் புலவர் பெருமகனுரின் ஒடுக்க நிலையமாகிய நாட்டரசன் கோட்டையில் புனித விழாவாக நாமும் முறையாக நடத்துவோமாக !

இம்மலரை மிக்க சிரத்தையுடன் அச்சிட்டு உதவிய சென்னை ஏசியன் அச்சகத்தார்க்கு எங்கள் நன்றி உரியதாகும்.

கம்பன் மணி மண்டபம்,	அன்பும் பணிவுமுள்ள,
காரைக்குடி-623 002,	**ஜி. கே. சுந்தரம்,**
26, மார்ச், 1983.	தலைவர், கம்பன் கழகம்.

அடுத்த ஆண்டில் கம்பன் திருநாள்

		மகம்	பூரம்	உத்தரம்	அத்தம்
ருத்ரோத்காரி	பங்குனி	உ	௩	௪	௫
1984	மார்ச்	15	16	17	18
		வியாழன்	வெள்ளி	சனி	ஞாயிறு

"வடம் பிடிக்க வாருங்கள்!"

இன்றைய தலைமுறையினராகிய நமக்கு, நேற்றைய தலைமுறையினை கம்பன், நாளைய தலைமுறை அறிவோடு பேசுவதனாலே கடந்த காலத்தினன் அல்லன்; காலங்கடந்தவன் ஆவான். அத்தகு கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ் வளர்த்தவர், அறிஞர் கம்பன் அடிப்பொடி சா. கணேசன் அவர்கள். இன்றைக்கு, நாற்பத்து நான்கு ஆண்டுகட்கு முன்னர் அவர் ஊன்றிய வித்துதான் கம்பன் கழகமும், கம்பன் திருநாளும் ஆகும். எந்தத் துறையிலும், இதுவரை யாரும், எங்கும், எப்போதும், எவ்விதமும் சாதித்திருக்க முடியாத மகோன்னதமான இலக்கியத் திருப்பணி இது.

அத்தகைய ஒரு சகாப்தம்—வரலாறு இப்போது பரிபூரணமடைந்தாலும், தொடர்ந்து ஒளி வீசும். ஆம். அவர் ஏற்றிய கம்பன் பணி என்ற இலக்கிய தீபம் இன்னும் எரிகிறது—திரிமட்டுமே மாற்றப்பெற்றுள்ளது.

'நேருவுக்குப் பின் யார்?' என்ற ஆயிரம் பொன் கேள்வியைப் போல, சா. க. வுக்குப் பிறகு கம்பன் திருநாள் என்னாகும் என்றவர்கள் வியப்படையும் வண்ணம், கம்பன் அறநிலை அறங்காவலர்களும் அன்பர்களும் முன்வந்து முயற்சியில் ஈடுபட்டார்கள். ஊர் கூடி இழுத்தால் தேர், நிலை நோக்கி ஓட எவ்வளவு நேரமாகிவிடப்போகிறது?

கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்த்த கணேசன் என்ற தனிப் பெரும் மனித இலக்கு இல்லை. என்றாலும், இன்றைக்குக் கன்னித் தமிழ் வளர்க்க, கணேசன் புகழ் பாடிய, பாடிவரும், பாடும் அன்பர் திருக்கூட்டமே ஒன்று கூடி உள்ளது. கம்பனுக்கு ஒருவர்தான் அடிப்பொடியாய் ஆக முடிந்தது. ஆனால் கணேசனுக்கோ, பலப்பலர் அடியவர். பின் வரும் பக்கத்தில் உள்ள அவர்களை எல்லாம் ஒன்றுதிரட்டி, நடப்பாண்டில் கம்பன் பணி செய்யக் கம்பன் அறநிலை வேண்டிக்கொண்டுள்ளது.

கம்பன் அடிப்பொடி அவர்கள் காரைக்குடியில் தோன்றிய அறிஞர் என்றாலும், தமிழக முழுவதுக்கும்—ஏன், தமிழ்கூறும் நல்லுலகம் யாவற்றுக்கும்—திருத்தொண்டராய்ப் பணியாற்றிய பெருமையும் அருமையும் சேர்த்தவர்கள். தமிழகத்தின் எங்கெந்தப் பகுதிகளிலோ அவர்கள் புரோகிதராய் இருந்து நடத்தி வைத்த திருமணங்கள் எத்தனையோ! அவரைத் தெய்வமாகவே மதித்து வழிபட்டு வருபவர்கள், வேங்கடம் முதல் குமரி வரை ஏராளம் பேர் உள்ளனர். ஆகவே, அடிப்பொடி அவர்கள் இல்லாத முதலாவதாகிய இந்த ஆண்டில், முடிந்தவரை எல்லாரையும், எல்லா ஊராரையும், இனத்தினரையும் இணைத்தே பணி செய்ய ஒரு குழுவாக அமைத்துக் கம்பன் அறநிலை வேண்டிக் கொண்டுள்ளது.

இந்த முறைகூடப் புதியது அல்ல; கம்பன் அடிப்பொடி அவர்களே அமைத்ததுதான். நாற்பத்தொன்பது கடைச்சங்கப் புலவர்களைப் போல் நோக்கர்களை அமைக்கும்போது, அவரகள் பின்பற்றியபடி எல்லா ஊரார், இனத்தார், தொழிலார் எல்லாரையும் ஒன்று

கூட்டியுள்ள கூட்டு முயற்சியேயாகும். இல்லாவிட்டால் அன்பைப் பொழியும் வள்ளல்களும், தொழிலதிபர்களும், கல்விக்கடலாரும், அறிஞர்களும், முதல்வர்களும் தச்சு வேலையும் ஒலி, ஒளிப் பணி செய்வோரும், ரசிகர்களும் இணைய முடியுமா ? இந்த அமைப்பே அடிப்பொடி அவர்களின் நினைவிற்குச் செலுத்தும் சின்னஞ்சிறிய நினைவாஞ்சலியாகுமன்றோ?

இந்த இடத்தில், அடிப்பொடி அவர்களுக்குச் சடையப்பராய் நின்று போற்றிய, இன்றும் போற்றி வரும், கோவைக் கம்பன் கழகத் தலைவர் திரு. ஜி. கே. எஸ். அவர்களை யும், பாளையங்கோட்டை கம்பன் கழகப் புரவலர் திரு. எம். எஸ். சுந்தரம் பிள்ளை அவர்களை யும் மிக்க அன்போடும், நன்றியறிதலோடும் போற்றி வாழ்த்துகிறோம். இவர்கட்கும், மிக்க ஈடுபாட்டுடன் பணியாற்றி வரும் கம்பன் கழக உறுப்பினர்கட்கும் கம்பன் பல்வளமும் பன்னலமும் அருளுவானாகுக !

கம்பன் கழகத்தைப் பொறுத்தவரை, கம்பன் அடிப்பொடி அவர்கள் இருந்தால் எப்படியெல்லாம் திட்டமிட்டு, பயனும் பொலிவு மிக்கதாய் நடத்துவார்களோ அதற்கு ஒரு விதத்திலும் குறைவு வாராது நிறைவுடைய வகையில் விழாவையும் மலர் வெளியீட்டையும் அதையொட்டிய நடவடிக்கைகளையும் செய்ய வேணுமென்பது எங்கள் எண்ணம். அதற்கு அலகிலா விளையாட்டுடைய அவன் திருவருளும், நம்பிரான் கம்பன் நல்லாசியும், உங்கள் எல்லோருடைய நல்லாதரவும் ஒத்துழைப்பும் முன் நின்றருளுமாக !

கம்பன் மணி மலரில் இடம் பெறும் கட்டுரைகள் யாவும் கம்பன் அடிப்பொடி அவர் களின் மணிவிழாவினைக் கொண்டாடவும், அதையொட்டி ஒரு மலர் வெளியிடவும் எண்ணிய போது எழுதப்பெற்றவை ; பல்வேறு துறை அறிஞர் பெருமக்களால், அந்தத் துறையில் எல்லாம் கம்பன் அடிப்பொடி அவர்கள் எப்படித் திறம்படத் தொண்டாற்றினர்கள் என்பதை விளக்குபவை. தொட்ட தொட்ட துறையெல்லாம் துலங்கச் செய்தவர்கள் மட்டு மல்ல, அவற்றிலெல்லாம் கற்றுத் துறைபோகிய வித்தகருமாவார் என்பதை இக்கட்டுரை கள் எடுத்தியம்புவதோடு, இன்றைக்கு அவர்கள் நினைவிற்கு ஓர் எளிய, ஆத்மார்த்தமான அஞ்சலியாகவும் அமைகின்றன. இவைகளை ஆக்கிய பெருமக்களுள் பலர் இன்று ஜீவிய வந்தர்களாக இல்லை; அதுவே இவ்வஞ்சலியை அமரத்வம் பெற்ற ஆராதனையாக்குகின்றது.

'முடிவின் எல்லை முதலாகும்' என்பது ஆன்றோர் மொழியன்றோ? ஆம். இது கம்பன் அடிப்பொடி தொடங்கிய வேள்வியின் பூர்ணுகுதி அல்ல ; ஒர ஆவர்த்தி முடிந்து அடுத்த ஆவர்த்தியின் ஆரம்பம். அவர்கள் விட்ட இடத்திலிருந்து கம்பன் அன்பர்கள் யாவரும் ஒன்ருய்க் 'கூடியிருந்து குளிர்ந்து' வடம் பிடிப்போம், வாருங்கள் !

உங்கள்
அன்பும் பணிவுமுள்ள

மு. மெ. முத்துராமன்
பழ. பழநியப்பன்
செயலாளர்கள்

கம்பன் கழகம்
கம்பன் மணி மண்டபம்
காரைக்குடி
26—3—1983

கம்பன் கழகத்தின் நடப்பு ஆண்டு உறுப்பினர்கள் :

தலைவர் :

திரு. ஜி. கே. சுந்தரம்.

உப தலைவர் :

திரு. க. கு. கோதண்டராமன்.

செயலாளர்கள் :

திருவாளர்
மு. மெ. முத்துராமன், பழ. பழநியப்பன்.

உதவிச் செயலாளர் :

திரு. ச. கம்பராமன்

பொருளாளர் :

திரு. அள. திருநாவுக்கரசு.

உறுப்பினர்கள் :

திருவாளர்கள்

1. மெ. செ. மெ. மெ. சொக்கலிங்கம் செட்டியார், காரைக்குடி.
2. சா. நா. அ. சொ. அ. அண்ணாமலை செட்டியார், காரைக்குடி.
3. என். ஏ. மாரிமுத்து பிள்ளை, காரைக்குடி.
4. ராம. கண்ணப்பன், நாட்டரசன் கோட்டை.
5. மு. சிதம்பரம், காரைக்குடி.
6. எம். எஸ். சுந்தரம்பிள்ளை, பாளையங் கோட்டை.
7. ஆர். கே. சுப்பிரமணியன், காரைக்குடி.
8. ந. கோவிந்தசாமி, புதுவை.
9. பெ. மு. சுப்பையா செட்டியார், ஆத்தங்குடி.
10. பழ. சண்முகம், காரைக்குடி.
11. நா. மெய்யப்பன், காரைக்குடி.
12. அரு. நாகப்பன், ஒ. சிறுவயல்.
13. அள. சுப்பையா, காரைக்குடி.
14. அள. வீரப்பன், காரைக்குடி.
15. ராம. தெ. முருகப்பன், காரைக்குடி.
16. ப. மு. சித. பழநியப்பன், காரைக்குடி.
17. எஸ். ஏகப்பன், நாட்டரசன்கோட்டை.
18. ராம. சொக்கலிங்கம், காரைக்குடி.
19. ப. சு. ராம. அண்ணாமலை செட்டியார், காரைக்குடி.
20. பழ. முத்தையா, காரைக்குடி.
21. அரு. ராம. முத்துராமன், காரைக்குடி
22. ராம. மீனாட்சிசுந்தரம், காரைக்குடி.
23. சுப.சித. சுப்பிரமணியன், காரைக்குடி.
24. எஸ். தனகோடி, காரைக்குடி.
25. ஜீ. செல்வ கணபதி, அழகப்பாபுரம்.
26. ஆர். பாபநாசம், அழகப்பாபுரம்.
27. என்.எம். ஜனார்த்தனம், அழகப்பாபுரம்
28. சா. நா. நாராயணன், காரைக்குடி.
29. மரு. சு. மாணிக்கவேல் செட்டியார், காரைக்குடி.
30. வெ. பழநியப்பன், காரைக்குடி.
31. வீர. முருகப்பன், காரைக்குடி.
32. எஸ். முனுசாமி, காரைக்குடி.
33. அரு. லெட்சுமணன், காரைக்குடி.
34. நா. பழனியப்பன், காரைக்குடி.
35. லெ. கணேசன், காரைக்குடி.
36. கலைமகள் ராமநாதன், கோவை.
37. மெ. காந்தி, கோவை.
38. எஸ். சிவலிங்கம், காரைக்குடி.
39. நா. நஞ்சண்டன், கோவை.
40. சரசுவதி இராமநாதன், பள்ளத்தூர்.
41. அ. கிருஷ்ணசாமி, கோவை.
42. க. மீ. வேங்கடேசன், கோவை.
43. அ. அருணகிரி, புதுவை.
44. இரா. இராதாகிருஷ்ணன், திருச்சி.
45. எஸ். இராமகிருஷ்ணன், மதுரை.
46. எஸ். கே. ராமராசன், வேலூர்.
47. வை. கண்ணுச்சாமி, தஞ்சை.
48. சித. ஆத்தப்பன், திருச்சி,
49. பி. மூக்கையா ஆசாரி, காரைக்குடி.

கம்பன் கழகங்கள் — முகவரியுடன்

1. கம்பன் கழகம்,
கம்பன் மணிமண்டபம்,
காரைக்குடி - 623 002.
[தொலைபேசி : 600]

2. கம்பன் கழகம்,
கம்பன் அருட்கோயில்,
நாட்டரசன்கோட்டை - 623 556

3. கம்பன் கழகம்,
ஆமருவியப்பன் கோயில்,
தேரழுந்தூர் - 609 808
மாயூரம் வழி.

4. கம்பன் கழகம்,
சீராம விண்ணகரம்,
கள்ளிப்பட்டி - 638 505,
[தொலைபேசி : 44]

5. கம்பன் கழகம்,
நாமக்கல் - 637 001.
சேலம் மாவட்டம்.

6. கம்பன் கழகம்,
சீதா கல்யாண மண்டபம்,
கோபிச்செட்டிப்பாளையம் - 638 452.
[தொலைபேசி : 84]

7. கம்பன் கழகம்,
116, முத்துமாரியம்மன் கோயில் தெரு,
புதுச்சேரி - 605 001.
[தொலைபேசி : 509]

8. கம்பன் கழகம்,
10, பெரிய அக்ரகாரம்,
ராசிபுரம் - 637 408,
சேலம் மாவட்டம்.

9. கம்பன் கழகம்,
மணி பீடர் பள்ளி,
கோயமுத்தூர் - 641 037.
[தொலைபேசி : 35851]

10. கம்பன் கழகம்,
4, பி. சாலை ரோடு,
சேலம் - 636 001.
[தொலைபேசி : 3501]

11. கம்பன் கழகம்,
கற்பகச் சோலை,
1, வெள்ளையன் செட்டியார் வீதி,
கோட்டூர்புரம்,
சென்னை - 600 085.
[தொலைபேசி : 411110]

12. கம்பன் கழகம்,
சித்ரா ஜவுளி ஸ்டோர்ஸ்,
புதுக்கோட்டை . 622 001.
[தொலைபேசி : 560]

13. நெல்லை மாவட்டக் கம்பன் கழகம்,
கம்பராமாயண மண்டபம்,
1, பெருமாள் தெற்கு மாட வீதி,
பாளையங்கோட்டை - 627 002.

14. மலேசியக் கம்பன் கழகம்,
61, Jalan Hang Jebatr,
MALACCA, (Malaysia).
(Phone : 3206)

15. கம்பன் கழகம்,
120, காந்தி சாலை,
திருவாரூர் - 610 108.

16. கம்பன் கழகம்,
11, சின்னையா தெரு,
பட்டுக்கோட்டை - 614 601.
[தொலைபேசி : 102]

17. கம்பன் கழகம்,
62, காமராஜ் சாலை,
திருப்பத்தூர் - 635 601,
வட ஆர்க்காடு மாவட்டம்.
[தொலைபேசி - 29026.]

18. கம்பன் கழகம்,
1, மாணிக்கம் பிள்ளை தெரு,
சிவகங்கை - 623 560.

19. கம்பன் கழகம்,
அனுமார் கோயில்,
பரமக்குடி - 623 707.

20. கம்பன் கழகம்,
13, E. B. காலனி,
காந்தி நகர், வேலூர் - 632 006.
வட ஆர்க்காடு மாவட்டம்.

21. கம்பன் கழகம்,
8, சிங்கார முதலி தெரு,
நல்லியக்கோடன் நகர்,
திண்டிவனம் - 604 002.

22. கம்பன் கழகம்,
22, ஞானதிக்கம் பிள்ளை தெரு,
கல்லுக்குழி,
திருச்சி - 620 020.

23. கம்பன் கழகம்,
8. இராஜ வீதி.
காஞ்சிபுரம் - 631 502.

24. கம்பன் கழகம்,
தஞ்சாவூர் - 613 001.

25. கம்பன் கழகம்,
9, அண்ணா நகர்,
மதுரை - 625 018.

26. கம்பன் கழகம்,
அவினாசி - 638 654.

27. கம்பன் கழகம்,
37, மெயின் ரோடு,
கவுந்தப்பாடி - 638 455.
Via-Erode, R. M. S.

28. கம்பன் கழகம்,
23, காமராஜர் ரோடு,
பொள்ளாச்சி - 642 002.

29. கம்பன் கழகம்,
23-24, அன்ன தானவிநாயகர் கோயில் தெரு,
பேட்டை, திருநெல்வேலி - 627 004.

30. கம்பன் கழகம்,
தென் திருப்பேரை - 628 623,
திருநெல்வேலி மாவட்டம்.

31. கம்பன் கழகம்,
வாழியூர் - 632 315,
வட ஆர்க்காடு மாவட்டம்.

32. கம்பன் கழகம்,
7 - B, வாங்கப்பாளையம்,
சேலம் சாலை, கரூர்-639 006.

33. கம்பன் கழகம்,
4-A, DR. SARAT BANERJEE ROAD,
CALCUTTA - 700 029.

34. கம்பன் கழகம்,
68, இராசாராம் தெரு,
சவகர் நகர்,
திருமங்கலம் - 626 706.

35. கம்பன் கழகம்,
பேராசிரியர் குடியிருப்பு,
கிழக்குத் தாம்பரம் - 600 059
[தொலைபேசி : 48581]

36. கம்பன் கழகம்,
57, பஜார் தெரு,
பெரம்பலூர் - 621 212.

37. கம்பன் கழகம்,
மேலரத வீதி,
நாட்டரசன் கோட்டை - 623 556.

38. கம்பன் கழகம்,
2, பேட்டை பாக்யநாதம் தெரு,
கும்பகோணம் - 612 001.

39. கம்பன் கழகம்,
ஆலடிப்பட்டி-நல்லூர்-627 853,
தென்காசி வட்டம்,
நெல்லை மாவட்டம்.

40. கம்பன் கழகம்,
9, வர்த்தகர் தெரு,
ராமேச்வரம் - 623 526.
[தொலைபேசி-24]

41. கம்பன் கழகம்,
"சோலை", 6, தாண்டல் கந்தசாமி தெரு,
ராஜபாளையம் - 626 117.

42. கம்பன் கழகம்,
கலா தனிப்பயிற்சிக் கல்லூரி,
கமர்ஷியல் சாலை,
உதகமண்டலம் - 643 001.

43. அகில இலங்கைக் கம்பன் கழகம்,
135, வாசகசாலை வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம், Srilanka.

44. கம்பன் கழகம்,
B-11, சந்தன மர வீதி, வட்டம் 9,
நெய்வேலி - 607 801.

45. கம்பன் கழகம்,
வையப்பமலை,
சேலம் மாவட்டம் - 637 410.

46. கம்பன் கழகம்,
திருத்துறைப்பூண்டி - 614 713,
தஞ்சை மாவட்டம்.

வாழ்க திருத்தொண்டர்!

தவத்திரு. **இராமநாதஸ்வாமிகள்**

உலகில் தோன்றிய உயிர்கள் அனைத்தும் தத்தம் இயல்புக்கேற்பச் செயல்புரிந்தே வாழ்கின்றன. சிற்றுயிருங்கூட இமைப்பொழுதும் செயலற்றிருப்பதில்லை. கரும நியதியின் உண்மை தெரிந்து, செய்யும் செயல்களைக் கரும யோகமாகச் செய்வது மேலோர் இயல்பு. செய்யும் செயல்கள் அனைத்தையும் கருமயோகமாகச் செய்தால், அதுவே வாழ்க்கையின் குறிக்கோளாகிய வீடுபேறு அடைவதற்கான சாதனமாக அமைகின்றது.

> "கடப்பாடு அறிந்து கருமம் புரிவோன்
> இடர்ப்பாடு இன்றி இச்சையின் நீங்கி
> ஆன்ம விளக்கம் அடையப் பெறுமே"

என்பார், தவராஜ சிங்கமாகிய ஸ்வாமி விவேகானந்தர். தன்னலம் கருதாது பயனில் கருத்தின்றிச் செயல் புரிவதே கருமயோகத்தின் தனிச் சிறப்பாகும்.

> "கருமத்தில் மட்டுமே உனக்கு அதிகாரம், பயனில் ஒருபோதும் இல்லை. பயன் கருதிக் கருமம் புரிபவனாக இராதே. செயலின்மையில் பற்றும் ஏற்பட வேண்டாம்."

> "தனஞ்ஜயா! யோகத்தில் நிலைபெற்றுப் பற்றை நீக்கி, வெற்றி தோல்விகளில் சமமாக இருந்து, கருமத்தைச் செய்வாய். சமநிலையே யோகம் என்று சொல்லப் பெறும்."

என்பவை கீதா வாசகம்.

பயனில் கருத்தின்றிச் செயல்புரிவது எப்படி ? அதற்கும் பகவத்கீதை விளக்கம் தருகிறது.

> "கௌந்தேய! நீ எதைச் செய்கின்றாயோ, எதைப் புசிக்கின்றாயோ; எதை ஹோமம் செய்கின்றாயோ, எதைத் தானம் செய்கின்றாயோ, எந்தத் தவம் செய்கின்றாயோ அவற்றை எனக்கு அர்ப்பணமாகச் செய்வாய்."

பட்டினத்தடிகள்,

> "என்செயல் ஆவது யாதொன்றும் இல்லை. இனித்தெய்வமே !
> உன்செய லேயென்று உணரப் பெற்றேன்"

என்று அருளியவண்ணம், இறைவன் கைக் கருவியாக, அவன் ஆட்டுவிக்கும் வழி செயல்படுவதே கருமயோக சாதனையின் ரஹஸ்யமாகும். அன்பர் சா.க வுக்கு இக்கரும யோகக் கலை, பிரயத்தனமின்றியே மரபுவழி கைவந்துள்ளது. இவர்தம் தந்தையார் உயர்திரு. சாமிநாதன் செட்டியாரவர்கள் பண்பட்ட கருமயோகியாவர். அவர்கள் சமயத்துறையிலும், சமுதாயத்துறையிலும் ஆற்றியுள்ள பணிகள் எண்ணிறந்தனவாகும். ஆடம்பரமின்றி அடக்கமாகவே பணிபுரியும் பண்பினர் ஆதலின், அவர்கள் செயல்கள் விளம்பரத்தில் இடம்பெறுதலில்லை. ஆயினும், பிள்ளையார் பட்டிக் கற்பக விநாயகர் ஆலயத்தின் முன், ஓங்கி உயர்ந்து கலையழகுடன் விளங்கும் இராஜகோபுரம், என்றென்றும் அவர்கள் புகழைப் பறைசாற்றி நிற்கும். இன்னும் அவர்களுடைய நேர் கண்காணிப்பில் நிர்மாணிக்கப் பெற்ற வெள்ளி ரதங்கள் பலவும், வாகனங்கள் பலவும் அற்புதமான கலை நுட்பத்துடன் அவர்கள் பெயர் முழக்கி நிற்கும். திருக்கோயில்களில் கும்பாபிஷேகங்கள், பெருவிழாக்கள் சிறப்பாகவும் முறை தவறாமலும் நடாத்துவிப்பதில் தனித் திறமையுடையவர்களாயிருந்தார்கள். வேத விற்பன்னர்கள், ஆகம பண்டிதர்கள், பண்ணிசைவாணர்கள், சிற்பக் கலைஞர்கள், ஆபரணப் பணியாளர்கள் என்றின்னோரன்ன குழுவினர் எந்நேரமும் அவர்களைச் சூழ்ந்திருப்பர். அவரவர்

களுக்கு ஏற்ற வகையில் பணிகள் அமைத்துக் கொடுத்துச் சிறந்த முறையில் நிறைவேற்றி வைப்பதில் பெருமகிழ்வு பெற்ருர்கள். தெய்விகப் பணியே சிந்தை முழுதும் நிறையப் பெற்றிருந்தார்கள். சமுதாயத்துறையிலும் வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் தாமாகவே முன்வந்து சரீர சிரமத்தையும் பொருட்செலவை யும் பாராட்டாது, கருமமே கண்ணுக இருந்து, செவ்வனே செயலாற்றுவதில் நிகரற்று விளங்கி ஞர்கள்.

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்"

என்னும் பொய்யாமொழிக்கிணங்க, அன்பர் கணேசனுருக்கு அவர்தம் தந்தையார் தேடி வைத்த அழியாச் செல்வம், தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெருநெறிச் செல்வமாகும்.

அன்பர் கணேசன் அவர்களின் தேசத் தொண்டு, தமிழ்த்தொண்டு, கலைத்தொண்டு உலகம் அறிந்ததே. அவருடைய தொண்டு உள்ளம்,கருவிலேயே உருப்பெற்றதாகும். உணவு இல்லாமல்கூட அவர் வாழ இயலும். தொண்டு செய்யாமல் வாழ அவரால் இயலாது. இதனை நன்கு உணர்ந்துகொண்ட ஸ்ரீகாமகோடிபீடாதிபதி, ஜகத்குரு ஸ்ரீசங்கராச்சார்ய ஸ்வாமிகள் அவர்கள், "தொண்டர்குல சேகரர்" என்ற விருது வழங்கிக் கௌரவித்துள்ளார்கள்.

நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் மிக்கவர். பணிவும் அதே நேரத்தில் கண்டிப்பும் உடையவர். வளைந்து கொடுத்துக் காரியம் சாதிப்பதை ஒருபோதும் விரும்பாதவர். பணத் திற்கோ அன்றி அதிகாரத்திற்கோ அடிபணியும் சுபாவமற்றவர். வேண்டியவர் என்பதற்காக எவருக்கும் விட்டுக் கொடுப்பதை விரும்பாதவர். தமக்குச் சரி என்று தோன்றுவதைத் தனியாக வேனும் நின்று சாதிக்கும் தன்மை உடையவர். அவருடைய அசைக்க முடியாத மனஉறுதி அவரை அஹங்காரம் கொண்டவர் போலக் காட்டும். ஆனுல், உண்மையில் அகந்தை இல்லாத எளிய தொண்டர் என்பதை அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் அறிவார்கள்.

வாழ்க்கையில் சிக்கலான நிலைமைகள் தோன்றும் காலத்தில் ஒருவர் எங்ஙனம் நடந்து கொள்ளுகிருர் என்பதிலிருந்து அவருடைய உண்மையான மனப்பாங்கை அறிந்துகொள்ள முடிகின்றது. இதனைச் சோதனைக்காலம் என்று பெரியோர் பகர்வர். இத்தகைய சோதனைகள் அன்பர் கணேசனுருக்கு எத்தனையோ முறைகள் நேர்ந்துள்ளன. இதுவரை, மற்றவர்கள் அறிந் திராத ஒரு சோதனையையும், அதில் காட்டிய தந் நலத்துறவையும் இங்கு நினைவுகூர்தல் பொருத்த மாகும்.

1935-ஆம் ஆண்டில் கணேசனுரின் அருமைத் தந்தையார் இவ்வுலக வாழ்வை நீத்ததன்பின் குடும்பப் பொறுப்பு முழுமையும் கணேசனுரே ஏற்க வேண்டியது ஆயிற்று. அந்நாளில் குலதர்ம முறைப்படி, பர்மாவிலும் மலேயாவிலும் லேவா தேவித்தொழில் நடைபெற்று வந்தது. கணேச னுரின் மனமோ தொழில்துறையிலும் குடும்பக் காரியங்களிலும் சிறிதும் நாட்டம் கொள்ளவில்லை. தேசியத் திருத்தொண்டிலேயே சிந்தை உடைய வராயிருந்தார். நேரிடையான கண்காணிப்பு இல்லாத காரணத்தால், பர்மாவில் நடைபெற்று வந்த தொழில் பெரும் நஷ்டத்தை உண்டாக்கும் வகையில் திசை மாறலாயிற்று. குடும்பநலனில் அக்கறை உடைய உறவினர்களும் நண்பர்களும் சேர்ந்து, உடனே பர்மா நாடு சென்று, தொழில் செம்மையாக நடைபெறுவதற்குரிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்ததன் மேல், உற்ருர் உறவினரின் தொல்லை பொறுக்க முடியாமல், ஒருவாருகக் கணேசனுர் பர்மா சென்று திரும்ப இசைந்தார். ஏற்கனவே பர்மா நாட்டில் இருந்துவரும் நெருங்கிய உறவினரான பெரியார் ஒருவர், கணேசனுருடன் உடனிருந்து தொழில் முறையைச் சீர்செய்வதென்றும் திட்ட மிட்டு, பர்மாவுக்குப் புறப்படுவதற்கான நாளும் குறிக்கப்பெற்று, பிரயாணத்திற்கென ஏற்பாடு களும் செய்யப்பெற்றன.

இந்த நிலையில், காரைக்குடியில் முப்பத் தாருவது தமிழ் மாகாணக் காங்கிரஸ் மாநாடு நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் தொடங்கப் பெற்றன. மாநாட்டில் பங்குகொண்டு பணி யாற்றத் துடித்தார் கணேசனுர். பர்மாவிலிருந்து வந்துகொண்டிருந்த செய்திகள் உடனடியாகப் பர்மா புறப்படுவதற்கான அவஸ்யத்தை வற் புறுத்துவனவாயின. உற்ருர் உறவினர் ஒரு பக்கம் பர்மாப்பிரயாணத்துக்கு நிர்ப்பந்தம் செய்துவந்தனர்.

பர்மாப் பிரயாணத் தேதிக்குச் சில நாள்கள் முன்னதாக முப்பத்தேழாவது தமிழ் மாகாண மாநாட்டு வரவேற்புக்குழு அமைப்பதற்காக, 'தமிழ்க்கடல்' இராய.சொ. அவர்கள் இல்லத்தில் காரைக்குடி ஜில்லா காங்கிரஸ் உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. தேச விடுதலையில் தீவிர பங்குகொண்ட தலைவர்களும், ஊழியர்களும் பெரும் அளவில் கூடியிருந்தனர். வரவேற்புக் குழுவுக்கு மெய்யான காந்திய பக்தர் உயர்திரு. காந்தி மெய்யப்ப செட்டியார் அவர்கள் தலைவ ராகவும், "காந்தி பிள்ளைத்தமிழ்" இயற்றிய 'ஊழியன்' ஆசிரியர் (தமிழ்க்கடல்) இராய.சொ. அவர்கள் உபதலைவராகவும், அன்பர் கணேசன் அவர்கள் செயலாளராகவும் பிரேரிக்கப்பெற்று, ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

அன்பர் கணேசனரின் தொண்டு உள்ளம் குடும்பக் கடமையை உதறித்தள்ளி, நாட்டுக்குத் தொண்டு செய்யக் கிடைத்த அரிய வாய்ப்பைப் பெறுதற்கரிய பேருக மதித்துப் போற்றியது. வரவேற்புக் குழுவினர் அரும்பாடு பட்டு, அது வரை நாடு கண்டிராத வகையிலும், என்றும் மறக்க இயலாத வகையிலும் மாநாட்டைச் சிறப் புறச் செய்தனர். செட்டிமார் நாட்டுக்கே உரிய தனி உபசரிப்புக் கலையின் உச்சநிலையை மாநாட்டினர் நன்கு அனுபவித்துப் பாராட்டினர்.

மாநாடு மிகவும் சிறந்த முறையில் நிறை வெய்திய பின்னரும் பர்மாப் பிரயாணத்தில் கருத்தின்றித் தட்டிக்கழித்து வந்தார். உரிய காலத்தில் சிரத்தை கொள்ளாத காரணத்தால், பர்மாநாட்டில் நடைபெற்று வந்த தொழில் பெரு நஷ்டத்துக்குள்ளாயிற்று. அப்பொழுதுங்கூட கணேசனர் அதைப் பொருட்படுத்தாது தேசத் தொண்டுக்கே தம்மை அர்ப்பணித்துவிட்டார்.

தந்நலத்தையும் குடும்பநலத்தையும் உதறித் தள்ளி, சேவையாகிய வேள்வியில் தம் வாழ்வையே ஆஹுதியாக அர்ப்பணித்த அன்பர் கணேசனர் அவர்களை உள்ளன்புடன் வாழ்த்திப் பாராட்டுகிறோம்.

வாழ்க திருத்தொண்டர்!

வளர்க திருத்தொண்டு!

கம்பனின் காவியத்தைத் தவம் செய்து காத்தவர்!

தவத்திரு. **குன்றக்குடி அடிகளார்**

''என்றுமுள தென்தமிழ் இயம்பி இசை கொண்டவன்'' கவிச்சக்கரவர்த்தி கம்பன். கம்பன் முற்போக்கு அணியைச் சார்ந்த கவிஞனே! கம்பனின் காவிய நாடு, அயோத்தி. கம்பனின் இதயத்தை அலங்கரித்த நாடு, தமிழ் நாடு. கம்பனின் எல்லை, உலகம்! கம்பன் காலூன்றி நின்றது, தமிழகத்தில்! கம்பன் பாடியது இரண்டு பேரரசுகளை! ஆனால், கம்பனின் இலக்கு, உடையாரும் இல்லை; இல்லாரும் இல்லை என்ற சமுதாயம் காண்பதேயாகும். கம்பன் தான் கண்ட நாட்டைப் பாடினன். இனிய மன்பதை உலகம் காணவேண்டிய நாட்டையும் பாடினன்! கம்பனின் பாடல்,

''கள்வார் இலாமைப் பொருள்
காவலும் இல்லை; யாதும்
கொள்வார் இலாமைக் கொடுப்பார்களும்
இல்லை மாதோ''

என்பது.

இந்தப் பாடலைப்பற்றியதும் சமுதாய மாற்றங்களை மையமாகக் கொண்டதுமான கலந்துரையாடல் ஒன்று 1954-இல் நடந்தது. இக்கலந்துரையாடலில் தமிழகத்தின் ஆதீன கர்த்தர் ஒருவர் பங்குகொண்டு சிறப்பித்தார்கள். ஆதீனகர்த்தரவர்களுக்குப் பழைய மரபுகளில் இறுக்கமான பிடிப்பு. நெகிழ்ந்து கொடுக்க மாட்டார். கலந்துரையாடலில் சாதி வேற்றுமைகள், பொருளியல் வேற்றுமைகள் பற்றிய விவாதம் நடைபெற்றது. உலகில், கடவுள் மறுப்பு இயக்கங்கள் இவ்விரண்டு வேற்றுமைகளின் அடிப்படையில்தான் தோன்றி வளர்ந்து வருகின்றன. ஆதீனகர்த்தரவர்கள், இவ்வேற்றுமைகள் ஊழின் வழியில் அமைந்தவை; இவற்றை மாற்றுவதோ, மாற்ற நினைப்பதோ சமய மரபன்று என்று வாதிட்டார்.

கம்பன் அடிப்பொடி அவர்களுக்குச் சாதி வேற்றுமைகள்—பொருளாதார வேற்றுமைகள் நீங்க வேண்டும் என்ற ஆர்வம் உண்டு; அதே போழ்து, ஊழிலும் நம்பிக்கை உண்டு. ஆனால், கம்பன் அடிப்பொடி அவர்களின் ஊழினைப்பற்றிய இக்கருத்து, அறிவுடனும் படிப்பினைகளுடனும் இயைபுடையது. முரட்டுத்தனமான நம்பிக்கை அல்ல. இதனை விளக்கக் கம்பன் அடிப்பொடி அவர்கள் ஓர் உரையே நிகழ்த்தினர். ஆதீன கர்த்தரவர்கள் எளிதில் உடன்படவில்லை. கம்பன் அடிப்பொடி அவர்கள், அறிவு—கருத்து அடிப்படையில் விவாதிப்பதில் வல்லவர்; விவாதத்தின் போக்கு மகிழ்வாக அமையக்கூடியதாகவும் அமைத்துக்கொள்வார். விவாதத்தில் கலந்து கொள்வோர் கருத்துகளை வாங்கிக்கொள்ளாமல்—சிந்திக்காமல், முரட்டுத்தனமாக—பிடிவாதமாக விவாதித்துக்கொண்டிருந்தால் கம்பன் அடிப்பொடி அவர்களுக்குக் கோபம் வந்துவிடும். கோபம் வந்துவிட்டால் நகைச்சுவை ததும்பும் வகையில் கொச்சையான வினாக்களைத் தொடுக்க ஆரம்பித்துவிடுவார். ஆதீனகர்த்தரவர்கள் ஊழின் பிடியிலிருந்து மீளவே இல்லை. கம்பன் அடிப்பொடி அவர்கள் ''ஊழினைக் கண்டு கொள்வதற்குத் துணையாய் அமைவன காரணங்களே தவிர, காரியங்கள் அல்ல'' என்றார். ''தீண்டாமைக்குரிய நிலையில் ஆசாரம் இல்லாமல் இருப்பது ஊழின் காரணமல்ல. முறையான உழைப்பு இல்லாமல் இருப்பது வறுமைக்குக் காரணமாக இருக்கலாம். இவை இரண்டுக்கும் காரணம், ஊழ் அல்ல; செயலின்மையேயாம். ஆதலால், ஊழின் காரணமாகத் தோன்றியவையல்ல தீண்டாமையும் வறுமையும்'' என்று வலியுறுத்தினர்.

ஆதீனகர்த்தரவர்கள் ஊழின் பக்கமே சார்ந்து நின்று வழக்காடினர்கள். கம்பன் அடிப்பொடி அவர்களுக்குக் கோபம் வந்து

விட்டது. "7'0 கிளாக் பிளேடைக்கொண்டு முகத்தை மழித்துக்கொள்வது என்பதும் ஊழ் தானு?" என்று வினுத் தொடுத்தார். உடன், அவையில் சிரிப்பு! வெகுளி! பின் அமைதி தழுவிய சூழ்நிலை தோன்றி நிலவியது!

ஆதலால், கம்பன் அடிப்பொடி அவர்கள் எப்போதும் சமுதாயத்தையே சார்ந்து இருந் தார். அவருடைய ஈடுபாடு சாதாரண மக்களைப்பற்றியதாக இருந்தது. கம்பனின் படைப்புகளில் குகன், அனுமன், கும்ப கருணன், திரிசடை ஆகிய பாத்திரங்கள் கம்பன் அடிப்பொடி அவர்களுக்கு மிகவும் பிடித்தமானவை. இப்பாத்திரங்களின் குணுதி சயங்கள் கம்பன் அடிப்பொடி அவர்களின் வாழ்க்கையில் தர்க்கங்களைச் செய்திருந்தன என் பதை அறிந்தவர் அறிய இயலும். அனுமனைப் போல நிரந்தினிது சொல்லுதல்—பேசுதல் கம்பன் அடிப்பொடி அவர்களுக்குக் கைவந்த கலை. இராமன்—குகன் நட்பை, உறவைக் கம்பன் அடிப்பொடி அவர்கள் நினைந்து நினைந்து பாராட்டுவார். அது போலவே, யார்மாட்டும் எளிதில் பழகுவார்; பழகிய நட்பைப் பேணுவார். சீதையைத் திரிசடை காப்பாற்றியதைப் போல் கம்பன் அடிப்பொடி அவர்கள் கம்பனின் புகழை —கம்பனின் காவியத்தைத் தவம் செய்து காப் பாற்றினர். சீதையை இராமனின் மனைவி என்று இராவணன் வாயிலாகவே சொல்ல வைக்கிறுன் கம்பன். அது போல, கம்பனை ஏற்காது மறுத் தவர்களைக் கம்பன் கழக மேடையில் ஏற்றிக் கம்பனைப் பாராட்டச் செய்த பெருமை கம்பன் அடிப்பொடிக்கு உண்டு. கும்பகருணன் அறத் தின் பக்கமும் நின்ருன். அதே போழ்து, நன்றி யறிதல் உடையவனுகவும் விளங்கினுன். இஃது ஒரு திட்பமான குணப்படைப்பு. கம்பன் அடிப்பொடி அவர்களுக்கு அறநெறி—அருள் நெறியில் அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. ஆனுலும், அதே போழ்து இவற்றின் காரணமாக யாருக்கும் தீங்கு செய்யமாட்டார்; மற்றவர் செய்யவும் அனுமதிக்கமாட்டார்.

கம்பன் அடிப்பொடி அவர்கள் கம்பனை— அவனுடைய காவிய நலன்களை மட்டும் படிக்க வில்லை. கம்பனின் இலக்குகளும் கம்பன் அடிப் பொடி அவர்களுக்குப் பிடித்தமானவை. இரா மனின் புகழ் பாடியும், இராவணனின் இகழ் மாற்றியும் கம்பன் புகழ் கொண்டான். கம்பன் அடிப்பொடி அவர்கள் கம்பனின் புகழ் பாடியும் "மானுடம் வென்றதம்மா!" என்று கம்பன் பாடிப் பரவிய மானுடத்தை வாழச்செய்தும் புகழ் பெற்ருர்.

கம்பன் கண்ட நாடு உருவாக முயற்சி செய் வதே கம்பன் அடிப்பொடி அவர்களுக்குச் செய் யும் தொண்டு. கம்பன் அடிப்பொடி அவர்களின் தொண்டு நின்று நிலவுக !

"சாதனையாளர் கணேசன்"

திரு. நா. மகாலிங்கம்

சா. கணேசன் அவர்களை நினைக்கும் போதெல்லாம் அவருடைய எளிய தோற்றமே கண்முன்னல் வந்து நிற்கும். அவருடன் நெருங்கிப் பழகியவர்களுக்கோ, அமைதி நிறைந்த அவர் முகபாவத்தில் அன்போடு கூடிய ஒழுங்கும் கண்டிப்பும் இழையோடுவது புலப் படும்.

இடையிலே எளிய கதராடை; மேலுக்கோ சட்டை இல்லை. ஒரு சின்னத்துண்டுதான். அதுவும் மேலாடை என்று சொல்லும் அளவுக்குப் பெரிதில்லை. அன்று முதல் இன்றுவரை காந்திஜியை விடாது பின்பற்றி வருவோரில் இவரும் ஒருவர். அதேபோல், காந்திஜியின் மற்றொரு பண்பும் இவரிடம் உள்ளது. அது தான், காலம் தவருமை. அதிலே மிகவும் கண்டிப்பான மனிதர். பல ஆண்டுகளாகக் காரைக்குடியில் இவர் உருவாக்கி நடத்திவரும் கம்பர் விழாவில் ஒரு நிகழ்ச்சியாவது குறித்த நேரம் தவறி நடக்க முடியாது. காலை ஒன்பது மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பம் என்று சொன்னல், யார் வருவதற்கு நேரமானலும், "கம்பன் வாழ்க! கன்னித் தமிழ் வாழ்க!" என்ற முழக்கத்துடன் நிகழ்ச்சியை ஆரம்பித்துவிடுவார். காலம் தவருமை என்ற ஒரு பண்பு ஒருவரிடம் அமைந்துவிட்டால் போதும், மற்றவை எல்லாம் தாமாகவே ஒருவருக்கு அமைவது எளிது.

அரசியலிலும் சரி, சமூகக் கண்ணேட்டத் திலும் சரி, தமக்கென்று 'சுதந்திரமான' - திட்ட வட்டமான கருத்துகள் கொண்டவர் இவர். அதனல்தான் சட்டசபைகளில் இவர் பேச்சு ஆணித்தரமாகவும் தெளிவாகவும் அமைந் திருக்கிறது. உருவான நல்ல யோசனைகளை அளிக்கும் சட்டசபை உறுப்பினர்களில் இவரும் ஒருவர்.

இதற்கேற்றபடியே இவர் பேச்சாற்றலும் வன்மையாகவும் வாதத்திறனுடன் கூடியதாகவும் இருக்கும்.

"உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்;
வாக்கினிலே ஒளிஉண் டாகும்"

என்ற பாரதியின் பாட்டுக்கு இவருடைய பேச்சு ஓர் எடுத்துக்காட்டு. தமிழ் இலக்கியங்களில் - சிறப்பாகக் கம்பராமாயணத்தில் இவருக்குள்ள நல்ல பயிற்சி இவருடைய பேச்சுக்கு வன்மையும் வண்ணமும் ஊட்டுகின்றன. இவருடைய பேச் சாற்றல் பட்டி மண்டபங்களில் வாதாடும் பழக்கத்தால் ஏற்பட்டதா? அரசியலில் பல ஆண்டுகளாக ஈடுபட்டுப் பல கூட்டங்களில் பேசிய பழக்கத்தால் ஏற்பட்டதா என்பது சிந்திக்க வேண்டிய விஷயம். அதே சமயத்தில் இவர் பேச்சில் — சட்டப்பேரவையானலும் இலக்கியப் பேரவையானலும்—சுதி பிசகாது; அதாவது, தரம் சிறிதும் மாற்றுக் குறையாது. இளைய அரசியல்வாதிகள் இதைப் பின் பற்றுவது அவசியமாகும். ஆகவே, இலக்கியப் பேரவையையும் அரசியல் மேடையாக ஆக்கிவிடக் கூடாது என்பது இதனல் தானே விளங்கும்.

ஒரு முக்கியமான தொண்டைச் சா. கணேசன் அவர்கள் தமிழ்நாட்டிற்கு - ஏன் - தமிழ் கூறும் நல்லுலகத்திற்கே ஆற்றியிருக் கிறர். அதுதான் அவருடைய இலக்கியத் தொண்டு. காரைக்குடி கம்பர் கழகமானது இன்றைய தினம் தமிழ்நாட்டில் மிகவும் புகழ் பெற்றுவிட்டது. கம்பராமாயணத்திற்குக் கண் மூடித்தனமான ஓர் எதிர்ப்பு இருந்த காலத்தில், கம்பர் கழகத்தைத் தோற்றுவித்துக் கம்பன் கவியமுதத்தை வாரி வழங்கித் தமிழகமெங்கும் கன்னித்தமிழின் கவிச்சுவையினைப் புலப்படுத் தியவர், கணேசன், ரசிகமணி டி. கே. சி,

அவர்கள் உருவாக்கிய இலக்கிய வட்டத்தை வளர்த்த செவிலித்தாய், கணேசன் என்றே சொல்லலாம். கவிதையானது அநுபவிப் பதற்கே என்பதை உணர்த்தும் மிகச்சிலரில் இவரும் ஒருவர்.

மற்றொரு தொண்டையும் மிகவும் சிறப்பாக இங்கே குறிப்பிட வேண்டும். இன்றைய தினம் நாடெங்கும் பல்லாயிரக்கணக்கான மக்களின் இதயங்களைக் கவர்ந்து இலக்கிய ஆர்வத்தைப் பரப்பியிருக்கும் பட்டி மண்டபங்களை நடத்தத் தொடங்கிய "கணேசர்" இவரே என்று சொல்ல வேண்டும். பட்டி மண்டபம் என்றால் என்ன, இலக்கியத் திறனாய்ச்சிச் சுவை ஏற்படுமாறு அதை எப்படி நடத்துவது என்று நடத்திக் காட்டியவர் கணேசனும் அவருடைய நண்பர் குழுவினருமே ஆவர். திரு. கணேசன், திரு. அ. சீனிவாசராகவன், திரு. அ. ச. ஞான சம்பந்தன், திரு. கி. வா. ஜகந்நாதன்; திரு. ஜஸ்டிஸ் மகராஜன் முதலியவர் கூடிப் பட்டி மண்டபம் பேசுகிறார்கள் என்று சொன்னால் காரைக்குடி கம்பன் விழாப்பந்தல் நிரம்பி வழியும்; வானொலிப் பெட்டிகளைச் சுற்றிலுங்கூடக் கூட்டம் திரண்டிருக்கும். இவர் தொடங்கி வைத்த பட்டி மண்டபங்களால் இன்றைய தினம் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கிடையிலே நமது பழைய இலக்கியங்களில் ஆர்வமும் இலக்கிய இரசனையும் ஏற்பட்டிருப்பது உண்மை. அரசியல் கூட்டங்களில் திரண்டு, சிலர் பேசும் சாரமில்லாத வாதங்களையும் வசைமொழி களையும் கேட்டுப் பழகிப்போன மக்களுடைய மனங்களை இலக்கியச் சர்ச்சையில் ஈடுபடுத்தி விடுவதென்பது ஒரு பெரிய சாதனையாகும்.

முடிவாக, இவரது தொண்டுகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் அமைந்திருப்பது, இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டுக் கண்காட்சி யைத் தம் பொறுப்பில் திறம்பட அமைத்து, உலகப் பேரறிஞர்களின் பாராட்டைப் பெற்ற தாகும். கண்காட்சியை மேலெழுந்தவாரியாகப் பார்த்துத் திரும்ப வேண்டுமென்றாலும் 2 மணி நேரம் பிடிக்கும். தமிழகத்தின் நாகரிகத்தை ஆதிகாலம் முதல் - மனிதன் நிலவறையில் வசித்த காலம் முதல் - இன்றைய தினம் வரை நூற்றாண்டு நூற்றாண்டாக நேரில் சென்று பார்த்து வந்தது போன்ற அநுபவம் கண் காட்சியை விட்டு வெளிவரும் யாருக்குமே ஏற்பட்டிருக்கும். மறக்க முடியாத மாநாட்டு நிகழ்ச்சிகளில் கண்காட்சியும் ஒன்று. கண்காட்சி மலர் ஒன்றும் இவரது சாதனைத் திறனுக்குச் சான்றாக அமைந்துள்ளது.

இப்படிப் பேச்சிலும் செயலிலும் சாதனை யிலும் தமக்கென்று ஒரு வழியை வகுத்துக் கொண்டு, அதனை ஆழமாகவும் ஆணித்தர மாகவும் ஏற்று நடத்தும் நல்ல தலைவர்களில் திரு. சா. கணேசன் அவர்களும் ஒருவர். அவர் வாழ்வும் பணியும் அனைவருக்கும் நல்லதொரு வழிகாட்டி.

தீரன் கணேசன்

அமரர் நீதிபதி எஸ். மகராஜன்

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன், திருநெல்வேலி கம்பன் விழாவில், முதன் முதலாக நண்பர் கணேசனைச் சந்தித்தேன். தொட்டுப் பொட்டுப் போடலாம் போலிருந்தது அவருடைய ஸ்யாமள வண்ணம்; தும்பைப்பூ போன்ற வெண்ணிறக் கதர் வேட்டி; மடிப்புக் கலையாமல் தோள்பட்டையிலிருந்து தொங்கிக்கொண்டிருந்த பழுப்பு வண்ண மேல் வேட்டி; தங்கச் சட்டம் போட்ட மூக்குக் கண்ணாடி; முகில் கூட்டத்தைக் கிழித்துக்கொண்டு வந்து நிற்கும் முழுநிலாவை யொத்த சந்தனப்பொட்டு; சட்டை போட்டு மறைக்க முடியாத ஓர் எளிமை; எளிமைக்குள்ளிருந்து எட்டிப் பார்க்கும் அசைக்க முடியாத ஓர் உறுதி; முகத்திலிருந்து வீசும் களங்கமற்ற, ஆனால், கவர்ச்சி நிறைந்த ஓர் ஒளி; கிட்ட நெருங்கிப் பழக அழைக்கும் ஒரு தோழமை, ஆனாலும், அந்தத் தோழமைக்குள்ளிருந்து திடீர் திடீரென்று கொப்புளிக்கும் ஒரு பயங்கரக் கண்டிப்பு.

''இவன் என் நண்பன்; இளம் வழக்கறிஞன்'' என்று சொல்லி என்னைக் கணேசனுக்கு அறிமுகப்படுத்தினர், ஆ. முத்துசிவம். சில விநாடிகளில் மனமொன்றி உறவாடத் தொடங்கி விட்டோம். கொஞ்ச நேரம் கழிந்தது. எண்பத்திரண்டாவது வயதிலே, வெள்ளக்கால் தமிழ்த் தாத்தா சுப்பிரமணிய முதலியார் அவர்கள் அன்று காலமாகிவிட்டதாகச் செய்தி வந்தது. கம்பன் விழாக் கொண்டாடிக்கொண்டிருந்த எங்களுக்கு இச்செய்தி வருத்தத்தைக் கொடுத்தது. செய்தியைக் கேட்ட கணேசன், ''இன்று நாம் எல்லோரும் உண்ணுவிரதம் இருக்க வேண்டும். தமிழ்ப் பெரியாருக்கு நாம் செலுத்த வேண்டிய நன்றிக் கடன் இது'' என்று ஓர் உத்தரவு போட்டார்.

நாங்கள் எல்லோரும் இளவட்டங்கள்; சிறைச்சாலை போய் அறியாதவர்கள்; உண்ணுவிரதம் என்ருல் ஓட்டம் எடுப்பவர்கள்; தியாகத்துக்கும் எங்களுக்கும் வெகு தூரம். 'முதலியார் அவர்கள் இறந்துபோனதற்காக, அதுவும் 82-வது வயதில் இறந்து போனதற்காக, உண்ணுவிரதம் இருக்கச் சொல்லுகிருரே கணேசன். தான் வேண்டுமானல் இருந்துவிட்டுப் போகட்டும்; நம்மையும் சேர்த்திமுப்பானேன்?' என்று நினைத்துக் கொண்டு பசி தாங்க முடியாத நிலையில் நானும் முத்துசிவனும் கம்பி நீட்டிவிட்டோம். பக்கத்திலிருந்த சாப்பாட்டு விடுதிக்குப் போய், விலாப் புடைக்கத் தின்றுவிட்டு, ஒரு மணி நேரம் கழித்து; கணேசன் உண்ணுவிரதம் இருக்கும் இடத்துக்குப் பயந்து பயந்து வந்தோம். எங்கள் முகத்தைப் பார்த்ததுமே, எங்கள் கள்ளத்தனம் தெரிந்து விட்டது கணேசனுக்கு. எங்களைப் பார்த்து' ''தின்றுவிட்டு வந்தாச்சா?'' என்று கர்ஜித்தார்' ''ஆமாம், ஆமாம். அவ்வளவுதான், ஐயா, உங்கள் தமிழ்ப்பற்று. ஒரு தமிழ் மகனுக்காக ஒரு நாள் பட்டினி கிடக்க முடியவில்லையே உங்களாலே'' என்று சொல்லிச் சடைத்துக் கொண்டார்.

இதைக் கேட்ட எனக்கு அவமானம் தாங்க ''முடியவில்லை. 'அரசியல் உலகத்திலே உண்ணுவிரதம் ஒரு சிறந்த கருவியாக இருக்கலாம். ஆனந்தத்துக்காகவே அமைந்த இலக்கிய உலகத்திலே உண்ணுவிரதக் கரடியை அவிழ்த்துவிடுவது முறையல்ல!' என்று சொல்லி, என் மனத்தை நானே தேற்றிக்கொண்டேன்.

* * *

திடீரென்று கப்பல் உடைந்து மூழ்கி மனித சஞ்சாரமில்லாத ஒரு தீவிலே, அலை என்னை அடித்துக்கொண்டு போய்விட்டதென்ருல், தீரர் கணேசன் பக்கத்திலிருந்தால் போதும், எந்த நெருக்கடியையும் சமாளித்து, மனத்தளர்ச்சியைப் போக்கி, ராபின்ஸன் க்ருஸோவைப்

போல, அந்தப் பாழும் தீவை ஒரு உல்லாஸ ஸ்வர்க்கம் ஆக்கிவிடுவார் அவர்.

நெருக்கடியென்றால், ஸப்த நாடியும் நமக்கு அடங்கிவிடும். மூலையிலிருந்துகொண்டு மண்ணுந்தையைப் போல் முனகிக்கொண்டிருப்போம் நாம். ஆனால், நெருக்கடியிலேதான் நண்பர் கணேசனுடைய முழு ஆற்றலும் தொழிற்படத் தொடங்கிவிடும். அப்படி ஓர் அபூர்வமான, பரபரப்பற்ற துணிச்சல் படைத்தவர் அவர்.

1954-இல் நண்பர்கணேசனோடு இராமநாதபுரம் கம்பர் விழாவுக்குப் போயிருந்தேன். அடுத்த நாள் ஒரு ஜீப் காரிலே திருப்புல்லாணியை நோக்கிப் புறப்பட்டோம். சித்திரை மாதத்து அருங்கோடை. மதியம் ஒரு மணியிருக்கும். கடும்பசி நேரம். ஒரே பாலைவனம். பாலைவனத்தின் மத்தியில் போய்க்கொண்டிருந்தபோது ஜீப் காரின் அச்சு முரிந்துவிட்டது. இந்த நிர்க்கதியான நிலையில், மாற்றுக் காருக்குச் சொல்லியனுப்பினோம். அது வந்து சேருவதற்குக் குறைந்தது மூன்று மணி நேரம் ஆகும். கோபமும், வெயிலும், பசியும் என்னை வதக்கி எடுத்துவிட்டன. ஏதோ குடி முழுகிப்போய்விட்டது என்ற உணர்ச்சியோடு ஜீப் காரைத் திட்டிக்கொண்டே நின்றேன். நண்பர் கணேசனோ உற்சாக மயமாகிவிட்டார். ஒரு ஜமுக்காளத்தை எடுத்து வந்து ஒரு கருவேல மரத்தடியில் விரித்தார். அவருடைய தோல் பையிலிருந்து (தோல் பையா அது? அக்ஷய பாத்திரம் அல்லது சமய சஞ்சீவி என்றே அதை அழைக்க வேண்டும்) அவருடைய தோல் பையிலிருந்து நன்றாகச் சாணை பிடித்த ஒரு கத்தியை எடுத்து வந்தார். அந்தக் கத்தியின் தந்தப் பிடிக்குள்ளேதான் எத்தனை எத்தனை மாயக் கருவிகள்! கத்தியால் அரசங்குலையை அறுத்து வந்தார். குலையிலுள்ள பூக்களைக் கொய்து, அவற்றின் விசித்திர அமைப்பைப்பற்றிப் பேசத் தொடங்கினார். நான் தாவர இயல் படித்தவன்தான். ஆனால், பூவைப் பார்த்து ரஸிப்பதற்கு இதுவா நேரம்! என்னுடைய சுடுமூஞ்சித்தனத்தை லக்ஷியம் பண்ணாமல், நண்பர் ஓர் அரசிலையைச் சுருட்டி, அதில் ஒரு ஈர்க்கம் குச்சியைச் செருகி, வாயில் வைத்துப் பீப்பீ ஊதத் தொடங்கினார். அதில் ஆரோகண அவரோகணக் கிரமங்களைக் காட்டினார். கருவேல மரத்திலிருந்து காய்களைப் பிடுங்கி, புல்லாக்கு செய்து மூக்கில் போட்டுக்கொண்டார். ஒரு ஜோடி பச்சைத் தோடுகள் செய்து காதுகளில் மாட்டிக்கொண்டார். பிறகு, கம்பன் பாலைவனத்தை வருணித்திருக்கும் பாடல்களை அவருக்கே உரிய இராகத்தோடு பாடினார். உடனே என் பசியும், கோபமும், ஏமாற்றமும் எப்படியோ பறந்தோடிவிட்டன. சோர்வு நீங்கி நிமிர்ந்து உட்கார்ந்தேன். வெயிலையும் பாலைவனத்தையும் மறந்து ஸஹிருதய நிலையிலே அவருடைய ஆனந்தத்திலே நானும் கரைந்துவிட்டேன். மாப்பிள்ளை V. K. C. நடராஜன் மாலை 4 மணிக்கு ஒரு தனிக் காரில் எங்களை அழைக்க வந்தபோதுதான், எனக்கு மண்ணுலக நினைவு வந்தது. வாழ்க்கையிலே மறக்கமுடியாத இந்த நிகழ்ச்சியை நினைக்கும் போதெல்லாம் கணேசனுடைய தீரமும் உறுதியும், சூழ்நிலையோடு போராடி வெற்றி பெறலாம் என்ற தன்னம்பிக்கையும் என் கண்முன் வந்து நின்று ஆர்வமூட்டும். நம் வாழ்க்கையின் சூழ்நிலை எவ்வளவு மோசமாக இருந்தாலும், மனித முயற்சியால் அதை மாற்ற முடியாது என்றாலும், அந்தச் சூழ்நிலையைப் பார்க்கும் பார்வையை நாம் மாற்றிக் கொள்ளலாமல்லவா? பார்வை மாறிவிட்டால் துன்பமும் இன்பமாக மாறிவிடுகிறது என்ற பாடத்தைத் தீரர் கணேசனுடைய வாழ்க்கையிலிருந்து நாம் உணர்ந்து பயன்பெறலாம்.

* * *

பாலைவனத்தைக்காட்டிலும் கொடியது சிறைவாசம். பூர்த்தி செய்ய முடியாத தேவைகளை மீண்டும் மீண்டும் உள்ளத்தில் கொண்டு வந்து நிறுத்தி மனிதனுடைய பேராண்மையைப் பரிஹசித்து, ஆன்ம வீரத்துக்கு உலை வைப்பது சிறைவாசம். அனிச்சமலரினும் மென்மையான பல உள்ளங்களில் நிரந்தரமான கசப்பையும், புளிப்பையும் ஏற்றிச் சீர்குலைத்திருக்கிறது அது. ஆனால், தீரன் கணேசனுடைய உள்ளத்தை அது குலைக்க முடியவில்லை. காரணம், அவருடைய இலக்கிய அறிவும், எதிர்நீச்சல் போடும் திறமையுமே. சிறை வாழ்க்கையில் அவர் சோம்பியிருந்த நேரமே கிடையாது. திறமையோடு காய்கறி திருத்தியும், பக்குவமாகச் சமையல் செய்தும், மற்றவர்களுக்குச் சுவையோடு உணவு பரிமாறியும், மற்ற நேரங்களில் சிறைச்சாலை வாசிகளுக்கு கம்பராமாயணம், திருக்குறள்

முதலிய அரிய நூல்களைப் பாடம் சொல்லிக் கொடுத்தும், இராஜாஜி போன்றவர்களிடம் அரசியல் பாடம் கற்றும்; சிறை வாழ்வின் கொடுமைகளை வென்று, உள்ளத்தை உழைப் பால் தூய்மைப்படுத்திக் கரையேறியவர் கணேசன். ஆகவேதான். சிறைச்சாலை சென்று திரும்பிய சில சுதந்திர வீரர்களிடம் காணும் உள்ளக் கசப்பையும் புளிப்பையும் அவரிடம் காணமுடியவில்லை.

* * *

1935-க்கு முன் B. Sc. வகுப்பில் Fitzgerald மொழி பெயர்த்த "ஒமர்கைய்யாம்" என்ற நூலை எனக்குப் பல்கலைக் கழகத்தில் பரிசாகக் கொடுத்தார்கள். அந்தக் காலத்தில் அவ்வளவு அழகாக அச்சிட்ட புத்தகம் பார்ப்பது அரிது. வெல்வெட் அட்டையில் தங்கப்பூ வேலைப் பாடுகள்; உள்ளே ஒவ்வொரு பக்கத்திலும் அலங் கார எழுத்துகளில் ஒரு பாடல். பாடலுக்கு ஏற்ற ஓர் அழகிய வண்ணப் படம். இந்தப் புத்தகத்தை அருமையாகப் பாதுகாத்து வைத் திருந்தேன்.

1940-இல் சா. க. கையில் அந்தப் புத்தகம் போய்ச் சேர்ந்தது. அதைப் பார்த்ததும் அவ ருடைய உள்ளம் ஆங்கிலேயருடைய இலக்கிய பக்தியை நினைத்து உருக ஆரம்பித்தது. "மகா கவி கம்பனுக்கும் இந்த உபசாரம் நாம் செய்ய வேண்டும். அவனுடைய பாடல்களை இந்தத் தோரணையில் அச்சிட்டு அவனை உரிய முறையில் மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்" என்று சொல்லி; புத்தகத்தை மாதிரிக்காக வாங்கி வைத்துக்கொண்டார். 1942, ஆகஸ்டு மாதத் தில், பிரிட்டிஷ் போலீஸார் கணேசனுடைய காரைக்குடி வீட்டைக் கொள்ளை போட்டு, அங் குள்ள பல லக்ஷம் ரூபாய் பெறுமான நகைகளை யும் பொருள்களையும் எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள். கொள்ளை போன சில நாள்களில் நண்பர் கணேசனைக் கண்டு பேசிக்கொண் டிருந்தேன். விடுதலைப் போராட்டத்திலே இந்தியத் தாய்க்குத் தான் கொடுத்த காணிக்கையென்று அந்தக் கொள்ளையைப் பெருமிதத்தோடு குறிப் பிட்டார்.

கொள்ளை போன பொருள்களோடு என் னுடைய ஒமர்கைய்யமும் போய்விட்டது என்று தெரிந்த எனக்கோ ஒரே கவலை. லக்ஷம் லக்ஷமாக இழந்துவிட்டு வெறுங் கையோடிருந்தவருடைய முகத்திலே தீரங் கலந்த அமைதி. அதைப் பார்த்ததும் என்னுடைய கவலை என் வெட்கத் திலே மூழ்கிற்று. தீரம் என்ற சொல்லுக்கு அக ராதியைப் புரட்டிப் பார்த்தால் பொருள் தெரி யாது; கணேசனுடைய வாழ்க்கையிலே விளக்கம் பெறுவது அது என்றுணர்ந்து என் மனம் பூரித்தது.

* * *

கார்காத்தார் என்ற வேளாளர் மரபைச் சேர்ந்த என் குடும்பத்தில், புரோகிதராக இருந்து மூன்று திருமணங்களை நடத்தி வைத் தவர் நண்பர் கணேசன். ஆக்குப்பிறையி லிருந்து மணவரை வரைக்கும் அவருடைய கண் காணிப்பில் எல்லாம் மிகத் திருத்தமாக நடக்கும். திருமணத்தன்று காலை யுணவுக்காக முன்னேற்பாடுகள் செய்திருந்தேன். முந்தின நாள் மதுரையில் இட்லிமாவை அரைத்து இரவு 10 மணிக்குள் திருநகர் திருமண வீட்டிற்கு மாவு வந்து சேர வேண்டியது. ஆனல், வர வேண்டிய மாவு இரவு 12 மணி வரையில் வந்து சேர வில்லை. மாவைக் கொண்டுவருவதற்காக ஒரு காரை அனுப்பினோம். காலை 2 மணி வரை காரும் வந்து சேரவில்லை. அந்தக் காரைத் தேடி 2, 3 கார்கள் அனுப்பினோம். 4 மணி வரை சென்ற கார்களும் திரும்பி வரவில்லை. "4 மணிக்கே இட்லி சுடத் தொடங்கினல்தான் வந்த விருந்தாளிகளுக்கு 6 மணிக்குள் இட்லி சுட்டு முடியும்" என்று சொல்லி, சமையற் காரர்கள் அவசரப்படுத்தினர்கள். எனக்கோ ஒன்றும் ஓடவில்லை. எப்படிச் சமாளிக்கப் போகிறோமோ என்ற கவலையில் இரவு முழுவதும் உறங்கவில்லை. வெளியில் போய்ப் பார்ப்பதும் வீட்டுக்குள் ஏமாந்து வருவதுமாயிருந்த என்னைக் கவனித்துக்கொண்டே இருந்தார் நண்பர் கணேசன். இப்படி நெருக்கடியான நேரத்தில்தான் அவருக்கு ஹாஸ்யம் பொத்துக் கொண்டு வரும், சொல்லாராய்ச்சியிலும் இறங்கி விடுவார்.

"ஐயா, கார்காத்தார் என்ற சொல்லுக்கு இன்றுதான் பொருள் புரிந்தது. காருக்காகக் காத்துக்கொண்டிருப்பவர்தானே!" என்று ஒரு ஹாஸ்ய வெடியை எறிந்தார் நண்பர். அப்போது

எனக்கேற்பட்ட குமுறலை அந்தக் கணமே காரில் வந்த இட்லி மாவு கரைத்துவிட்டது.

*　　　　*　　　　*

''திறமையென்ருல் அது கணேசனிடத்தில் தானிருக்கிறது'' என்று அடிக்கடி ரஸிகமணி டி. கே. சி. சொல்லுவார்கள். அது முற்றிலும் உண்மை. இலை நறுக்க வேண்டுமா? ஊறுகாய் போட வேண்டுமா? கோயில் கட்ட வேண்டுமா? சிற்ப சாத்திரத்தின் நுணுக்கங்கள் தெரிய வேண்டுமா? ஆகம விதிகளை அறிய வேண்டுமா? தமிழ் இலக்கணத்தின் சிறப்பியல்புகள் தெரிய வேண்டுமா? சங்க இலக்கியத்தின் நீள அகலங்களை அளக்க வேண்டுமா? கம்பராமாயணத்தில் எத்தனை உரிச்சொல் பிரயோகமாகியிருக்கிறது? எழுத்தியல்; சொல்லியல், மொழியியல், அரசியல், பொருளாதாரம், தேர்தல் சட்டம், வெட்டெழுத்து ஆராய்ச்சி; தேசவளமை — எதைப் பற்றிக் கேட்டாலும், ஆர்வத்தோடும் தெளிவோடும் அந்தந்தத் துறையிலுள்ள வல்லுநர்களும் வியக்கும் வண்ணம் விவரங்களை எடுத்துச் சொல்லும் அபாரமான கல்வியும் அறிவும் படைத்தவர் தமிழ்நாட்டிலே கணேசன் ஒருவர்தான்.

*　　　　*　　　　*

சமீபத்தில் மலேயாவில் ஒரு சிக்கலான வழக்கு ஏற்பட்டது; ஒரு கோயிலில் உள்ள சிலை மாரியம்மன் சிலையா அல்லது திரௌபதியம்மன் சிலையா என்பதைப்பற்றிய வழக்கு. வழக்கைத் தீர்த்து வைக்க முடியாமல் அங்குள்ள நீதிபதிகள் திணறினர்கள். சிறந்த இலக்கிய அறிவும், சிற்ப நூலறிவும், வரலாற்றறிவும் படைத்த ஒருவர் தான் இந்தச் சிக்கலைத் தீர்த்து வைக்க முடியும் என்றுணர்ந்து, இருசாராரும் நண்பர் கணேசனைப் பஞ்சாயத்தாராக நியமித்தார்கள். நடுவர் இதற்காகத் தமிழ்நாட்டிலிருந்து மலேயாவுக்குப் பறந்து சென்ருர். சாட்சிகளை விசாரித்துவிட்டு, சிலையின் அம்சங்களை நேரில் கண்டு, அலசி ஆராய்ந்துவிட்டு நண்பர் கணேசன் தமிழில் ஒரு தீர்ப்பு எழுதி இருக்கிருர். முப்பது ஆண்டுகள் நீதிபதியாயிருந்தவருக்குரிய தெளிவோடும், அமைதியோடும், சட்ட நுணுக்கத்தோடும், காரண காரியத் தொடர்போடும், எல்லாவற்றிற்கும் மேலாக இலக்கியப் பயிற்சியால் மட்டுமே பெறக்கூடிய பரிவோடும் எழுதப்பட்டிருக்கிறது அந்தத் தீர்ப்பு. அதோடு மட்டுமல்லாமல் தமிழில்; இப்படி ஒரு அரிய காரியத்தைச் சாதிக்க முடியும் என்பதை அத்தீர்ப்பு நிலை நாட்டுகிறது. அதைப் படித்த இருசாராரும் மனமுவந்து தீர்ப்பை ஏற்றுக்கொண்டார்கள்.

இப்படியாகத் தொட்டதையெல்லாம் திருத்தமாகச் செய்து முடிக்கும் திறம் வேறெருவரிடமும் நான் கண்டதில்லை.

*　　　　*　　　　*

கோடி கொடுத்தாலும் கணேசன் தம் கொள்கையை விட்டுக் கொடுக்க மாட்டார். தேர்தலில் அவரோடு போட்டி போட்டவர்களுக்கு இந்த அரிய உண்மை தெரிந்திருக்கும்.

நில்லாதனவற்றை நிலையின என்று நினைத்து மயங்கும் இவ்வுலகில் நண்பர் கணேசனைப் போன்றவர்கள் மிகச்சிலரே!

காந்தியமும் கணேசனும்

திரு பெ. தூரன்

காந்தியத்திலே பெரியதோர் அளவிற்குப் பற்றுதல் கொண்ட மூன்று பேர்களிடத்திலே எனக்கு மிகுந்த மரியாதை உண்டு. இந்த மரியாதையைப் பக்தி என்றுகூடச் சொல்லி விடலாம். இறைவனிடத்திலே உள்ள பக்தியை எவ்வாறு முற்றிலும் வெளியிட முடிவதில்லையோ அது போல, இந்தப் பக்தியையும் என்னல் வெளியிட முடிவதில்லை. காந்தியத்திலே ஈடு பாடுள்ள வேறு பலரும் என் உள்ளத்தைக் கவர்ந்திருக்கின்ருர்கள். அவர்களையும் நான் போற்றுகின்றேன். ஆனல், இந்த மூவரும் ஒரு தனிப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள். இந்த இனத்தைச் சேர்ந்த வேறு சிலரும் இருக்கலாம். ஆனல், அவர்களோடு நெருங்கிய தொடர்பு கொள்ள எனக்கு வாய்ப்பு ஏற்படவில்லை யாதலால் இந்த மூவரையே இங்குக் குறிப்பிடு கின்றேன்.

அண்ணச்சி என்று மரியாதையோடு நாங்கள் அழைத்து வந்த சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்கள், புகழ் உடம்பை நிறுவிவிட்டு மறைந்து விட்டார்கள். அவரைப் பார்த்த உடனேயே "காந்தியம் இதோ இருக்கின்றது" என்று எனக்குச் சொல்லத் தோன்றும். அவருடைய எளிமையான தோற்றம், அவருடைய அடக்கம்; அவருடைய கடமை உணர்ச்சி, அவருடைய பரிவு எல்லாம் எனக்கு ஒரு குறிக்கோளாக நின்று உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும்வல்லமையைப் பெற்றிருந்தன. மற்றெருவர் சூகலூர் சுப்பண்ண கவுண்டர். அவர் இலட்சக்கணக்கிலே பொருள் திரட்டி, பவானிக் கூடலில் உள்ள சங்கமேசுவரர் ஆலயத்திற்கு, கண்டோர் அதிசயக்கும்படி திருப் பணி செய்திருக்கின்ருர். இந்தத் திருப்பணி கடவுளுக்குச் செய்த தொண்டு மட்டும் அன்று. சிறிது சிறிதாக அருகிவரும் கலைஞர்களான ஆலய ஸ்தபதிகளுக்கும் சிற்பிகளுக்கும் புதிய ஊக்கத்தைத் தரும் ஒரு நல்ல பணியுமாகும். நான் போற்றுகின்ற மற்றெருவரை இன்னும் குறிப்பிடாமல் இருக்கின்றேன். அவரைப்பற்றி எழுதுவதற்காகவே இக்கட்டுரை மூக்கியமாக எழுந்தது. அவர்தாம்; காரைக்குடியிலே கம்பன் கழகத்தைத் தோற்றுவித்துக் கம்பன் பெருமையை மக்கள் அனைவரும் உணருமாறு செய்துவரும் திரு. சா. கணேசன் அவர்கள்.

இந்த மூன்று பேரும் ஒரு தனி இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று நான் குறிப்பிட்டதன் காரணத்தை இதற்குள்ளாகவே பலர் யூகித்து அறிந்துகொண்டிருக்கலாம். மூன்று பேரும் உடம்பிலே அங்கி அணியாதவர்கள். காந்தியத் தைக் கடைப்பிடிப்பதன் விளைவாகவே இவர்கள் 'வெற்றுடம்பு மேனி' விரதத்தை ஏற்றுக்கொண்ட வர்கள். வேதாரண்யம் சர்தாரும், சூகலூர் காந்தி யும் அங்கவஸ்திரத்தால் உடம்பைப் போர்த்துக் கொள்வார்கள். ஆனல், "கம்பன் புகழ் வாழ்க" என, ஒரு தனி முத்திரையோடு முழங்கும் நமது நண்பர் கணேசன் அவர்களோ; அங்கவஸ் திரத்தைப் பட்டையாக மடித்து வலத்தோளிலே போட்டுக்கொண்டு, வெயிலிலும், குளிரிலும் பனி யிலும்காட்சியளிப்பார்கள்.சாதாரணமாகஅவரைப் போன்ற திருமேனி வண்ணமுடையவர்கள் அம் மேனியை எவ்வளவு மறைக்க இயலுமோ அவ்வள வும் மறைத்துக்கொள்ளவே முயல்வார்கள். ஆனல் அவர், அப்படிச் செய்ய நினைப்பதேயில்லை. இதில் ஆச்சரியம் என்னவென்ருல், அவர் அவ்வாறு தோன்றுவதே அவருக்கு ஒரு தனிப் பொலிவைக் கொடுத்திருக்கின்றது.

நான் அவர் மேனியைக் கண்டு அதிலே ஈடு பட்டிருக்கின்றேன். கார்வண்ண மேனியனைப் புகழ்ந்து பாடிய கம்பனுக்கும் அவருக்கும் உள்ள தொடர்பு இந்த வண்ணத்தால் ஏற்பட்டதோ,

என்றுகூட நான் ஐயுறுவதுண்டு. ஆனால், வெளித்தோற்றத்தைக் கண்டு மட்டும் அவருக்கு நான் மரியாதைசெலுத்தவில்லை. மூடிமறைக்காத அவருடைய மேனி, மூடி மறைக்காத அவருடைய நல்ல உள்ளத்தைக் காட்டும் சின்னமாக இருப்பதைக்கொண்டே நான் அவரைப் போற்றுகின்றேன். வெளிப்படையாகப் பேசுவதிலே அவர் என்றும் தயக்கம் காட்டியதை நான் கண்டதில்லை. தெரியாததைத் தெரியாது என்று சொல்லுவதிலோ, தெரிந்ததைத் தெரியும் என்று எடுத்துரைப்பதிலோ அவரிடத்திலே வேறுபாடு தோன்றி நான் அறிந்ததில்லை. தெரியாது என்று சொல்லும் போது தாழ்வுணர்ச்சியோ, தெரியும் என்று சொல்லும்போது உயர்வுணர்ச்சியோ அவரிடத்தில் காணப்படாது.

காந்தியடிகளுக்குத் தெய்வத்தன்மை கற்பிக்க நான் விரும்பவில்லை. அவரிடத்திலே ஈடுபாடு கொண்ட என்னைப் போன்றவர்களுக்கு அவர் தெய்வமாகவே தோன்றினாலும், அடிகளாரை ஒரு மனிதனாகவே கொள்ளவேண்டும் என்று விரும்புகின்றவன் நான். அவரைத் தெய்வமாகச் செய்துவிட்டுப் பிறகு; "அவரைப் போல நாம் வாழ முடியுமா? ஏதோ வழிபாடு மட்டும் ஆண்டுக்கொரு தடவை செய்வோம்" என்று யாரும் முடிவு செய்துவிடக்கூடாது, என்பதே என்னுடைய ஆவலின் உட்கருத்தாகும். அவரே தமது வாழ்க்கையைப்பற்றிச் சத்திய சோதனையாக எழுதிய சரித்திரமே, அவரைப்போல் வாழ்க்கையின் நிகழ்ச்சிகளை ஆய்ந்து திருந்தி நடக்க முயன்றால் உள்ளத்தில் உயர்வடையலாம் என்பதைத் தெளிவாக நமக்கு எடுத்துக்காட்டுகின்றது. ஆனால், ஒன்று மட்டும் குறிப்பிடவிரும்புகிறேன். அவரிடத்தில் மந்திரம் போன்ற ஒரு சக்தி இருந்தது. அதைக்கொண்டு அவர் எத்தனையோ ஆயிரக்கணக்கான மக்களைத் தம்முடைய நெறிக்கு இழுத்துக் கொண்டார். "எங்கோ ஒரு மூலையில் இருந்து கொண்டு, 'உண்ணாவிரதம் இருப்பேன்' என்று காந்தி சொல்லுவார். உடனே இந்தியா முழுவதிலும் ஒரு பரபரப்பு, ஒரு புதிய உணர்ச்சி, சொல்ல முடியாத ஒரு வேகம்—இவையெல்லாம் பொங்கி எழுந்துவிடுகின்றன. இது என்ன ஆச்சரியமோ, எனக்கே புரியவில்லை" என்று ஒரு ஆங்கிலேயர் வியந்து கூறியது என் நினைவிற்கு வருகின்றது.

காந்தியடிகளின் சத்தியமும், அகிம்சை நெறியும், தூய உள்ளமும், காந்தம் போல மக்களைக் கவர்ந்தன. "குறுந்தடியால் சிரசின் மீதும் மார்பின்மீதும் அடி விழுந்தால் அந்த அடியை ஏற்றுக்கொள்ளுங்கள். ஆனால், அந்தக் குறுந்தடியைக்கூடச் சினந்த உள்ளத்தோடு நோக்காதீர்கள்" என்று அவர் சொல்லுவார். ஆயிரக்கணக்கான மக்கள் அவருடைய வாக்கை அப்படியே பின்பற்ற முந்திவருவார்கள். அடிகளார் நடத்திய சத்தியாகிரஹ அறப்போர் உலகத்தையே அதிசயத்தில் ஆழ்த்திவிட்டது. காந்தியடிகளால் கவரப்பட்டு அவர் வழியைப் பின்பற்ற முனைந்தவர்களில் திரு. சா. கணேசன் அவர்களும் ஒருவராவர். மதுக்கடை மறியலா, அந்நிய நாட்டுத் துணிக்கடை மறியலா, கண்காட்சி என்ற பெயரில் நடந்த சூதாட்டக் கடை மறியலா—இவற்றிலெல்லாம் கணேசனார், முன் நிற்பார். 1941-ஆம் ஆண்டில் நடைபெற்ற தனிப்பட்ட நபர் சத்தியாகிரஹத்தில் அவர் ஒரு தனிப்பட்ட நபராக விளங்கினார்.

1942-ஆம் ஆண்டில் ஒரு பெரிய விடுதலை இயக்கச் சூறாவளி நம் நாட்டிலே எழுந்த மறக்க வொண்ணாத ஆண்டாகும். அந்நிய ஆதிக்கத்தின் அடக்குமுறை அந்தச் சமயத்தில்தான் உச்ச நிலையை எட்டியிருந்தது ஆனால், மக்கள் தளரவில்லை. மறைந்திருந்து அந்தப் போரில் மேலும் மேலும் ஈடுபடவே பலர் மறைந்திருந்தார்கள். கன்னித் தமிழுக்கும், கம்பன் கவிதைச் சிறப்பிற்கும் உள்ளத்தைப் பறிகொடுத்த கணேசனாருக்கு, மறைந்திருந்து வாலியின்மீது அம்பெய்த இராமபிரானின் நினைவு அடிக்கடி தோன்றியிருக்கவேண்டும். அவர் 1942ஆம் ஆண்டுப் போரில் மூன்று மாதம் தலைமறைவாக இருந்து தொண்டு செய்தார். பிறகு, வெளிப் போந்து, இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை பெற்றுச் 'சிறையிருந்த செல்வனாக' வெளியேறினார்.

விடுதலை இயக்கத்திலே பங்குகொண்டதை மட்டும் நான் பெரிதாக எண்ணுவதில்லை. காந்தியடிகள் தம் வாழ்க்கையிலேயே நடந்து காட்டிய வாழ்க்கை நெறியை, ஒருவர் என்றும் தம் வாழ்கை நெறியாகக் கொள்வதையே நான் மிகப்பெரிதும் போற்றுகின்றேன். விடுதலைப் போர் வெற்றியுடன் முடிந்துவிட்டது. கணேசனார் அதில் பங்குகொண்டு தம் கடமையைச் செய்த

தோடு காந்திய நெறியிலே நின்று வாழ்க்கையை நடத்தி வருகின்றார். அவருடைய தோற்றம் அதற்கு ஒரு புறச்சான்று. தோற்றம் பல சமயங்களில் ஏமாற்றிவிடுவதுண்டு. ஆனால், கணேசனாரிடத்தில் அத்தகைய ஏமாற்றத்திற்கு இடமேயில்லை என்பதை அவரை நன்கு உணர்ந்தவர்கள் அறிவார்கள்.

காந்தியம் அரசியலுக்கு அப்பாற்பட்டது. எந்த அரசியல் கட்சியிலும் சேராமல் காந்தியத்தைப் பின்பற்றுவர்கள் மிகப்பலர் இருக்கின்றார்கள். அதேபோல, இக்கால அரசியல் கட்சிக் கொள்கைகளிலே வேறுபட்டு இருப்பவர்களும் காந்திய நெறி நிற்பவர் எத்தனையோ பேர் உண்டு. இன்றைய அரசியல் கட்சிகளுக்குள் காந்தியத்தை அடக்கிவிட முயலுபவர்கள். காந்தியத்தின் பெருமை உணராதவர்களாவார்கள் காந்தியம் மனித இனத்தின் இன்ப வாழ்விற்கு ஏற்பட்டது. ஆகவே, ஒருவர் எவ்வாறு வாழ்க்கை நடத்துகின்றார் என்பதையே நாம் நோக்க வேண்டும். அப்படி நோக்கும்போது; கணேசனார் காந்திய நெறி நின்று வாழ்க்கை நடத்துபவராக விளங்குகின்றார் என்பதைத் திண்ணமாக அறியலாம். கம்பன் கவிதைகளிற் பல இடங்களை அவர் விளக்கும்போது, உள்ளத்தில் ஊறிக் கிடக்கும் காந்தியம் மின்னலிடுவதைக் காண முடியும். காந்திய நெறியைக் கடைப்பிடிக்கும் வாழ்வினையும், கம்பன் புகழ் பாடும் நாவினையும், கல்லிலே கதை தேடுகின்ற அவரது கலைவாழ்வினையும் இனி எங்குக் காண்போமோ ?

கர்ம வீரர் கணேசனுர்

அமரர் வெ. சாமிநாத சர்மா

உலகத்தில் பெரும்பாலோர் வாழ்க்கைப் பாதையில், அறுபதாவது மைல்கல்லைக் காணு முன்பு, ஒரு திருப்பத்தைக் காண்கிருர்கள். அந்தத் திருப்பத்தில், நரையும் திரையும் அவர்களைச் சந்திக்கின்றன ; தளர்ந்து வரும் மூப்பு அவர்களைக் கைகொடுத்து வரவேற்கிறது. இந்தச் சந்திப்பும் வரவேற்பும், அவர்களுக்கு மகிழ்ச்சி தருவதில்லை ; மாருக, ஏக்கத்தையே தருகிறது. இந்த ஏக்கத்தில் அதுவரை தங்களிட மிருந்து வந்த ஊக்கம், துணிவு, செயல்திறன் ஆகியவற்றை இழந்துவிடுகிருர்கள். பசுமையா யிருந்த வாழ்க்கை, பாலைவனமாக அவர்களுக்குக் காட்சி தருகிறது.

பெரும்பாலோருக்கு இந்த அனுபவம் ஏற்படுகிறதென்ருலும், சிலர், இந்த அனுபவத்திற்குப் புறம்பானவர்களாயிருக்கிருர்கள். இவர்கள் உடல் தளர்ச்சியடைந்திருக்கலாம் ; ஆனல், உள்ளம் எப்பொழுதும் போல் இளமைத் துடிப்பில் திளைத்துக்கொண்டிருக்கிறது. இவர்களுடைய செயல்திறன் சிறிதளவும் குன்றுவதில்லை. இவர்கள் தங்களுக்கு எத்தனை வயதாயிற்று என்று கணக்குப் போட்டுக்கொண்டிருப்பதில்லை ; தாங்கள் செய்யவேண்டிய வேலை எவ்வளவு இருக்கிறது என்று கணக்கிட்டும் பார்க்கிருர்கள். இப்படிப்பட்டவர்களைக் கர்ம வீரர்கள் என்று உலகம் அழைக்கிறது.

இத்தகைய கர்மவீரர்களில் ஒருவர், என் உழுவலன்பர் சாமிநாத கணேசனுர். இவரிடத்தில் காணப்பெறும் தனித்தன்மை, உள்ளத் திண்மையைப் போல் உடல் திண்மையையும் போற்றிக் காப்பாற்றி வருவதுதான்.

நான் 1932-ஆம் ஆண்டு இரங்கூனுக்குச் சென்று தங்கத் தொடங்கிய காலத்தில் அன்பருடன் தொடர்பு ஏற்பட்டது. அப்பொழுது பார்த்த மேனியையே இப்பொழுதும் பார்க்கிறேன். அதே கனத்த குரல் ; பேச்சில் அதே அழுத்தம் ; செயலில் அதே சுறுசுறுப்பு. உடல் மேல் காணப்பெறும் ஒரு சிறு மாறுதலைத் தவிர வேறு எவ்வித மாறுதலும் இல்லை. அப்பொழுது சட்டை அணிந்துகொண்டிருந்தார் ; இப்பொழுது திறந்த தோள்மீது ஒரு கதர்த்துண்டு மட்டும் தவழ்ந்துகொண்டிருக்கிறது.

நான் இரங்கூனுக்குச் சென்ற தொடக்கத்தில், "பாரத பண்டார்" என்ற பெயரில், கதர்-சுதேசிப் பொருள்கள் விற்பனை நிலையம் ஒன்றை நடத்தி வந்தேன். அப்பொழுது அன்பருடைய லேவாதேவித் தொழில், இரங்கூனுக்குச் சில மைல்கள் தொலைவிலுள்ள "தோங்குவா" என்ற ஊரில் நடைபெற்று வந்தது. அங்கிருந்த இவருடைய ஏஜெண்ட் "சாமிநாதன் செட்டியார்" என்பவர், ஒரு நாள், சில பொருள்களை வாங்க "பாரத பண்டாரு"க்கு வந்தார். பேச்சு வாக்கில், தமது பெரிய முதலாளி சாமிநாதன் செட்டியாருடைய தெய்வ பக்தி, தர்ம சிந்தனை முதலியவைகளைப்பற்றியும், சின்ன முதலாளி (கணேசனுர்)க்குப் பொதுநலத் தொண்டில் இருக்கும் ஆர்வத்தைப்பற்றியும் உற்சாகத்துடன் கூறினர். கேட்டு மகிழ்ந்தேன். ஓரிரு நாள்களுக்குப் பிறகு, கணேசனுர் 'பாரத பண்டாரு'க்கு வந்தார். முதற்சந்திப்பிலேயே, ஏஜெண்ட் சாமிநாதன் செட்டியார் இவரைப் பற்றிச் சொன்னவையெல்லாம், எழுத்துக்கு எழுத்து சரியென்று தெரிந்துகொண்டேன். அந்த முதற்சந்திப்பிலிருந்து கணேசனுர் என் இளைய சகோதரராக என் உள்ளத்தில் திகழ்ந்து வருகிருர்.

தோங்குவாவில் தொழில் நடத்தும் பொறுப்பில் பெரும்பகுதியை ஏஜெண்டிடம்

ஒப்புவித்துவிட்டு அன்பர், இரங்கூனிலேயே பெரும்பொழுதைக் கழிப்பார். அப்பொழுது ஏறக்குறைய தினந்தோறும் எங்கள் சந்திப்பு நிகழும். பாரத பண்டாருக்குத் தமது நண்பர்களைக் கூட்டிக்கொண்டு வந்து, கதர் வாங்கச் செய்வார்; சுதேசிப் பொருள்களையே உபயோகிக்க வேண்டுமென்று வற்புறுத்தி ஒரு குட்டிப் பிரசங்கம் செய்வார். அப்பொழுது அன்பருக்கு ஏறக்குறைய இருபத்தைந்து வயது இருக்கும். ஆயினும், இவருடைய பேச்சில் ஐம்பது வயதடைந்த ஒருவருக்கு இருக்கக்கூடிய அறிவும் அனுபவமும் நிறைந்து இருந்தன. இந்த அறிவும் அனுபவமும் இவர் இரங்கூனில் தங்கியிருந்த வரை, பல துறைத் தொண்டுகளில் ஈடுபடக்கூடிய வாய்ப்பையும், கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வல்ல ஆற்றலையும் இவருக்கு அளித்தன.

இரங்கூனுக்கு அடுத்த கம்பை என்னும் பகுதியில் நடைபெற்று வந்த செட்டியார் உயர் நிலைப்பள்ளி சிறந்த முறையில் இயங்க, அப்பள்ளியின் நிருவாகியாயிருந்த சிறுவயல் மு. சோமசுந்தரம் செட்டியார் அவர்களுக்கு, அன்பர் கணேசனார் பலவகையிலும் துணைவராக இருந்தார். படிக்கும் பிள்ளைகள் படிப்பிலேயே உயர்ந்திருந்தால் மட்டும் போதாது. பண்பாட்டிலும் உயர்ந்திருக்க வேண்டுமென்பதற்காகவும், பிள்ளைகளுக்குத் தெய்வ பக்தியோடு தேசபக்தியையும் குழைத்து ஊட்டுகின்ற முறையிலும், சில திட்டங்களை வகுத்துக் கொடுத்து நடைமுறையில் கொணரச்செய்தார். பள்ளியின் தமிழாசிரியர் ஓய்வு கொண்ட நாள்களில், கொப்பனுபட்டி அ. மெ. மெய்யப்ப செட்டியார் அவர்களும் அன்பர் கணேசனுர் அவர்களும் தமிழ்ப்பாடங்களை எடுத்து நடத்தியதாக எனக்கு ஞாபகம்.

அந்தக் காலத்தில்தான் கொப்பனுபட்டியில், பெண்களுக்கென்று தனிக் கல்லூரியொன்று தம் சொந்தப் பொறுப்பில் நிறுவ வேண்டுமென்ற எண்ணம், அ.மெ.மெ.வின் உள்ளத்தில் வித்துக் கொண்டது. இந்த வித்துக்கு ஊக்கமென்னும் நீர் பாய்ச்சி, ஒரு ஸ்தாபனமாக உருக்கொள்ள அ. மெ. மெ. வுக்கு உறுதுணைவர்களாயிருந்தவர்களுள் தலையாயவர் அன்பர்கணேசனார். இவரைப் போல் மற்றொரு துணைவராயிருந்தவர், செக்காலை மெய்யப்ப செட்டியார் அவர்கள். அமெ.மெ.வுக்கு ஊக்கம் அளித்தவர்களுள் சிறியேனும் ஒருவன் என்று இங்குச் சொல்லிக்கொண்டால், அது சுய விளம்பரமாகக் கருதப்படமாட்டாது என்று நினைக்கிறேன்.

கொப்பனுபட்டியில் 'கலைமகள் கல்லூரி' என்ற பெயரால் பெண்கள் கல்லூரி நிறுவப்பட்ட பிறகு, அன்பர் கணேசனார் அங்கு அடிக்கடி சென்று, அநேக திட்டங்களை வகுத்துக் கொடுத்து உதவி செய்திருக்கிறார். இவர் செய்த உதவிகளைப்பற்றி அ.மெ.மெ. அவர்கள், என்னிடம் பல தடவை புகழ்ந்து பேசியிருக்கிறார்.

இரங்கூனில் "தன வணிகர் இளைஞர் சங்கம்" தோன்றுவதற்கும், "தன வணிகன்" என்ற வார இதழ் தொடங்குவதற்கும் அடிகோலியவர்களில் முக்கியமானவர் அன்பர் கணேசனார். 'தன வணிகன்' பத்திரிகையின் முகப்பில் பொறிக்கப்படவேண்டிய பெயர் எந்த வரி வடிவம் கொண்டிருக்க வேண்டுமென்று சைத்ரிகருக்குச் சொல்லிக் காட்டி, அநேக மாதிரிகளை வரைந்து கொடுத்தார் அன்பர். எதற்காக இதை இங்குக் குறிப்பிடுகிறேனென்றால், எந்த ஒரு சிறிய விஷயமாயிருந்தாலுஞ்சரி, அது அழகாக, ஒழுங்காக, நல்ல கருத்தை உட்கொண்டதாக அமைய வேண்டுமென்பதில் அன்பருக்கிருந்த சிரத்தையைச் சுட்டிக் காட்டுவதற்குத்தான். தனவணிகன் பத்திரிகையில் நான் சிறிது காலம் தொண்டாற்றியதை இங்கு நினைவு கொள்கிறேன்.

ஆண்டுதோறும் கம்பன் விழாவை நடத்தி வைக்கும் முக்கிய பொறுப்பை ஏற்று, விமரிசையாக நடத்தி வருவதைக்கொண்டு, அன்பருக்குக் கம்பனிடத்திலுள்ள ஆழ்ந்த பக்தி நன்கு புலனாகும்.

1942-ஆம் ஆண்டு மே மாதம் நான் பர்மாவிலிருந்து வந்த சிறிது காலத்திற்குப் பிறகு, சென்னை தியாகராயநகர் உஸ்மான் ரோட்டில் இருந்த எனது சிறு குடிலில், அன்பர் கணேசனாரும் பி. ஸ்ரீ. யும் சந்தித்தனர். எதேச்சையான சந்திப்புத்தான். இருவரும் அருமையாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். என்ன பேச்சு? கம்பனைப் பற்றித்தான். வேறு என்ன இருக்க முடியும்? அயோத்தியா காண்டம் கங்கைப்படலத்தில் முதலில் அமைந்திருக்கும் "வெய்யோன்ஒளி தன் மேனியின்" என்று தொடங்கும் செய்யுளின்

நயத்தையும், கடைசி அடியின் முதலில் வரும் "ஐயோ" என்ற சொற்பிரயோகத்தின் அழகையும், அன்பர் இருவரும் அற்புதமாக விமரிசனம் செய்தார்கள்.

கணேசனார் கம்பனுடைய சொல்லாட்சியில் ஈடுபட்டுப் பேசினார். சொல்லுக்கு அடிப்படையில் பொதிந்து கிடக்கும் கருத்தை விளக்கினார், பி. ஸ்ரீ. இருவரும் சம்பாஷணைக்கிடையிடையே கலகலத்துச் சிரித்தார்கள். இந்தச் சிரிப்பில் கணேசனாருடைய குரல் உயர்ந்திருந்தது. இந்தச் சம்பாஷணையில் நான் என் மனத்தைப் பறி கொடுத்து ரசித்துக்கொண்டிருந்தேன். அன்பர்களுக்கு இந்த நிகழ்ச்சி நினைவிருக்கிறதோ என்னவோ? எனக்கு நன்றாக நினைவிருக்கிறது.

"சென்னை மர்ரே அண்ட் கம்பெனி"யைச் சேர்ந்த எஸ். ராஜம் அவர்கள் வெளியிட்டுள்ள கம்பராமாயண மலிவுப்பதிப்பு முயற்சிக்கு அன்பர் கணேசனார், பதிப்பாசிரியக் குழுவினருள் ஒருவராயிருந்து, தமது பூரண ஒத்துழைப்பையும் கொடுத்தார். பால காண்டப் பதிப்புரையில், "திரு. சா. கணேசன் அவர்கள், சில வித்துவான்களின் உதவியுடன் பாடங்களை நிர்ணயம் செய்யும் பணியில் ஒத்துழைத்தனர்" என்று பாராட்டப்பட்டிருப்பதை இங்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அன்பரின் சமயப்பற்று, அவர் பரம்பரையோடு ஒட்டி வந்த செல்வம். 1962-ஆம் ஆண்டில் இளையாத்தங்குடியில், காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் முயற்சியாலும் முன்னிலையிலும் நடைபெற்ற வித்வத் ஸதஸ் மிகச் சிறப்பாக நடைபெற, அன்பர் கணேசனார் அயராமல் உழைத்ததை ஆஸ்திகப் பெருமக்கள் எப்பொழுதும் நினைவு கொண்டிருப்பார்கள்.

மகான் அப்பைய்ய தீட்சிதர் பரம்பரையில் வந்தவரும், சென்னைக்கடுத்த வில்லிவாக்கம் உயர்நிலைப்பள்ளியில் சமஸ்கிருத பண்டிதராகப் பணிபுரிந்து வருகிறவருமான திரு. இராமகிருஷ்ண தீட்சிதர் என்பவர், இந்த ஸதஸில் பங்கு கொண்டுவிட்டுத் திரும்பி வந்த பிறகு என்னைச் சந்தித்து, ஸதஸ் நடைபெற்ற வைபவத்தைப்பற்றி உற்சாகமாகப் பேசிக்கொண்டிருந்தார். அந்தப் பேச்சின் பெரும்பகுதி அன்பர் கணேசனாரைப்பற்றியதாகவே இருந்தது. "அன்பர் கணேசன் ஒருவர் இல்லாமற்போனால், இந்த ஸதஸ் இவ்வளவு நன்றாக நடந்திருக்க முடியாது. பம்பரம் போல் சுற்றி, எங்கும் உள்ளவராய், யாரும் கண்டு பேசக்கூடிய மாதிரி எளியவராய், தம் சொல்லாலும் செயலாலும் எல்லோர் மனத்தையும் குளிரச்செய்கிறவராய் உழைத்தார். ஆசாரியாரிடத்தில் அவருக்குள்ள பக்தியையும், ஆசாரியார் அவரிடத்தில் செலுத்திய அன்பையும் வார்த்தைகளால் சொல்லிக் காட்ட முடியாது." இராமகிருஷ்ண தீட்சிதருடைய இந்த வார்த்தைகளைக் கேட்டு நான் பூரிப்படைந்து போனேன்.

1968-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் சென்னையில், உலகத் தமிழ் மாநாட்டையொட்டி நடைபெற்ற கலைக் கண்காட்சியைக் கலைக் கண்ணோட்டத்தில் அமைத்து, அதன் வாயிலாகத் தமிழ்நாட்டின் தொன்றுதொட்டு வரும் நாகரிகத்தையும் கலாசாரத்தையும் யாவரும் அறிந்து போற்றும்படி செய்த பெருமை அன்பர் கணேசனாருடையதன்றோ? நான் ஒரு நாள் மேற்படி கலைக்கண்காட்சியைச் சென்று பார்த்த பொழுது, அதன் ஒவ்வொரு பகுதியிலும் கணேசனாருடைய கைவண்ணத்தைக் கண்டு மகிழ்ந்தேன்; பலர் மெச்சிப் பேசிக்கொண்டிருந்ததைக் காதாரக் கேட்டேன்.

தமிழ்நாட்டில் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் (கி. பி. 980—1016) செங்கோலோச்சிய ராஜராஜ சோழனுக்கு, வரலாற்று அறிஞர் பலருடைய ஒத்துழைப்பைப் பெற்றுப் பெருவிழா ஒன்றை வெற்றிகரமாக நடத்தி, அவனுடைய கலைப்பண்பையும் சமயத் தொண்டையும், தமிழராயினர் அதிசயிக்கும் வண்ணம் அறிமுகப்படுத்தியது, அன்பர் கணேசனாருடைய ஆக்கப் பணிகளில் சிறந்த ஒன்றாகும். இதன் மூலம் தமிழ்நாட்டின் வரலாற்றுக்குப் புதியதோர் அத்தியாயத்தைச் சேர்த்துவிட்டார் என்று சொல்வது மிகையாகாது.

* * *

கணேசனாரைப் பொறுத்த மட்டில், அவர் எப்பொழுதும் தம்மை ஒரு தலைவராகக் கருதிக் கொண்டதுமில்லை, சொல்லிக்கொண்டதுமில்லை. தலைமைப் பதவிக்கு எப்பொழுதும் ஏதாவதொரு தலைவலி இருந்துகொண்டிருக்கும். அந்தப்

பதவியிலிருப்பது, சறுக்கு மரத்தின்மீது நடனம் செய்கிற மாதிரி. ஒரு சாண் ஏற்றத்திற்கு முன், ஒரு முழம் இறக்கத்திற்குத் தயாராக இருக்க வேண்டும். தொண்டராயிருப்பவர்களுக்கு இந்தத் தொல்லைகள் ஏதுமில்லை. என்றென்றும் தொண்டராயிருந்துகொண்டிருக்கலாம். இந்தச் சூட்சுமத்தை நன்கு அறிந்துகொண்டிருக்கிறவர் அன்பர் கணேசனர். அவர் வீட்டு முகப்பில், சிரித்தமுகத்தோடும், கூப்பிய கரத்தோடும் கூடிய அவருடைய உருவப்படம் இருப்பது, அவர் ஒரு தொண்டர் என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறதல்லவா?

ஜைனமும் சா. கணேசனரும்

ஜீவபந்து ஸ்ரீபால்

என் அன்புக்கும் பெருமைக்கும் மதிப்புக்கும் உரிய அண்ணல் சா. கணேசனர் ஒரு சிறந்த செயல்வீரர்; உறுதியான கொள்கைப் பற்றுடையவர்; தளர்விலாத் துணிவினர்; நினைத்ததை முடிக்கும் அஞ்சா நெஞ்சம் படைத்தவர். சொல்லொழுக்கமும், நல்லொழுக்கமும், அறிவொழுக்கமும் ஒருங்கே அமைந்தவர்.

இப்பெருந்தகை காந்தியடிகளாரின் வழி நின்று அஹிம்ஸா போரில் வீரங்காட்டிச் சிறை சென்ற சீரிய தியாகி. நம் நாட்டின் சுதந்திரத்திற்குக் காரணமாயிருந்த பல தலைவர்களில் இவரும் ஒருவர். இப்பேரண்ணல் தந்நலங் கருதாது, அரசியலிலும் சரி, கட்சிகளிலும் சரி, ஆராய்ச்சித்துறையிலும் சரி, நேர்மை என்னும் சீரிய குணப்பண்பைக் கடைப்பிடித்து வந்துள்ளதைப் பலரும் அறிவர்.

அரசியல் துறையில் ஈடுபட்டிருந்தாலும் இலக்கியப் பணி, வரலாற்றுச்சேவை, சமூக சீர்திருத்தக் கொள்கை ஆகியவற்றில் அயராது உழைத்தவர். பொதுநல வாழ்க்கையே பெரிதெனக் கொண்ட இப்பெரியாரின் நேர்மையும், உண்மையும் தமிழக வரலாற்றுத்துறைக்குப் பெருந்துணையாக நிற்கின்றன. புதைபொருள் ஆராய்ச்சி, கல்வெட்டுச் செய்திகள் ஆகியவற்றில் இப்பெருந்தகையால் புதிய கண்டுபிடிப்புகள் வெளிப்பட்டன. குறிப்பாக, ஜைன சமய வரலாற்றுச் செய்திகள் பல வெளிவந்தன. தமிழகத்தில் மிகத் தொன்மை வாய்ந்த ஜைன சமய வரலாற்றுச் செய்திகளை ஆராய்ச்சியாளர்களில் பலர் வெளிக் கொணர்வதில்லை. எவ்வளவு தூரம் மறைக்க இயலுமோ அவ்வளவு தூரம் மறைத்தே வைத்துள்ளனர். ஏதோ சிலர் இங்குமங்குமாக ஆராய்ந்து வெளியிடுவர். வரலாற்றுத் துறையில் திரு. சா. கணேசனர் இறங்கியதும் பல உண்மைகள் வெளிப்பட்டன. அதுமட்டுமல்ல; ஜைனப் பெருமக்களுக்கும், இளைஞர்களுக்கும் இப்பெரியாரால் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டதெனில் மிகையாகாது.

வந்தவாசி, திருத்தக்க தேவர் இலக்கிய மன்றச் சார்பிலும், ஆரணி ஜைன சங்கச் சார்பிலும் அப்பெரியார் ஆற்றிய சொற்பொழிவுகளால் தமிழக ஜைன சமயத்தினர் கண் திறந்தனர். தமிழகத்திலுள்ள பிராமி கல்வெட்டுச் செய்திகள் பற்றியும், ஆங்காங்குள்ள ஜின மலைகளில் காணும் குகைப்பள்ளிகள் பற்றியும் அவர் விளக்கிப் பேசிய போது அறிஞர் சா. கணேசனர் அவர்களை ஜைனப் பெருமக்கள், பகவான் மகாவீரர் சமண சரண அறவுரை மண்டபத்தில் விளக்கம் கொடுத்து வந்த கணதரரின் மறு அவதாரந் தானே எனப் புகழ்ந்து போற்றினர். அத்தகு சிறந்த சொற்பொழிவை ஆற்றிய அறிஞரை இன்றும் ஜைனப் பெருமக்கள் போற்றிப் புகழ்ந்து வருகின்றனர். மேலும், அண்ணல் சா. கணேசனர் தம்முடன் வந்திருந்த புதைபொருள் ஆராய்ச்சியாளர் உயர்திரு. நாகசாமி அவர்களையும் மற்றும் பல சகாக்களையும் கொண்டு, வந்தவாசி தாலுகாவிலுள்ள சாத்தமங்களம் வெடால், தொண்டூர், அகலூர் முதலிய கிராமங்களிலுள்ள பாறைகளிலும், மலைகளிலும், கோவில்களிலுமுள்ள கல்வெட்டுச் செய்திகளை ஆராய்ந்து வந்தார். இவை யாவும் இப்பெரியாரால் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டவை.[1] இவைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போன்று உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாட்டின் போது ஒரு கலைக்காட்சி, எம் அண்ணல் சா. கணேசனர் விருப்பத்திற்கிணங்க இவர் தலைமையிலேயே ஏற்பாடாயிற்று. அத்

இச்செய்திகளைக் "கல்வெட்டுக் கருத்தரங்கு" என்னும் நூலில், அண்ணலுடன் வந்து கலந்து ஆராய்ந்த; திரு. **M. D.** சம்பத், M.A. அவர்களைஎழுதச்செய்து வெளிவரச் செய்தார்.

கல்க்காட்சி நினைவாக ஒரு மலர் வெளியிட்டார். அம்மலரில் ஜைனம் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை அனுப்புமாறு என்னைப் பணித்தார்கள். அவ்வாறே எழுதி அனுப்பினேன். அக்கட்டுரையை வரலாற்றுச் சிறப்புமிக்க கலைக்காட்சி மலரில் வெளியிட்டு ஜைனசமயத்திற்கு ஒரு நல்வாய்ப்பை அளித்துக் கௌரவித்தவர் அப்பெரியார்.

இத்தகு சிறப்புகளை ஜைன சமயத்திற்கு அளித்துள்ள அண்ணல் அவர்கள், ஒருமுறை சென்னை வந்திருந்த ஆசாரிய துளசி அடிகளாரைத் தரிசித்து, ஒரு சொற்பொழி வாற்றினர். அவ்வுரையில் தாம் கோவலன், கண்ணகி மரபில் வந்தவரென்றும், இன்னும் தம்முடைய உடலில் ஜைன இரத்தம் ஒரு துளி ஓடிக்கொண்டு இருக்கிறதென்றும் கூறி அனை வரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினர். இவரைப் பாராட்டிப் பேசிய ஆசாரிய துளசி அடிகள், "அன்பர் சா. கணேசனர் உரையால், யான் தமிழகத்தின் வரலாற்றுண்மையை அறிந்தேன். அன்று மாத்திரம் அவர் ஜைனரா? இன்றும் ஜைனத்துறவியர் போல் சட்டை ஒன்றும் தரித்துக்கொள்ளாமல் அரையில் ஓர் ஆடையும் மேலே ஒரு துண்டுமாகக் காட்சியளிப்ப தனின்றும், இன்றும் அவர் ஜைனரே" எனப் பாராட்டிப் புகழ்ந்தார்.

இந்நிகழ்ச்சிகளினின்றும் அறிஞர் சா. கணேசனர் அவர்களால் தமிழக வரலாற்றில் ஜைன சமயம் எத்தகைய சிறப்பைப் பெற்றுள்ள தென்பதை அறியலாம். இப்பெரியாரைத் தமிழக ஜைனப் பெருமக்கள் என்றும் மறவாமல் தங்கள் உள்ளத்தில் வைத்துப் போற்றக் கடமைப்பட்டுள்ளனர்.

கணேசனும் கல்வெட்டுகளும்

திரு. இரா. நாகசாமி

''திரு. சா. கணேசன் அவர்கள் கல் வெட்டுகளைப்பற்றி நன்கு ஆராய்ச்சி செய்திருக் கிறார்கள்'' என்று தமிழகம் முழுதும் எங்கு சென்றாலும் சொல்லக் கேட்டிருக்கிறேன். இது எவ்வளவு உண்மை என்று அவருடன் நெருங்கிப் பழகியவர்களுக்கு நன்கு தெரியும். சுமார் 35 ஆண்டுகளுக்கும் முன்னரே தமிழ்க் கல்வெட்டு களிலிருந்து நூற்றாண்டுவாரியாகத் தமிழ் உயி ரெழுத்துகளும், மெய்யெழுத்துகளும் அடைந்த வளர்ச்சியை வகைப்படுத்திப் பெரிய படங்களாக எழுதிவைத்திருக்கிறார்கள். காரைக்குடி, அழகப்பா புரம், மதுரை, சென்னை ஆகிய இடங்களில் அவற்றைக் காட்சியிலும் வைத்திருக்கிறார்கள். திருவெள்ளறையில் நந்திவர்மன் காலத்தில் எழுதப்பட்ட ''கண்டார் காணு உலகத்தே'' என்ற செய்யுட் கல்வெட்டையும் தாமே எழுதி வைத் திருக்கிறார்கள். அக்காலத்தில் கல்வெட்டுகளைப் பற்றி அச்சாகி வந்த எல்லா நூல்களையும் வாங்கிக் கம்பன் கழகத்திற்கு உடைமையாக்கி இருக்கிறார்கள். இப்போது பெரும் விலை கொடுத்தாலும் அந்நூல்கள் கிடைப்பது அரிது.

திரு. சா. கணேசன் அவர்களை 1962-இல் தான் முதன் முதலில் சந்தித்தேன். தென் னிந்தியத் தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தின் செயலாளனாக அப்போது பணிபுரிந்து வந்தேன். அக்கழகத்தின் வெள்ளி விழாவை ஒட்டி ஒரு கலைக்காட்சியை, சென்னை-எழும்பூர் மியூசியத் தில் ஏற்பாடு செய்திருந்தேன். திரு. சா. கணேசன் அவர்களும் அவருடன் வேறு ஒரு நண்பரும் அங்கு வந்து கலைக்காட்சியைப் பார்த் துக்கொண்டிருந்தார்கள். அப்போது நான் அங்கு சென்றேன். திரு. சா. கணேசன் அவர் களைப்பற்றிஅப்போது எனக்கு ஏதும் தெரியாது. அருகில் இருந்த அலுவலர் ஒருவர், ''இவர் சா. கணேசன் அவர்கள்-சட்ட மன்ற உறுப் பினர்'' என்று அறிமுகப்படுத்தினார். நான் 'வணக்கம்' என்றேன். அவரும் 'வணக்கம்' என்றார். பிறகு, நானும் பேசவில்லை, அவரும் பேசவில்லை. உபசாரத்திற்காகச் சிறிது அவருடன் சென்றேன். அங்கு முப்புரம் எரித்த ஒரு மூர்த்தியின் செப்பு உருவம் காட்சியில் இருந் தது. அதைக் கண்டவுடன் திரு. சா. கணேசன் அவர்கள் என்னிடம் ''சமீபத்தில் ஹிந்து பத்திரி கையில் ஒரு கட்டுரை வந்திருக்கிறது. அதில் தஞ்சையில் உள்ள ஒரு செப்பு உருவத்தைத் 'தஞ்சை அழகர்' என்று குறித்து யாரோ எழுதி யிருக்கிறார். அதைத் திரிபுராந்தக மூர்த்தி என்று குறிப்பிட்டிருக்கிறார். அது தவறு'' என்று கூறினார். ''அக்கட்டுரையை எழுதியது நான் தான்'' என்றேன். ''அப்படியா! எனக்குத் தெரி யாது. இருப்பினும் நான் உங்கள் கருத்திலிருந்து வேறுபடுகிறேன்'' என்றார். இவ்வாறுதான் எங்கள் நட்பு ஆரம்பமாகியது. அவ்வுருவைப் பற்றி இன்னும் எங்களிருவரிடையே கருத்து வேறுபாடு உண்டு. அதன்பிறகுகூட அதிகத் தொடர்பு இல்லை. 1965-இல் நான் தமிழக அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறையில் சிறப்பு அலுவல ராகப் பணி ஏற்றேன். அப்போது சென்னை ராஜாஜி மண்டபத்தில், ஒரு காட்சியை அமைத் தேன். அக்காட்சியில் தமிழகக் கோயில்கள், சிற்பங்கள், ஓவியங்கள், ஆய கலைகளைப்பற்றிய சிறந்த நிழற்படங்களைத் தயாரித்துப் பெரு மளவில் வைத்திருந்தேன். அக்காட்சி அனைவ ருடைய மனத்தையும் கவர்ந்தது. அதைக் கண்ணுறவந்த கணேசன் அவர்கள், ''உங்களிடம் பேசவேண்டியுள்ளது. வரமுடியுமா?'' என்று கேட்டார். அவரைக் காணச் சென்றேன்.

சில நாள்களுக்கு முன்னர்தான் முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்களை உதகையில் இவர் சந்தித்திருந்தார். திரு. எம். பக்தவத்சலம் அவர்களை மத்திய அரசின் கல்வெட்டுத் துறைக்கு அழைத்துச்சென்று, அங்குள்ளவைகளை விரித்துரைத்து, தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் அச்சிடப்படவேண்டிய அவ்சியத்தையும் வலியுறுத்தியிருந்தார். திரு. பக்தவத்சலம் அவர்கள், திரு. கணேசன் கூறியவற்றை முற்றிலும் ஏற்றுக்கொண்டு, சென்னைக்குத் திரும்பியதும், கல்வெட்டுகளை அச்சிடும் விஷயமாக ஒரு திட்டத்துடன் தம்மைக் காணும்படித் திரு. சா. கணேசனைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

''தமிழகக் கல்வெட்டுகளை அச்சிட ஒரு திட்டம் தயாரிக்கவேண்டும், அது விஷயமாக உங்கள் கருத்து என்ன?'' என்று கேட்கத்தான் என்னை அன்று அழைத்திருந்தார். இவர் தம்முடைய கருத்துகளைக் கூறினார். நான் எனக்குத் தெரிந்த சிலவற்றைக் கூறிவைத்தேன். சுமார் இரண்டு நாள்கள் தொடர்ந்து சிந்தித்தோம். அதன்படி இவர் ஒரு திட்டத்தைத் தயாரித்தார். அது முடிந்த இரண்டு நாள்களுக்குள்ளாகத் திரு. பக்தவத்சலம் அவர்களைச் சந்தித்து தமது திட்டத்தை அவரிடம் சமர்ப்பித்தார். முதலமைச்சர் அவர்களும் அதை ஆமோதித்து அது செயல்பட ஆவன செய்யவேண்டும் என ஆணையிட்டார். அப்போது தமிழ் வளர்ச்சித் துறைக்கு இயக்குநராக இருந்த திரு. வி. கார்த்திகேயன் அவர்களும் இதில் சிறந்த ஆர்வம் காட்டினர். ஒரு கூட்டம் கூட்டி, அதில் இதை விவாதித்தோம். முடிவில் திரு. சா. கணேசன் அவர்கள் சமர்ப்பித்த திட்டத்தை ஏற்று, உடனடியாகச் செயல்பட அரசு ஆணையிட்டது.

பத்து ஆண்டுகளில், தமிழகக் கல்வெட்டுகள் அச்சாகவேண்டும்; அதற்கான ஒரு சிறிய அச்சகம் தொல்பொருள் ஆய்வுத்துறையின்கீழ் அமைக்கப்படவேண்டும்; மாவட்டம் மாவட்டமாகக் கல்வெட்டுகளை ஆய்ந்து, எழுதி அச்சிடப்படவேண்டும் என்பதே இவர் திட்டம். பண நெருக்கடி இருந்தபோதிலும் அரசு இத்திட்டத்தை அனுமதித்து, வேண்டிய தொகையை ஒதுக்கியது.

தமிழகக் கல்வெட்டுகளை அச்சிடவேண்டும் என்று அவர் கொண்டுவந்த திட்டம் மிகவும் போற்றத்தக்கது. அதன் பயனாகத் தமிழக வரலாறு குறை நீக்கப்பட்டு நல்ல முறையில் எழுதப்படும் என்று திடமாகக் கூறலாம். தமிழக வரலாற்றை நெறிப்பட எழுத அடிகோலிய பெரியவர் என்று அவரை வருங்காலத் தமிழ்ச் சமூகம் போற்றத்தான் போகிறது. வரலாற்று ஆசிரியர்கள் அவர்களின் தொண்டை எடுத்துக் கூறாமல் இருக்கமாட்டார்கள் என்பது திண்ணம்.

கல்வெட்டுகளில் மட்டுமல்ல, அச்சிடும் துறையிலும் அவருக்குச் சிறந்த அனுபவம் உண்டு. அச்சகங்களை ஆய்ந்து, அச்சுகளைத் தேர்ந்தெடுப்பது முதலியவற்றிலும் அவர் சிறந்த அனுபவம் பெற்றவர். சாதாரணமாக ஒரு அச்சகத்தை அமைப்பது எளிதாக இருக்கலாம். ஆனால், கல்வெட்டுகளைப் பதிப்பிப்பது அவ்வளவு எளிதல்ல.

தொல்பொருள்துறையில் ஒரு அச்சகம் ஏற்பட்டபோது, திரு. சா. கணேசன் அவர்கள் தாம் பலவகைகளிலும் கருத்துரைகளை நல்கி அது அமைக்கவும் இயங்கவும் உதவினார்கள். அவர்களுடைய உதவியின்றேல் இவ்வளவு எளிதில் அச்சகம் அமைத்திருப்பது கடினம். இந்திய நாடு முழுவதிலும் பல மாநில அரசுகளிலும் தொல்பொருள் துறைகள் இருக்கின்றன. இருப்பினும், நூல்களை அச்சிடுவதற்கு எந்த மாநிலத் தொல்பொருள் துறையிடத்திலும் அச்சகம் இல்லை. ஏன், மத்திய அரசுத் தொல்பொருள் துறைக்கே இதுவரை அச்சகம் இல்லை. அது தமிழகத்திற்கே உள்ள தனிப் பெருமை. அப்பெருமைக்குக் காரணம், திரு. சா. கணேசன் அவர்களே.

ஒருமுறை நானும் திரு. சா. கணேசன் அவர்களும், கல்வெட்டுகளைப் படிக்கவேண்டும் என்று வந்தவாசிக்குச் சென்றோம். செல்லும் போது, வழியில் வல்லம், மாமண்டூர் முதலிய இடங்களில் மகேந்திரவர்மனின் கல்வெட்டு

களைப் பார்த்துக்கொண்டு சென்றோம். வல்லம் குகையில், மகேந்திரனின் கல்வெட்டில் 'ம' என்ற எழுத்து பொறிக்கப்பட்டிருந்த விதம் எங்களைப் பெரிதும் கவர்ந்தது. பண்டைய 'ம' விலிருந்து இன்றைய 'ம' எவ்வாறு தோன்றியது என்பதைப் புரிந்துகொள்வது கடினம். அங்குள்ள எழுத்துத் தான் அதை நன்கு எடுத்துக்காட்டுகிறது. அன்று நாங்கள் பெரும் மகிழ்ச்சி கொண்டோம்.

அதற்கடுத்த நாள் வந்தவாசியிலிருந்து வெடால் என்ற இடத்துக்குச் செல்லக் கிளம்பினோம். வழியில் சாத்தமங்கலம் என்ற ஓர் ஊர் வந்தது. திரு. சா. கணேசன் அவர்கள், "இது சமணத் தொடர்புடைய ஊர் போலிருக்கிறது. இங்கு ஏதாவது கல்வெட்டிருக்கிறதா என்று பார்க்கலாமே" என்றார்கள். எங்களுடன் திரு. ஸ்ரீ பாலும் வந்திருந்தார்கள். அங்குள்ளவர்களை விசாரித்தோம். அவர்களுக்கு ஏதும் தெரியவில்லை. "போய்ப் பார்த்துவிட்டுத்தான் வருவோமா?" என்று சா. கணேசன் அவர்கள் கூறவே, வண்டிகள் அப்பக்கம் திரும்பின. நெடுஞ்சாலையிலிருந்து இரண்டு கல் உள்ளே செல்லவேண்டும். பாதைகூட நல்ல பாதை அல்ல. ஊருக்குச் சென்றோம். ஏதும் கண்ணில் படவில்லை. ஊரின் பின்புறம் ஒரு பாறை. அதில் ஏறிப் பார்த்தேன். "சார், இங்கு வாருங்கள்" என்று குரல் கொடுத்தேன். "என்ன, ஏதாவது கல்வெட்டுகளைக் கண்டீர்களா?" என்று கேட்டார்கள். ஒன்பதுக்கு மேற்பட்ட பண்டைய கல்வெட்டுகள் — நந்திவர்மபல்லவன் காலம் (கி. பி. 785) முதல் முதல் இராஜராஜன் (கி. பி. 1010)காலம்வரை உள்ள கல்வெட்டுகள் ஒரு சமணப்பள்ளிக்குக் கொடுத்தவை அங்குப் பாறையில் பொறிக்கப்பட்டிருந்தன. திரு. சா. கணேசன் அவர்கள் சொல்லாவிட்டால் அங்குச் சென்றிருக்கமாட்டோம். நான் கல்வெட்டுகளை வாசித்தேன். திரு, சா. கணேசன் அவர்கள் எழுதிக்கொண்டே வந்தார். அவற்றில் பல சொற்களுக்கு எனக்குப் பொருள் விளங்கவில்லை. அவை இலக்கியங்களிலும் அதிகம் கையாளப் படுபவை அல்ல. கல்வெட்டாய்வாளர்கள் அவற்றிற்குப் பொருள் எளிதில் சொல்ல முடியாது என்பது என் நம்பிக்கை. ஆயினும், திரு. சா. கணேசன் அவர்கள், அச்சொற்களுக்கு அவ்வப்போது உடனடியாகப் பொருள் எடுத்துக்கூறி வந்தது, அங்கிருந்த அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. தமிழகக் கல்வெட்டுகளில் பொருள் தெளிவாகத் தெரியாத பகுதிகள் பலபல உள்ளன. அவற்றைத் தெளியவைக்கக் கூடிய ஒரே ஒரு அறிஞர். திரு, சா. கணேசன் அவர்கள்தாம் என்று நான் திடமாக நம்புகிறேன்.

தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுப் பாதுகாப்பு மசோதா 1966-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள், சட்டமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மிகவும் குறுகிய காலத்தில் சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் மசோதாவைப் பிரேரேபித்தார். போதிய காலம் கொடுக்கப்படாததால், இம்மசோதாவை அன்று எடுத்துக்கொள்ளவேண்டாம் என்றும், பின்னர் எடுத்துக்கொள்ளலாம் என்றும், எதிர்க்கட்சியில் இருந்த சில உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தனர். திரு. சா. கணேசன் அவர்கள் உடனே அன்று எதிர்க்கட்சித் தலைவராக விளங்கிய நாவலர் இரா. நெடுஞ்செழியனிடம் கலந்து பேசினார்கள். நாவலர் அவர்களுக்குத் தொல்பொருள் ஆய்வில் உள்ள ஈடுபாடும், வரலாற்றில் உள்ள ஆர்வமும் தமிழுலகம் நன்கு அறிந்ததே. எனவே, போதிய அவகாசம் கொடுக்கப்படாதது அவ்வளவு உகந்தது அல்ல எனினும், இம்மசோதா தமிழ் வரலாற்றுக்கு அடிகோலியதாகும். ஆனதால், இதை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளலாம் என்றும் விருப்பம் தெரிவித்தார். இம்மசோதாவுக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நேரம் சுமார் ஒருமணி நேரமாகும். முதலில் சா. கணேசன் அவர்கள்தான் எழுந்து பல்வேறு அமிசங்களைப்பற்றிப் பேசினார்கள். அவருடைய அன்றைய பேச்சு, அன்னாருக்கு வரலாற்றிலும், கல்வெட்டுகளிலும் உள்ள ஈடுபாட்டை மட்டும் அல்ல, ஆழ்ந்த அறிவையும் அனுபவத்தையும் எடுத்துக்காட்டிற்று. செஞ்சிக்கு அருகில் திருநாதர்குன்றில் உள்ள சமணர் கல்வெட்டையும், திருவாதவூர் அறச்சாலையூர் (அறச்சலூர்)

முதலிய இடங்களில் உள்ள பண்டைய கல்வெட்டு களைப்பற்றியும் எடுத்துக் கூறி, அவை இன்றுள்ள நிலையையும், அவற்றைக் காக்கவேண்டிய அவசியத்தையும் தெளிவாக எடுத்துப் பேசினார்கள். பனமலைக் குகையில் உள்ள கல்வெட்டையும், வாயலூரில் வரலாறு கூறும் பல்லவர் கல்வெட்டையும் எடுத்து விவரித்தார்கள். திருவல்லிக்கேணி பார்த்தசாரதி ஆலயத்தில் காலால் மிதிபட்டு, அடைபட்டு அழிந்துபோகும் நந்திவர்மனின் கல்வெட்டின் நிலையைக் கேட்பார் நெஞ்சுருகும்படி வரலாற்றுக்கு ஏற்பட்ட அவல நிலையையும், அது காக்கப்பட வேண்டிய அவசியத்தையும் வற்புறுத்தினார்கள். தமிழக அரசுத்தொல் பொருள் ஆய்வுத்துறையின்கீழ் கல்வெட்டு ஆய்வுப்பிரிவை விஸ்தரிக்கவேண்டியதையும், விஞ்ஞானரீதியில் ஆராய உயர்ந்த கருவிகள் பெறவேண்டிய அவசியத்தையும் எடுத்துரைத்தார். அன்று அவருடைய பேச்சு மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது. அதில் ஏற்பட்ட வேகம், ஒரு மணி நேரம் மட்டும் அனுமதிக்கப்பட்டிருந்த மசோதா ஒரு நாள் முழுவதும் சபையின் கவனத்தைக் கவர்ந்தது. இதை ஆதரித்துப் பலர் பேசினர். அன்று எதிர்க்கட்சித் தலைவராக விளங்கிய நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், மேலைநாடுகளில் இத்துறையில் காணப்படும் ஈடுபாட்டையும், நாம செய்யவேண்டிய பணிகளையும், மக்களை ஈர்க்க, நவீன முறைகளைக் கடைப்பிடிக்கவேண்டிய அவசியத்தையும் எடுத்துரைத்தோடு, இம்மசோதாவைக் கொண்டு வந்ததற்காகத் திரு. எம். பக்தவத்சலம் அவர்களைப் போற்றினர்கள். பக்தவத்சலம் அவர்கள் சபையில் எல்லோரும் போற்றிய மசோதாவை நிறைவேற்றினர்கள். அன்று அவை கலைந்து வெளியே வரும்போது “இது சா. கணேசன் மசோதா” என்று கூறியது என் காதில் வீழ்ந்தது. தமிழகத் தொல்பொருள் ஆய்வுத்துறை மசோதா நிறைவேறியது அவர்களின் அருமுயற்சியால் எனில் அது மிகையாகாது.

கணேசனும் கலைக்காட்சியும்

இரா. முத்துக்குமாரசாமி, எம். ஏ., பி.லிப்.

கலைச்செல்வர் திரு. சா. கணேசன் அவர்கள் பல்கலை வல்லுநர். சிறந்த பண்பாளர். திண்ணிய மனத்தினர். எண்ணிய எண்ணியாங்கு செய்து முடிக்கும் செயல் மறவர். தமிழ் மொழி, இலக்கியம், தமிழர் கலை, கல்வெட்டு, அரசியல் போன்ற பல துறைகளினும் பேரீடுபாடு கொண்டவர். அரிய தமிழ் நூல்களைத் தொகுத்தல், நூல்களை அழகுறப் பதிப்பித்தல், கோயில்களுக்குக் குடமுழுக்குச் செய்தல் போன்றவற்றிலும் ஆர்வம் காட்டுபவர். தம்மைப் பற்றி விளம்பரம் செய்துகொள்ளாதவர். தந்நடக்கமுடையவர். இத்தகு சிறந்த பண்புகளைக் கொண்ட இப்பெரியாரைப்பற்றி நன்கு தெரிந்து கொள்ளவேண்டுமாயின் இவருடன் நெருங்கிப் பழகினுல்தான் முடியும். அத்தகையதோர் அரிய வாய்ப்பு 1968-இல் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டையொட்டி எனக்குக் கிடைத்தது.

மிகச்சீரோடும் சிறப்போடும் நடத்தப் பெற்ற உலகத் தமிழ் மாநாட்டையொட்டிக் கலைக்காட்சி ஒன்றும் மாநாட்டு அமைப்பாளர்களால் அமைக்கப்பெற்றது. அக்கலைக்காட்சிக் குழுவின் தலைவராகத் திரு சா. கணேசன் பொறுப்பேற்றுச் சிறந்த தொண்டாற்றினர். அக்குழுவின் செயலாளர்களுள் ஒருவனுக நானும் பணியாற்றினேன். மூன்று மாதங்களுக்கு மேல் நாங்கள் ஒன்ருக இணைந்து பணியாற்றினேம். அதற்கு முன் அவர் காரைக்குடிக் கம்பன் என்றும் அரசியல் தலைவர் என்றுமே எனக்குத் தெரியும். விழா முடிந்த பின், அவர் நினைத்ததைச் செய்து முடிக்குமாற்றல் பெற்றவரென்றும், எதையுமே செம்மையாகச் செய்யும் திறன் மிக்கவர் என்பதும் புலனுயிற்று.

இக்கலைக்காட்சி அவர் தலைமையில் மிகச் சிறப்பாக அமைந்தது. பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய அறிஞர் பலரையும் உறுப்பினர்களாகக்கொண்ட கலைக்காட்சிக் குழுவிற்குத் தலைவரான திரு. கணேசன், அனைவரையும் தழுவிச்சென்று, கருத்து வேறுபாட்டுக்கு இடங்கொடாது, தம் தலைமைப் பொறுப்பை நடத்தினுர். காட்சியை அமைத்து, அதில் கடைசிவரை பணியாற்றிய தொண்டர்களையும் அவர் அரவணைத்துச் சென்ருர். மொத்தத்தில், காட்சி சிறந்து விளங்க, அவர்தம் தழுவிச் செல்லும் மனப்பான்மை மிகவும் துணை செய்தது. அதற்காக அவர் பிறர் கூறிய கருத்துகளனைத்தையும் ஏற்றுக்கொண்டாரென்று கூறமுடியாது. சில விஷயங்களில் அவர் கடைசிவரை தாம் நினைத்ததையே நிறைவேற்றினுர். குறிப்பாகச் சொல்லவேண்டுமானுல், காட்சியின் நுழைவுக் கட்டணத்தை ஒரு ரூபாயிலிருந்து எட்டணுவாகக் குறைக்கவேண்டுமென்று யார் யாரோ கூறியும் அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்.

அவர் மிகக் கண்டிப்பானவர். காட்சிக்குள் இலவசமாக யாரும் நுழைய அனுமதிக்கவில்லை. அவர்தம் மனைவியாரும் உறவினரும் வந்த பொழுதுகூட, அவர்களும் காசு கொடுத்தே நுழைவுச் சீட்டை வாங்கிச் சென்றனர். உடல் ஒருபாகமாகிய உமையம்மையாருக்கே இந்நிலையென்ருல், பிறர் நிலைபற்றிக் கேட்கவா வேண்டும்.

காட்சி சிறப்பாக அமைய மூன்று மாதங்களுக்குமேல் கண் துஞ்சாது, வேளைக்கு உணவருந்தாது, பேருண்டி அருந்த வேண்டிய நேரங்களில் சிற்றுண்டியையும், சிற்றுண்டி நேரத்தில் தேநீரையும் உண்டு, மெய்வருத்தம் பாராது உழைத்தார். ஊரைவிட்டு வந்தவர், எத்தனையோ சொந்த வேலைகளையும் உறவினர்

சடங்குகளையும் ஒதுக்கிவிட்டுக் காட்சி முடிந்த பின்னர்தான் சொந்த ஊருக்குத் திரும்பினர்.

இவ்வளவு அரும்பாடு பட்டு அவர் அமைத்த கலைக்காட்சி எவ்வளவு சிறப்பாக இருந்திருக்கும் என்பதை நேரில் கண்டவர்கள்தாம் அறிவர். மேனுட்டறிஞரான எச். ஜி. வெல்ஸ் கற்பனையில் கண்ட காலத்தேரை அவர் நேரிலேயே கொண்டு வந்துவிட்டார். கலைக்காட்சி நடைபெற்ற நாள் களில், அது நடைபெற்ற பல்கலைக் கழகத் தேர்வு மண்டபத்திற்குள் நுழைந்தவர்கள், காலத்தேரில் ஏறியவர்களுக்கு ஒப்பானவர்கள். அவர்கள், காலத்தால் முன்னுல் சென்றனர்; இடத்தால் பல விடங்களுக்குச் சென்றனர். கல்தோன்றி மண் தோன்ருக் காலத்துக் கருவிகள், முதுமக்கட் சாடி கள், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னுல் தமிழர்கள் வாழ்ந்த ஐந்திணை வாழ்க்கை முறை, சிலப்பதிகாரக் காலத்துப் பூம்புகார், சேரன் செங்குட்டுவன் வடித்த கண்ணகியின் திருவுரு, மாமல்லன் கண்ட சிற்பங்கள், இடைக்கால மன்னர்கள் கையாண்ட போர்க்கருவிகள் போன்ற தமிழனின் நீண்ட கால வரலாற்றை விளக்கும் அத்தனை பொருள்களையும் அவர் ஒரே இடத்தில் கொண்டுவந்து சேர்த்தார்.

அவ்வாறே இடத்தால் பலவிடங்களுக்கும் செல்ல முடிந்தது. ஒரே மண்டபத்தில் நாகர் கோயில், திருவண்ணுமலை, சென்னை முதலிய இடங்களிலிருந்து வந்த தேர்களும் அவற்றின் உறுப்புகளும்; மதுரை, இராமேசுவரம், அழகர் கோயில் முதலிய இடங்களிலிருந்து வந்து நவ மணி இழைத்த நகைகள் ; பிள்ளையார்பட்டி, சிக்கல், மயிலை போன்ற இடங்களிலிருந்து தருவிக்கப்பெற்ற வாகனங்கள்—இவ்வாறு இடத் தாலும் கிழக்கும் மேற்கும் தெற்கும் வடக்கு மாகச் செல்ல முடிந்தது.

கலைக்காட்சியைப் பல பகுதிகளாகப் பிரிக்கலாம். தொல்பொருள் பகுதி, ஓவியப் பகுதி, சிற்பங்கள், செப்புப் படிமங்கள் பகுதி, வரலாற்றுச் சிறப்புடைய பொருள்கள், தந்த கைவேலைப்பாடு மிக்க பொருள்கள் பகுதி, அரிய நூல்கள் பகுதி, பல்வகை இன்னிசைக் கருவிகள் பகுதி, பழங்கால நாணயங்கள், அரிய நவமணி களாலான அணிகலன்கள் பகுதி, புகைப்படங்கள் பகுதி, பூம்புகார் மாதிரி அமைப்பு, ஐந்திணை மாதிரி அமைப்பு, தேர் வாகனங்கள் பகுதி முதலிய பகுதிகள் ஒருங்கு சேர்ந்து பார்ப்பவர் கருத்தைக் கவரும் வகையில் அமைந்திருந்தன.

தொல்பொருட்பகுதியில் பழைய கற்காலம், புதிய கற்காலம் முதற்கொண்டு சங்க காலத்திற்கு முன் வரை வாழ்ந்த தமிழர்களின் வாழ்க்கை முறை விளக்கப்பட்டிருந்தது. அவர்கள் கையாண்ட பொருள்களும் அதில் இடம் பெற்றிருந்தன. அப்பகுதியில் பழமைக்கும் புதுமைக்கும் பாலமாய் இடையில் வாழ்ந்த கண்ணகி தேவியார், குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயும் குமிண் சிரிப்புமாய்ச் சிலையாய் நின்று கலைக்காட்சியை அழகு செய்து கொண்டிருந்தாள். அச்சிலைதான், அண்மையில் பூம்புகார் நகரில் அக்கற்புடைத் தெய்வத்திற்கு எடுக்கப்பட்ட கோயிலில் அமைக்கப் பட்டுள்ளது. தமிழகப் பழங்குடி மக்களின் வாழ்க்கை முறையை, அவர்களுடன் நீண்ட காலமாக நெருங்கிப் பழகி ஆராய்ந்துவரும் மானிடஇயல் அறிஞர் திரு. பிலோ இருதயநாத், அவ்விடத்தில் பழங்குடி மக்களின் பொருள் களையே கொண்டுவந்து வைத்து விளக்கினர்.

அடுத்த பகுதி ஓவியப்பகுதி. மன்ன னெருவனின் தேர், மலர்கள் நிறைந்த காட்டுப் பகுதியில் வேகமாகச் செல்கின்றது. அத்தேரின் கண் தொங்கவிடப்பட்டிருக்கும் மணிகள், தேரின் வேகத்தால் பலத்த ஒலியையெழுப்புகின்றன. அவ்வொலி கேட்டு, மலர்களில் தேனுண்ணும் வண்டினங்கள் திடுக்கிட்டுப் பறந்து திரிகின்றன. மணியொலி, அவை தேனுண்பதற்கு இடையூருக அமைந்திருப்பது கண்டு, மன்னன் இரங்கி, தேரிலுள்ள ஒவ்வொரு மணியிலும் அதன் நாவை ஒலிக்காதபடி இறுகக் கட்டி, 'மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்' ஆகின்ருன். இப்படியொரு காட்சி.

ஈங்கோய் மலைச்சரிவு. வளம் பொருந்திய பகுதி. மரத்தின்மேல் முதுமந்தியொன்று தன் குட்டிக்குத் தேனுண்ணக் கொடுக்க முயல் கின்றது. தேன் கூட்டினுள் ஒடித்த மரக்கிளையைப் பாய்ச்சுகின்றது. கூட்டிலிருந்து ஒழுகும் தேனை இளமந்தி, வாழை இலையொன்றை அதற்கு

நேராக நீட்டி ஏந்திப் பருகுகின்றது. 'கூழை முது மந்தி கோல்கொண்டு தேன்பாய ஏழை இளமந்தி' தேன் பருகும் மலைவளத்தைக் காட்டும் காட்சி மற்றொன்று.

இவ்வாருகத் தமிழர் வாழ்க்கை முறைக் காட்சிகள், வரலாற்றுக் காட்சிகள், பல்வேறு பருவ காலக் காட்சிகள் என்று, பல வண்ண வண்ண ஓவியங்கள் கண்ணைக் கவரும் வகையில், திரு. மீ. ப. சோமு அவர்களின் முயற்சியால் அமைக்கப்பெற்றிருந்தன. மணியம், மாதவன், வினு, சுபா, சித்ரலேகா, ராஜம் போன்ற தமிழ் நாட்டின் சிறந்த ஓவியர்கள் அவற்றை வரைந்திருந்தனர்.

வரலாற்றுப் பொருள்களின் பகுதியில், மூவேந்தர்கள், பிற்கால மன்னர்கள் ஆகியவர்களின் கொடிகள், இலச்சினைகள், மாலைகள், அவர்தம் போர்க்கருவிகள் முதலியவை காட்சியளித்தன. ஸ்ரீரங்கம், அழகர்கோயில் முதலிய கோயில்களிலிருந்து தருவிக்கப்பெற்ற நுண்ணிய கைவேலைப்பாடமைந்த தந்தப் பொருள்கள் பார்த்தவரை வியக்கவைத்தன.

தமிழ் மொழி, இலக்கியம், வரலாறு போன்ற துறைகளில் எழுந்த தமிழ்—ஆங்கில அரிய நூல்களும் ஓலைச்சுவடிகளும் ஒரு பகுதியில் இடம் பெற்றிருந்தன. தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்திலிருந்தும், சென்னைக் கீழ்த்திசைக் கையெழுத்து ஏட்டுச்சுவடி நூல் நிலையத்திலிருந்தும் பல வகையான ஓலைச்சுவடிகளும் கையெழுத்துப் பிரதிகளும் கொண்டுவரப்பட்டன. அடையாறு நூல் நிலையம், பிரிட்டிஷ் கௌன்சில், மறைமலையடிகள் நூல் நிலையம் போன்ற நூல் நிலையங்களிலிருந்தும் திரு. டி. என். ஜெயவேலு போன்ற தனிப்பட்டவர்களிடமிருந்தும் அரிய நூல்கள் தொகுக்கப்பெற்றுக் காட்சியில் வைக்கப் பெற்றன. இவையன்றித் தமிழக அரசுத் தமிழ் வெளியீட்டுக் கழகம், பிரெஞ்சு-இந்திய ஆராய்ச்சிக் கழகம் போன்ற பல பதிப்பகத்தார் அனுப்பிய ஆயிரத்துக்கு மேற்பட்ட புதிய வெளியீடுகள் தமிழ்நூற் பெருக்கை எடுத்துக்காட்டின.

தமிழர்கள் பல்வேறு காலங்களில் பயன் படுத்திய இசைக்கருவிகள், பேரியாழ் முதலிய ஐவகை யாழ்கள், சிற்பங்களிலிருந்து பார்த்துச் செய்யப்பட்ட இசைக்கருவிகள் முதலியவை தனிப்பகுதியாக அமைந்தன. பாட்டுப் பாடிக் கொண்டே அதன் இசைக்கேற்ப இருவர் இசைக் கோலம் வரைந்த காட்சி மேனாட்டாரையன்றி நம் நாட்டினரைக்கூட கவர்ந்தது எனலாம்.

கடைச்சங்க காலத்தைச் சார்ந்த கரிகாலனின் காசுகளும் ரோமன் காசுகளும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குள் தமிழகத்தில் பழக்கத்திலிருந்த பல்வேறு காசுகளும், பல்வேறு கோயில்களிலிருந்தும் வந்த. விலை மதிப்பிட முடியாத நகைகளும், 24 மணி நேரமும் காவல் துறையினரின் பாதுகாப்பிலேயே இருந்தன.

தமிழர்தம் கோயில் அமைப்புக் கலை படிப்படியாக எவ்வாறு வளர்ந்தது என்பதைப் புகைப்படங்கள் விளக்கின. 1800 ஆண்டுகளுக்குமுன் சீரோடும் சிறப்போடும் விளங்கிய புகார் நகரத்தின் மாதிரி அமைப்பு, அமைக்கப்பட்டிருந்த விதம் மக்களைக் கவர்ந்தது. வயது முதிர்ந்த அம்மையார் ஒருவர் காட்சியினுள் நுழைந்து, "இங்கே ஒரு மண்டபம் இருக்கிறதாமே, கண் தெரியாதவர்கள் அங்குப் போனால் கண் தெரிந்துவிடுமாமே! அது எங்கேயிருக்கிறது?'' என்று கேட்டார். 'அதைப் போன்ற மண்டபம் ஒன்றும் காட்சியில் இல்லையே. இருந்தால் கலைக்காட்சிக்குள் நுழைய முடியுமா? தமிழக மக்கள் அனைவருமே ஒன்று திரண்டு வந்துவிடமாட்டார்களா? இருபதாம் நூற்ருண்டில் இது பெரிய அதிசயமாயிற்றே!' என்று எல்லோருக்கும் தோன்றிற்று. "அப்படியொன்றும் இங்கே மண்டபம் இல்லையே, அம்மா" என்றும் சொல்லியும் அவர், "இல்லை. இங்கேயிருக்கிறதாம், பார்த்தவர்கள் சொன்னார்கள்" என்று மீண்டும் கூறினர். பல்கலைக் கழகத் தேர்வு மண்டபம், சாரணர் மண்டபம் தவிர, அங்கு வேறு மண்டபம் இல்லையே என்று குழம்பிக் கொண்டிருந்த பொழுது, பூம்புகார் மாதிரி அமைப்பில் இருந்த பாவை மண்டபத்தின் சிறு மாதிரி அமைப்பு நினைவுக்கு வந்தது. உடனே அவ்வம்மையாரை அப்பகுதிக்கு அழைத்துச் சென்றோம். இவ்வாறு அப்பூம்புகார் மாதிரி அமைப்பின் புகழ், வெகுவாகப் பரவியிருந்தது.

இவ்வளவு அரிய வகையில் அமைக்கப் பெற்ற கலைக்காட்சியை உருவாக்கத் திரு. கணேசன் எவ்வளவு பாடுபட்டார் என்பது தெரிய வேண்டாமா? தமிழர்தம் நுண்ணிய கைவேலைப் பாடுகள் மிகுந்த சிற்பங்கள், நகைகள் முதலிய வற்றைப் பல ஊர்கட்கு அவரே நேரில் சென்று தேர்ந்தெடுத்துக் கொண்டுவந்து சேர்த்தார். கோயில் நகைகளை, விலை மதிக்கவும் ஈடுசெய்யவும் முடியாத அரிய கருவூலங்களை, அவர் துணிவோடு இடம் விட்டு இடம் கொண்டுவந்ததைப் பலர் பாராட்டினர். மேனாட்டறிஞர்கள் அவற்றைக் கண்டு வியந்தனர். பிரெஞ்சு நாட்டுப் பேரறிஞர் ஒருவர், இரண்டு நாள்கள் செலவிட்டு அவற்றைப் புகைப்படமாக்கினார்.

கலைக்காட்சி அலுவலக அமைப்பு, மண்டப அலங்காரம், பற்று வரவு செய்தல்—எல்லா வற்றிலும் திரு. கணேசன், தாம் அவற்றிற்கே பிறந்தவர் என்பதுபோலச் செம்மையுறச் செய்தார். கலைக்காட்சியைக் கண்ட பல்லாயிரக் கணக்கான மக்கள், அவர்தம் தொண்டைப் பாராட்டினர். தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அறிஞர் அண்ணாதுரை முதல் பிற அமைச்சர்கள் உட்பட அனைவருமே மணிவிழாத் தலைவரின் சீரிய பணியைப் போற்றிப் பாராட்டினர். இத்தனை பெரிய கலைக் காட்சியைக் அமைக்க ஒரு மாத காலமே அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்துங்கூட, அக்குறுகிய காலத்திலே அவர் பெரிய அளவில் காட்சியை அமைத்து இக்கால மயன் ஆனார்.

காட்சியளவான் பெரியதொரு கலைக் காட்சியை அமைத்த அவர், கையளவான ஏடு ஒன்றையும் தொகுத்து, தமிழர்கட்கு என்றென்றும் பயன்படக்கூடிய நிலையான பணியையும் செய்தார். முப்பது நாற்பது பேர் கூடி, நூற்றுக் கணக்கான கருத்துகளைப் பரிமாறிக்கொண்டு, மலர் ஒன்றை வெளியிடும் நிலையில், தாம் ஒருவரேயாய் ஓரிருவரைத் துணைக்கு வைத்துக் கொண்டு அழியாத கலைக்களஞ்சியமான 'கையேடு' ஒன்றை நமக்கு அளித்தார். கட்டுரை என்ற பெயரால், ஏதோ பெயர்பெற்ற வர்களை மகிழ்விக்க எண்ணி, பயனற்ற சொல் தொகுப்பை வெளியிடாது, கையேட்டில் என்னென்ன பொருள்கள் பற்றிக் கட்டுரை இருக்கவேண்டுமென்று முதலில் பொருள்களை வரையறுத்துக்கொண்டு, அதன்பின் அவற்றைச் சுருக்கமாக விரைவாக, திறமையாக யார் எழுதித் தருவார்கள் என்று பார்த்து, அவர்களிடம் கேட்டு, மிகக்குறுகிய காலத்தில் 'கையேடு' என்ற பெயரில் கைக்குள்ளடங்கும் பக்க அளவோடு வெளியிட்ட பெருமை திரு. கணேசனையே சாரும்.

கையேட்டைத் தயாரிப்பதில்தான் எவ்வளவு கவனம்! அது இன்ன பாயின்ட் அச்சால் கோக்கப்பெற வேண்டும், இன்ன தாளில் அச்சிட வேண்டும் என்பதிலிருந்து, கடைசியில் கட்டடம் இவ்வாறு, முகப்பில் ஏடேந்திய கையின் படத்தோடு அமையவேண்டுமென்பது வரை, ஒவ்வொரு கட்டத்திலும் தனிக் கவனம் செலுத்தி, அதைப்போன்ற நூல் அதற்கு முன் வந்ததில்லை என்று கூறும் வகையில் நூல் அமைத்தார்.

இவ்வாறு அவர்தம் பண்பும் பணியும் எழுத எழுதப் பெருகும். விரிக்க விரிக்க, அகலும். நீட்ட நீட்ட, வளரும். இத்தகு சிறப்புறு பணியைச் செய்து, தமிழர்தம் மனத்தில் நீங்காத இடத்தைப் பிடித்துக்கொண்டார் கலைச்செல்வர் திரு. சா. கணேசன்.

கணேசனும் நாடகமும்

ஔவை தி. க. சண்முகம்

1937-இல் நாங்கள் காரைக்குடி ஷண்முக விலாஸ் நாடக அரங்கில் நடித்து வந்தோம். அன்று "குமாஸ்தாவின் பெண்" நாடகம். எங்கள் நாடகத்திற்கு ஆயிரக்கணக்கில் வருவாய் தந்த நகரம், காரைக்குடி. அதே நேரத்தில் ஐம்பது, அறுபது பேரைச் சபையில் வைத்துக் கொண்டு நாடகம் நடத்தும் அவலநிலை ஏற்பட்டதும் காரைக்குடியில்தான். 1937—எங்களுக்கு வருவாய் இல்லாத காலம். அன்று குமாஸ்தாவின் பெண் நாடகத்திற்கு வந்திருந்த ரசிகர்களின் எண்ணிக்கை நூற்றுக்கு மேலிராது. நாடகம் நடைபெற்றது. உள்ளூர்த் தலைவர் ஒருவர் ரசிகர்களிடையே சபையில் வீற்றிருந்தார். நாடகம் அவருக்கு நிரம்பவும் பிடித்தது. இந்த அருமையான நாடகத்திற்கு வருவாயில்லாதது அவருக்கு மிகுந்த வேதனையைத் தந்தது. நாடகத்தைப்பற்றிச் சில வார்த்தைகள் பேச விரும்பினர். நாங்களும் மகிழ்வோடு ஒப்புக் கொண்டோம்.

வழக்கமாக, நாடகம் முடிவதற்கு ஒரு காட்சி இருக்கும் நேரத்தில்தான் தலைவர்கள் பேசுவது வழக்கம். நாடகம் முடிந்த பிறகு பேசினல் சபையில் மக்கள் இருக்க மாட்டார் களென்று கருதியே இந்த ஏற்பாடு நடைமுறையில் இருந்து வந்தது. அதன்படி நாடகத்தில் கடைசி காட்சிக்குமுன் பேசுமாறு தலைவரைக் கேட்டுக்கொண்டோம். அதை அவர் விரும்பவில்லை. "நாடகம் முடிந்த பிறகு பேசுகிறேன்" என்று சொன்னர். அவருக்கு அனுபவமில்லாததால் ஏதோ புரியாமல் பேசுகிறர் என நாங்கள் எண்ணினேம். "நாடகம் முடிந்தபிறகு சபையோர் கலைந்துவிடுவார்கள்; அதனல் தாங்கள் முன்னல் பேசிவிடுவது நல்லது" என்று வற்புறுத்தினேம்.

"குமாஸ்தாவின் பெண்" நாடகத்தில் இறுதிக்காட்சி மிக முக்கியமானது. அக்காட்சியில்தான் நாடகத்தின் மிகச்சிறந்த முடிவு தெளிவாகிறது. எனவே, அக்காட்சியை முடிக்கு முன் பேசத் தலைவர் அவர்கள் ஒப்பவில்லை. "நாடகம் முடிந்த பிறகு நான் பேசப்போகிறேன் என்பதை நீங்கள் அறிவித்துவிடுங்கள். போகிறவர்கள் போகட்டும், அதைப்பற்றிக் கவலையில்லை" என்று அழுத்தமாகக் கூறிவிட்டார். அதன்படியே இறுதிக்காட்சி தொடங்குமுன் நாங்கள் மேடைக்கு வந்து, "அடுத்த காட்சியோடு நாடகம் முடிவு பெறுகிறது; முடிந்த பின் தலைவர் அவர்கள் பேசுவார்" எனப் பெயரைக் குறிப்பிட்டு அறிவித்தோம். சபையோர் கைதட்டி வரவேற்றார்கள்.

நாடகம் முடிந்தது; திரைவிடப்பட்டு மீண்டும் உயர்ந்தது. சபையோர் ஒருவர்கூட எழுந்திருக்கவில்லை; எங்களுக்கு வியப்பாக இருந்தது. தலைவர் அவர்கள் மேடைக்கு வந்தார். "குமாஸ்தாவின் பெண்" நாடகத்தின் சிறப்பினைப்பற்றி மிக அருமையாகப் பேசினர். "இப்படிப்பட்ட ஒரு சிறந்த நாடகத்திற்கு நாட்டுக்கோட்டை நகரத்தார் மிகுதியாக வாழும் காரைக்குடியில் ஆதரவு இல்லாத நிலைமை தனவணிகப் பெருமக்களுக்கு இழுக்காகும்" என இடித்துக் கூறினர். அப்போது நாங்கள் "ஸ்ரீ கிருஷ்ண லீலா" நாடகத்தைச் சிறப்பாக நடத்திக்கொண்டிருந்த காலம்.

"இந்த லீலாக்களை எல்லாம் கொஞ்ச காலம் நிறுத்தி வைத்துவிட்டு மக்களுக்கும், சமுதாயத்துக்கும் பயன்தரக்கூடிய குமாஸ்தாவின் பெண் போன்ற நாடகங்களைத் தொடர்ந்து நடத்துங்கள்" என்று எங்களுக்கு அறிவுரை கூறினர்.

ஏறத்தாழ அவருடைய இருபது நிமிடப் பேச்சை இருந்து கேட்டுவிட்டுத்தான் சபை கலைந்தது. எங்கள் வாழ்நாளில் நாடகம் முடிந்தபிறகு ஒருவர் பேசியது அதுதான் முதல் தடவை. இந்தப் பெருமைக்குரிய தலைவர்தாம் திரு. சா. கணேசன் அவர்கள்.

திரு. சா. கணேசன் அவர்கள் தமிழகத்தில் குறிப்பிடத்தக்க தலைவர்களில் ஒருவர். அரசியல் அறிவோடு இலக்கியப் பேரறிவும் படைத்தவர். மகாகவி கம்பனின் பெருவிழாவினை ஆண்டுதோறும் போற்றிக் கொண்டாடி வருபவர். எடுத்த காரியத்தைத் திறம்பெறச் செய்து முடிக்கும் ஆற்றல் வாய்ந்தவர். எந்தக் கருத்தையும் தெளிவாக, அழகாக எடுத்துரைக்கும் நாவன்மை பெற்றவர். சிற்பக்கலையிலே நுணுக்கமான ஆராய்ச்சிப் பேரறிவு படைத்தவர். இத்தனை சிறப்பும் வாய்ந்த திரு. சா. கணேசன் அவர்கள் மிக எளிமையாக, எல்லோர்க்கும் இனியவராக, கருத்து வேறுபாடு கொண்டவர்களையும் கவர்ந்திழுக்கும் பண்பாளராக இருந்து வருவது வியப்புக்குரிய ஒன்றாகும். நாடகக்கலை வளர்ச்சியிலே அவருக்குள்ள ஆர்வம் பலருக்குத் தெரிய வாய்ப்பில்லை. நான் முன்னே கூறிய நிகழ்ச்சி அவருடைய நாடக ஆர்வத்தை வெளிப்படுத்தக்கூடியது.

அரசியல்வாதி கணேசன்

திரு டி. ஆர். அருணாசலம்

1937-இல் நான் கல்லூரியை விட்டு வெளியேறிய சமயம்—காரைக்குடியில் நடந்த தமிழ் மாகாண அரசியல் மாநாட்டில் கலந்து கொண்டேன். அதில் அன்பர் கணேசனாரை அம்மாநாட்டின் பொதுச்செயலாளராக—அரசியல்வாதியாக முதன் முதலில் சந்தித்தேன். அவர்களின் துடியான பேச்சு, அயராத உழைப்பு, எதையும் பக்குவமாக, நாசூக்காகப் பணிபுரியும் தன்மை—இவ்வரிய குணங்கள் என்னைக் கவர்ந்தன. அன்று முதல் அரசியலில் தீவிரமாக ஈடுபட நேர்ந்ததனால், அவர்களை அடிக்கடி சந்திக்கவும் சேர்ந்து பணிபுரியவும் வாய்ப்புப் பெற்றேன். 1941-ஆம் ஆண்டுத் தனி நபர் போராட்டத்தில், செட்டிமார் நாட்டுக்கே, முதலாவது சத்தியாக்கிரகியாக, மகாத்மாஜியினால் தேர்ந்தெடுக்கப்பெறும் பேறு பெற்றேன். திரு. கணேசன் தளபதியாக முன்னின்று, சிறந்த முறையிலே இப்போராட்டத்தைத் தேவகோட்டையிலே தொடங்கி வைத்தார்கள். அன்றைய பிரிட்டிஷ் சர்க்காருக்கு அனுசரணையாக இருந்த சில கனவான்களின் ஆலோசனையின் பேரில், நகரத்தார் யாரையும் சிறைப்படுத்தித் தண்டிக்காத ஒரு விசித்திரமான போக்கை மாவட்டக் கலெக்டர் கடைப்பிடித்தார். இதனால் என்னைக் கைது செய்து பதினைந்து நாள் ரிமாண்ட்டுடன் விட்டுவிட்டனர். ஆனால், பின்னர் ஏனோ ஓரிரு மாதம் கடந்ததும், என்னைத் தண்டித்து, அலிப்புரம் சிறைக்கு அனுப்பி விட்டனர். ஆனால். கணேசனாரைக் கைது செய்யவே இல்லை. எனவே, அவர்கள் மகாத்மாஜியின் கட்டளைப்படி "சலோ டெல்ஹி" எனக் கூவிக்கொண்டே, காரைக்குடியிலிருந்து தன்னந்தனியாகவே யுத்த எதிர்ப்புக் கோஷங்களை முழங்கிக்கொண்டு, பாதை யாத்திரையாகப் பல கிராமம், குக்கிராமங்களைக் கடந்து, பலநூறு மைல்களைத் தாண்டி, சென்னை மாநகரை அடைந்து, கோஷமிட்டு, கைது செய்யப் பெற்று, நாலு மாதத் தண்டனை பெற்று, அலிப்புரம் சிறைக்கு வந்து சேர்ந்தார்கள். பாத யாத்திரையின்போது, வழியில் அடர்ந்த காடுகள், கரடுமுரடான பாதை, மிருகபயம், சோறு உறக்கமின்றி ஏற்பட்ட இடர்கள்—இப்படியாகச் சொல்லொணாப் பலவித இன்னல்கள் அடைந்தார்கள். அவர்களின் பிடிவாத குணம், ஏற்ற பணியில் ஓர். உறுதிப்பாடு—இவை நன்கு பிரதிபலிக்கின்றன அல்லவா இதன் மூலம் ?

சிறையில் அவர்களின் தமிழார்வம், இலக்கியச் சிந்தனை பலருக்குப் பெருவிருந்தாக அமைந்தன. குறள் வகுப்பு, கம்பராமாயண வகுப்பு மற்றும் பல இலக்கிய வகுப்புகளை நயமுடன் நடத்தி, பல அரசியல்வாதிகளுக்குத் தமிழில் பற்றும் ஆர்வமும் ஊட்டிய பெருமை இவர்களுக்கு நிறைய உண்டு. அவர்களின் தமிழ்ப்பற்று, நேர்மை, காலத்தைப் போற்றும் தன்மை, சுறுசுறுப்பு, விடாமுயற்சி, உறுதிப்பாடு ஆகிய நற்குணங்கள்—சிறையில் இருபத்து நான்கு மணி நேரமும் நெருங்கிப் பழகும் அரிய சந்தர்ப்பம் காரணமாகப் பல நூற்றுக்கணக்கான சிறை தோழர்களைக் கவர்ந்ததில் வியப்பில்லையே! அப்போதிருந்தே அவர்கள் இராஜாஜி அவர்களின் பரமானந்த சிஷ்யர்தான். அவர் வாக்கு, வேத வாக்குத்தான். ஆனால், 1942-போராட்டத்தில் மட்டும் குருவுக்கு எதிராகத் தீவிரப் போராட்டவாதியாக இறங்கிவிட்டார்கள். தேச பக்தி, காந்திபக்தி, சுதந்திர வேட்கை—இவைகளே இவர்களைப் போராட்டத்தில் தீவிர பங்கு பெறச் செய்தன எனலாம்.

"வெள்ளையனே வெளியேறு" எனக் கூறும் 1942-இல் நடந்த இறுதிப் போராட்டத்தில் இவர்கள் பங்கு சாலச் சிறந்ததாகும். இதில் இவர்கள் அடைந்த சிரமம், பெற்ற துன்பங்கள்

கூறுவதற்கே அச்சப்படத்தக்கனவாகும். இற்றையத் தலைமுறைக்கு இவை தெரியாத விஷயங்களாகும். மாறுவேடம் பூண்டு பல மாதங்கள், பல மாவட்டங்களைச் சுற்றிப் போராட்டத் தீ அணையாமல் உத்வேகமாக ஊக்குவித்த பெருமை இவர்களுக்கு உண்டு. போலீஸார் வலை போட்டுத்தான் அரித்தனர். ஆனால், பிடிபட வில்லை. அக்காலங்களில், பல முறை பல இடங்களில் சந்தித்த எனக்கு, ஊக்கமும் உற்சாகமும் அளித்தார்கள். அக்காலங்களில் இவர்கள் உண்மையில் ஊண் உறக்கமின்றி அடைந்த இன்னல்கள் எழுத்தில் அடங்கா; விவரித்து எழுதும் திறனும் எனக்கு இல்லை. தேடியலைந்தும், பற்பல முயற்சிகள் செய்தும், இவர்களைச் சிறைப்படுத்த இயலாத நிலை காரணமாகப் போலீஸாருக்கு—அதிலும் அன்றையக் கொடுங் கோலாட்சியின் போலீஸாருக்கு—ஆத்திரம் ஏற்படத்தானே செய்யும். எனவே, இவர்களின் வீட்டில் அத்துமீறி நுழைந்து, அட்டகாசம் புரிய ஆரம்பித்தனர். பல அரிய விலை உயர்ந்த பொருள்கள், மேஜை, நாற்காலி, கட்டில்கள், சுவர்க் கண்ணாடிகள் முதலியன துவம்சம் ஆக்கப் பட்டன. பல ஆயிரம் மதிப்புள்ள சாமான்கள் குண்டர்களால் சூறையாடப்பட்டன. இவர்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் எழுதுவதற்கே இயலாததொன்றாகும். இம்மாதிரி அட்டூழியங்கள் இப்பகுதியிலே எங்குமே யாருக்குமே ஏற்பட வில்லை. இருப்பினும், தொடர்ந்து மறை முகமாகவே இருந்து போராட்டத்தை மேலும் ஊக்குவித்தார்கள். இறுதியாகப் பல மாதங்களுக்குப் பிறகு, உற்ற தோழர்கள் சிறைப் படுத்தப்பட்ட பின்னர், சென்னையில் போலீஸ் கமிஷனரிடம் சரணடைந்தார்கள். அப்போதும் அதிகார வர்க்கம் இவர்களுக்குத் துன்பம் இழைக்கத் தவறவில்லை. பலவிதச் சிரமங்களை இழைத்த பின்னரே, தண்டனை கொடுத்து, அலிப் புரம் சிறைக்கு மீண்டும் அனுப்பினர். சுதந்தரத்துக்காக இவர்கள் அடைந்த சிரமங்கள் கணக்கில் அடங்கா. இப்பகுதிவாழ் மக்களிலே தியாகத்தில் மிக்கார் இவர்களைக்காட்டிலும் பிறிதொருவரைக் குறிப்பிட இயலாது.

எந்த விஷயத்தையும் சர்வ சாதாரணமாகவே நோக்கும் பண்புடையவர்கள் கணேசனார். நன்மை வரின் பரபரப்படைதலோ தீமை வரின் துக்கமடைதலோ, தேவையற்ற விஷயத்தை அறிவதில் ஆவலுறுவதோ கிஞ்சிற்றும் இல்லாத குணம் பெற்றவர்கள். தீது நேர்ந்திடில் நம்மில் பலர் செய்வதே போலத் தலையில் கையை வைத்துக்கொண்டு, முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு ஒரு மூலையில் சோர்ந்து விழுந்து கிடக்கின்ற குணம் அற்றவர்கள். கப்பலே கவிழ்ந்தாலும் கலங்காத உள்ளம் படைத்தவர்கள். உதாரணம், 1957 தேர்தல்.

அகில இந்தியாவிலேயே மிகப் பரபரப்பான தேர்தல்கள் பன்னிரண்டில் இது ஒன்று என அறிஞர்கள் கூறினர். பாரத மக்கள் ஆவலுடனும் ஆர்வத்துடனும் கவனித்த தேர்தலாகும். சுமார் ஆயிரத்து எண்ணூறு வாக்குகள் வித்தியாசத்தில் கணேசனார் தோல்வியுற்றார்கள். ஈடுபட்ட ஊழியர்களுக்குப் பேரிடி. பலர் சோர்ந்தனர். சிலர் தேம்பியழுதனர். சிலர் படுக்கையில் நோயுடன் விழுந்தனர். ஆனால் கணேசனார், தேர்தல் சமயம் இருந்ததைவிட அதிக உற்சாக முடன் ஊழியர்களுக்குத் தைரியம் அளித்து உரையாற்றிய செய்கை ஒன்றே போதும். அவர் தைரியத்துக்கு, எதையும் தாங்கும் இதயம் கொண்ட பண்பான அரசியல்வாதி கணேசனார் என்பதை அந்த தேர்தல் முடிவு தெரிந்த பின்னர் தமிழகம் அறிய முடிந்தது.

கணேசனும் கலை ஆராய்ச்சியும்

திரு. கே. ஆர். ஸ்ரீநிவாஸன்

''அட கடவுளே, எதுக்கையா இந்தத் தடபுடல்—சரியாப் போச்சு—நான் எதை அப்படிச் செய்துவிட்டேன்'' என்றே எவ்விதப் பாராட்டுக்கும் மிக்க அடக்கமுடன் பதில் அளிக்கும் இப்பெருமகன்பால் என்னை முதலில்,பல ஆண்டுகளுக்கு முன்னரே ஈர்த்தவை, அன்னாரது கசடற்ற காந்தீயமும், தீவிர தேசபக்தியும், அதில் காட்டிய தியாகமும், தீரமுமேயாம். இவ்வழியில் அவருடன் தோழமை பூண்டு, பங்கு பெற என்னால் இயலாது போயினும், அரசாங்கத்தில் பணிபுரிந்து வந்த என்னைத் தவர்களின் பெருமதிப்புக்குரிய தேசபக்தராகவே என் மனதில் திகழ்ந்து வந்தார். ஆயினும், தொல்பொருளியல் துறையில் ஆராய்ச்சிப் பணியைத் தொழிலாக மேற்கொண்ட எனக்கு, இத்துறை பற்றிய பலவற்றில் அன்னாருடன் நெருங்கிய பழக்கமும் தோழமையும், அன்னார் செயல்களிலும் கருத்தோட்டங்களிலும் ஓரளவு பங்கும் ஏற்பட்டன. இத்தொடர்பு முப்பது ஆண்டுகளாக வளர்ந்து நீடித்துள்ளது. வாழ்விலும்செயலிலும் உழன்று பல பட்டைகள் தீட்டப்பெற்று, பண்பினால் ஒப்பனிடப்பட்டு, பலச்சையல்லாது, பலகதிர் ஒளிக்கும் மணியின் மேல், எக்கோணத்திலிருந்தும் படும் ஒளிக்கதிர் பல்கிப் பெருகியே பிரதிபலிக்கும். தொல்பொருள் ஆய்வு என்ற என் கோணத்திலிருந்து பாய்ச்சப்பட்டுத் தெறித்துப் பல்வண்ணத்தில் என்பால் திரும்பிய ஒளிச்சுடர்களில் நான் கண்டுகொண்ட சில இங்கு கூறப்புகுந்தேன்.

கடவுள் காரியம், கன்னித்தமிழ், கம்பன், கவின் கலைகள், கல்வெட்டு சாஸனங்கள், கட்டடக்கலை, கோயில் திருப்பணிக்கலை ஆகிய வற்றில் ஒருங்கே ஈடுபாடும், ஆர்வமும், அறிவாற்றலும் கொண்ட இவரிடத்தில் எது மேலோங்கி நிற்பது என ஆராய்ந்து துணிவது வீண் சிரமமும் கால விரயமும் ஆம் என்பது நான் அறிந்த ஒன்றாகும். இவ்வளவும் தம் தேசீய, சமூக சேவைகளுக்கும், சொந்த அலுவல்கள் பல வற்றுக்குமிடையே இவருக்கு எப்படி இயலும் என்பதே இன்றும் என் பெருவியப்பு.

சோழ நாட்டையும் பாண்டி நாட்டையும் பிரிக்கும் எல்லையான தென்வெள்ளாற்றின் வடக்கிலும் தெற்கிலுமாகப் படர்ந்திருந்த சிறிய தனித்தமிழ் அரசான புதுக்கோட்டை இராச்சியத்தில் அவ்வரசின் தொல்பொருள் ஆய்வுத் துறை, மற்றும் அதையொட்டிய கண்காட்சிச் சாலை ஆகியவற்றின் இயக்குநர் என்ற பணியில், முப்பத்துமூன்று ஆண்டுகளுக்குமுன் சேர்ந்து பணியாற்றிவந்த காலந்தொட்டே, இத்துறை பற்றிய பலவற்றால் திரு. சா. கணேசனுடன் என் நெருங்கிய பழக்கம் தொடங்கியது. இது எனக்குப் பல விதத்தில் பயனளித்த ஒரு வாய்ப்பு. எல்லையின் இருமருங்கும் படர்ந்து சோழவள நாடும், பாண்டி நாடும் கூடும் பிரதேசமாகவும், அதுபற்றி மாறிமாறி அவ்வரசர்களின் ஆட்சிகளின்கீழ் வந்ததும், இடையிடையே பல்லவர், முத்தரையர், இருக்குவேளிர் போன்றவரின் ஆட்சிக்குட்பட்டதும், பிற்காலங்களில் பல்வேறு ஆட்சிகளின்கீழ் வந்ததுமான புதுக்கோட்டைச் சீமையும் அதன் சுற்று வளையும் இப்பல்வேறு காலத்திய நிலைகளையும் பண்புகளையும் பாங்குகளையும் எடுத்துக் காட்டும் சின்னங்களான குகைகள், கோயில்கள், சிற்பங்கள், சித்திரங்கள், கல்வெட்டுகள், செப்பேடு, சாஸனங்கள், சுவடிகள் போன்ற பலவுடைத்தாயிற்று. தமிழகத்தின் வரலாறு, சமூக வளர்ச்சி, கலை வளர்ச்சி, மொழி வளர்ச்சி, எழுத்துகளின் பரிணாமம் போன்ற ஆராய்ச்சிகளுக்குகந்த பலவும், தமிழ்நாட்டின் நடுவகத்தேயுள்ள இச்சிறு பிரதேசத்தில் 'மாதிரிகளின் களஞ்சியம்' அல்லது 'மியூசியம்

போன்று சேர்த்துவைக்கப்பட்டது போல் தோன்றும். இத்துறைகளில் அதிகம் அலையாது, ஆராய்ச்சி வேண்டுவோருக்கு இது ஒரு சிறந்த வேட்புலம் ஆகும்.

திரைகடலோடியும் திரவியம் தேடிச்சென்ற மரபில் வந்தவரான திரு. கணேசனுக்கு இப்படிப் பட்ட செல்வங்களின்மேல் நாட்டம் ஏற்படின், மிக அண்மையிலுள்ள இவையாவும் எவ்வாறு அவர் கண்ணிலும் கருத்திலும் சிக்காமற்போகும். இப் பகுதியிலுள்ள பலவகைக் கோயில்களையும் அவற்றின் இடிபாடுகளையும், சிற்ப, பணி விசேடங்களையும், இவற்றினின்றும், ஏனைய விடங் களினின்றும் படியெடுத்துப் பதிப்பித்துப் பிரசுர மான கல்வெட்டுகளையும் படித்தறிந்து, இவ் விடங்களைத் தேடிச் சென்று கண்டு ஆராய்ந் தறியும் ஆவலே இவரை இத்துறையில் ஊக்கு வித்தது. மேலும், இவர் தந்தையார் காலத்திலும், இவர் இளமைக் காலத்திலும், கைதேர்ந்தவரும் சாஸ்திர விற்பன்னர்களுமான ஸ்தபதிகள், சிற்பக் கலைஞர் ஆகம பண்டிதர்கள் ஆகியோரின் தொடர்புகொண்டு ஆற்றிய பல கோயில் திருப் பணிகளாலும், பிரதிஷ்டைகளாலும், கும்பாபி ஷேகங்களாலும், கோயில் நிர்மாண, நிர்வாகக் கலைகளான வாஸ்து, சில்ப, ஆகம சாத்திரங்கள், பிரதிமாலக்ஷணம், வடமொழி, மற்றும் இவை போன்றவற்றிற்குகந்த பல துறைகளில்நேரிடைப் பயிற்சியும், விஷயஞானமும் தாமே ஏற்பட்டன. ஆக, இத்துறைகள்பற்றிக் கற்கவும், ஆராயவும் எனப் பல அரிய நூல்களைத் தேடிச்சேர்க்கவும் தலைப்பட்டார். நாளடைவில் அது ஓர் அருமை யானது நூல் நிலையமாகப் பெருகியுள்ளது. புதுக்கோட்டையில் நானிருந்த பதினேராண்டு களில், அவ்வரசின் கீழ் கல்வித்துறையில் ஆசிரியராகவும் இயக்குநராகவும் பணியாற்றி வந்த என் தமையனார் திரு. கே. ஆர். வெங்கட ராமன், இந்தியக் கலாசாரத்திலும், தொல் பொருளியலிலும் உண்மையான ஆர்வங்கொண் டிருந்தவரும், சமஸ்தான அரசு நிர்வாகியுமா யிருந்த ஸர் அலெக்சாண்டர் டாட்டன் ஹாமின் விருப்பத்திற்கிணங்கி, அச்சீமையின் பண்டை வரலாற்றையும் தொல்பொருட் சின்னங்களையும் கல்வெட்டு சாஸனங்களையும், அரசு மரபு அரசியல் முறைகளையும் ஆராய்ந்து புத்தகங் களாக வெளியிடும் பணியில் ஈடுபட்டிருந்தார். ஆக, எங்கள் மூவருக்கும் இருந்த இந்தப் பொது வான ஈடுபாடு பற்றி ஒருமைப்பாடும் ஏற்பட்டது. சகோதரர்களான எங்கள் இருவருடன் திரு. கணேசனின் சந்திப்பும் சர்ச்சைகளும் புதுக் கோட்டையிலும் காரைக்குடியிலும் அடிக்கடி நிகழ்வதுண்டு. நாங்கள் ஒருங்கே கூடிய சில சமயங்களில் பல கோயில்களையும் பண்டைச் சின்னங்களையும், சேர்ந்து சென்று பார்த் தறிந்ததும் உண்டு.

இதன் விளைவாக, சித்தன்னவாசலில், ஏழடிப் பட்டம் என வழங்கப்படும் பாழியான 'பாயற் பள்ளியில்' காணப்பட்ட பிராமி லிபி (கி. மு. இரண்டாம் மூன்றும் நூற்றாண்டுகளுக்குரியது), பண்டைத் தமிழ் லிபிக் கல்வெட்டுகள் முதலாகப் பல்லவர், பாண்டியர், சோழர், முத்தரையர், இருக்கு வேளிர், போசளர், மதுரைசூரத்தான்கள் (சுல்தான்கள்) விஜயநகர, நாயக்க மன்னர்கள், ஆங்கிலக் கிழக்கிந்தியக் கும்பேனி, தொண்டை மான்கள், சேதுபதிகள் காலம் வரை வந்துள்ள பல கல்வெட்டுகள் ஈருகப் படித்தறிந்து விளக்கம் கூறும் ஆற்றலும் இவர் பெற்ருர். இவையாவும் தம் தனிப்பட்ட முயற்சியாலேயே என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. பல ஆண்டுகளுக்கு முன் வானொலி மூலம் மடத்துக் கோவிலிலுள்ள ஒரு பழைய தமிழ்ச்செய்யுள் கல்வெட்டைப்பற்றி மிக அருமையாக விளக்கியதும், சென்னையில் கூடிய கல்வெட்டுக் கருத்தரங்கில் பெரிய பங்குகொண்டு காட்டிய இவர் புலமையும் இதற்குத் சான்று பகரும்.

சித்தன்னவாசல், மற்றும் திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி, கோயம் புத்தூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் ஏனைய மலைமுழைஞ்சுகளில் காணப்பட்ட பிராமி லிபிக் கல்வெட்டுகளின் மொழி தமிழேயாகும் என்ற என் கருத்தை அக்காலத்திலேயே ஏற்றுக் கொண்டவர்களில் திரு. கணேசனும் ஒருவராவார். பின்னர், அரிக்கமேடு, உறையூர் முதலிய இடங்களின் அகழ்வாராய்ச்சியின் விளைவாகக் கிடைத்தவையும் பிராமிலிபியில் கீறியெழுதப்பட்ட சொற்கள் கொண்டனவையுமான மட்கலவோடு கள் இதையே நிரூபித்தன. இத்துணிவினுலேயே 'கலைக்களஞ்சியம்' தொகுப்பில் 'அரிக்கமேடு' என்ற தலைப்பின்கீழ் இக்கருத்தைச் சில ஆண்டு களுக்குமுன் வெளியிட்டுமுள்ளேன். இடைக்

காலத்தில் விட்டுப்போயிருந்த இப்பிராமி எழுத்துச் சொற்களைப்பற்றிய ஆராய்ச்சி, அண்மையில் அரச்சலூர் போன்றவிடங்களிலும் காணப் பட்டவை கொண்டு மீண்டும் ஆராய்ச்சியாளர் களின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்துள்ளது. இதில் திரு. சா. கணேசனும், திரு. மகா தேவனும், திரு. நாகசாமி மற்றும் பலரும் ஈடு பட்டுள்ளனர் என்பது சென்னையில் நடந்த தமிழ் மாநாட்டில் கலந்துகொண்டவர் அறிவர்.

தமிழ்க் கல்வெட்டு தாமிர சாஸனங்களில் காணப்பட்ட செய்யுட்பகுதிகள் அந்நாள் முதலே திரு. கணேசன் கவனத்தையும் ஆராய்ச்சியையும் கவர்ந்தவை. பெரும்பாலும் உரைநடையிலும் பொருந்திய வக்கணைச் சொற்றொடர்களிலும், நெட்டெழுத்திலும் அமையப்பெற்று, எழுதிப் பொறிக்கப்பட்ட இக்கல்வெட்டுகளும், பட்டயங் களும், சுவடிகளும் அவ்வக் காலங்களுக்குரிய சொல்வழக்கு, வழக்கொழிவு, பொருள் மாற்றம், மாற்றுச் சொற்கள், தொகுப்பியல், பரிபாஷை, அல்லது கலைச்சொற்கள், திசைச்சொற்கள், இலக்க வடிவங்கள் போன்ற மொழியாராய்ச்சிக் குகந்த பல விசேடங்கள் நிறைந்திருப்பது கண்டு, இவற்றையும் ஊன்றிப் படித்தறிய ஆர்வமும் கொண்டார். அரியதும் பயனூட்டுவதுமான இத் துறையில் இறங்கி ஈடுபாடு காட்டும் நம் தமிழ் ஆராய்ச்சியாளரின் எண்ணிக்கைக் குறைவைக் கண்டு வருந்துபவரும் இவர். இலக்கணக் கட்டுக் கோப்புக்குள் யாத்ததான இலக்கியத்தமிழ் ஆராய்ச்சியுடன் இத்தகைய அன்றாடப் பழகு தமிழ் ஆராய்ச்சி, நாம் இடைக்காலத்தில் மறந்து, இப்பொழுது வேண்டிநிற்கும் பொருட் செறிவுள்ள நல்ல தமிழ்க் கலைச்சொற்களை மீண்டும் புழக்கத்தில் கொண்டுவர இயலும் என்று நம்பியவர்களில் இவர் ஒருவர்.

'யாதும் ஊரே' என்பதற்கிணங்க தென்னிந்தியாவின் பல பகுதிகளிலும் தோன்றி, பன்மொழிகளான தமிழ், தெலுங்கு, கன்னடம் போன்ற தாய்மொழி படைத்தவர்களான விளைஞரும், வணிகரும் ஒருங்கு கூடி இணைந்து, நாட்டின் எண்டிசையிலும், அப்பாலும் கடல் கடந்து சென்று வாணிபம் நடாத்திய, 'சித்திர மேழி நாட்டார்', 'நானாதேசியத்திசை ஆயிரத்து ஐஞ்நூற்றுவர்' என்ற வாணிபக் குழாம் (Corperate........Merchant Guild) பல கிளை களுடன் இயங்கி வந்த வரலாற்றுச் செய்தியை இவர்களைப்பற்றிய பல மொழிகளிலும் உள்ள கல்வெட்டுகளினின்றும் அறிவோம். கிறிஸ்து அப்தத் தொடக்கமான நூற்றுண்டுகளில் இவர் களின் தாயகம் தக்காணத்தில் கன்னட நாட்டின் உள்ள அய்ஹொளே (அய்யம்பொழில்) யினின்றும் பரவி, தென்னாடு முழுவதும் தம் பண்டங்களுடனும், ஊர்திகளுடனும், அவற்றைக் காக்கும் படைகளுடன் சென்று, ஆங்காங்கே தம் வணிக நிலையங்கள், பண்டக சாலைகளான தாவணங்கள் அமைத்து, அவ்விடங்களிலுள்ள பொருள் தானிய விளைஞர்களான சித்திரமேழி நாட்டார் இணைப்புகளுடன் ஒன்றி, அவ்வவ்விடங் களுக்கேற்றவாறு, அவ்வூர்களை அய்யம்பொழில், நகரம், மணிக்கிராமம், பட்டினம், வீர பட்டினம், நியமம் (நேமம்), பெருந்தெரு என்ற வகைப் பெயர்களை இட்டமைத்தார்கள். இவ்வணிக மக்கள் பொருள்கள் கொண்டும் கொடுத்தும், பொதிகளை வேற்றிடங்களுக்கு அனுப்பியும், பெற்றும், தம் தொழில் நடத்துவதுடன், அரசாணை (Charter) பெற்று, கோட்டை காவல் அமைத்து, அந்நிலையங்களின் ஆட்சி நிர்வாகத் தையும் ஏற்று நடத்தினர். அரசு மாறினும், ஆட்சி முறை மாறாது நிர்வகித்து பல சமயங் களையும் போற்றி வளர்த்து, கோயில்களும், பள்ளிகளும் மடாலயங்களும் அறச்சாலைகளும், மற்றும் பலவும் தாம் ஈட்டிய பொருள் கொண்டு பொதுப்பணியாக அமைத்து நாட்டை வளப் படுத்தினர். இக்குழாத்தின் ஒரு பிரிவினரே இன்றும் நாட்டுக்கோட்டை நகரத்தார் எனப் படுவர். எனின், தென்வெள்ளாற்றின் தென் கரையொட்டிய பகுதியில், மேற்சொன்ன ஐஞ்நூற்றுவர் மரபில் வந்து, நகரங்கள், நியமங் கள், பட்டினங்கள் போன்ற வணிகயிருக்கைகள் கண்டமைக்குச் சான்றுகள் பல உள. இப்பகுதி யில்தான் ஐஞ்நூற்றுவரைக் குறிக்கும் பத்தாம் நூற்றுண்டுக்குரிய முதல் தமிழ்க் கல்வெட்டு முன சந்தை (கல்வெட்டில் முனியந்தை) என்னுமிடத்தில் காணப்பட்டது. பின்னர் நார்த்த மலை (நகரத்தார் மலை) என்ற நகரத்திலுள்ள கல் வெட்டுகளும், பிரான் மலையில் இன்னும் விரிவான செய்திகள் கூறும் கல்வெட்டும், மற்றும் இது போன்று தென்னாட்டிலும், வடக்கே விசாகப்

பட்டினம் வரை பல்விடங்களிலும் இவர் பற்றிய தமிழ்க் கல்வெட்டுகளும், ஏன் இவர் சென்றடைந்த கடல் கடந்த கீழை நாடுகளிலும் காணப்படுகின்றன. மேலும் இக்காலத்திய நகரத்தார் குலக் கோயில்களாகக் கொண்டாடுபவை ஐந்தும் இப்பகுதியில்தான் உள்ளன. இவை திருக்களாக்குடி, ஐஞ்னூற்றீசுவரம் முதலானவை. என் தமையனுருடன் ஐஞ்னூற்றுவரைப்பற்றிய கல்வெட்டுகளிலிருந்து அவர்களின் வரலாற்றை ஆராய்ந்துகொண்டிருக்கும் பொழுது, 'ஐஞ்னூற்றீசுவரர் துணை' என்று தலைப்பிடப்பட்ட திருமண அழைப்பிதழ் இந்நாட்டிலிருந்து ஒன்று எங்களுக்கு வந்தது. அது தொடர்ந்து, திரு. சா. கணேசனுடன் இதுபற்றிப் பேசிய பொழுது, இக்கிளைக் கோயில்களைப்பற்றியும், காரைக்குடியடுத்த ஐஞ்னூற்றீச்வரம் பற்றியும் எங்களுக்குத் தெளிவுபடுத்தினர். அவரும் இவ்விஷயம் பற்றி ஆராயலானர். அவர் குல முன்னேர் சோழவரசன் நடத்தையாற் சினங்கொண்டோ, அல்லது மற்றெரு கர்ணபரம்பரைக் கூற்றின்படி பாண்டிய மன்னன் அழைப்பிற்கிணங்கியோ, தம் பண்டைப் பதியான பூம்புகாரினின்றும் குடி பெயர்ந்து, வெள்ளாற்றின் தென்பகுதிப் பாண்டி நாட்டெல்லையில் குடியேறினர் என்பது வழக்காறு. முனியந்தைச் சான்றின்படி இது பத்தாம் நூற்றுண்டிற்குச் சற்று முற்பட்டது என்ற செய்தி ஐயத்துக்கிடமின்றிக் கிடைக்கலாயிற்று. இப் பகுதியிலுள்ள ஐஞ்னூற்றீச்வரமும், இதற்குப்பின் வந்ததாகும். மற்றும் இவர்கள் குடியேறிய இச் செட்டிநாட்டுப் பகுதியில் தம் பல்வேறு தாவணங்களான நிலையங்கள் தோன்றின. உதாரணங்கள் சில கூறப் புகின், கள்ளம்பட்டி ஒரு அய்யம் பொழிலாக இருந்தது. இச்செய்தி அங்குள்ள கல்வெட்டொன்றில் அய்யம் பொழில் நாச்சியார் குறிக்கப்படுவது பற்றியாகும். அய்யம் பொழில் என்பது அய்யை (தேவி-விந்தியா வாஸினீ)= பொழில் (காவு) எனப் பிரியும். தெலுங்கு நாட்டு வணிகரும், கன்னட தேசத்து வணிகரும் கன்னிகாபரமேச்வரியைச் சிறப்பாகக் கொண்டாடுவது ஈண்டு கவனிக்கத்தக்கது. மிழலைக் கூற்றத்து வாளர மாணிக்கம் (மழவர் மாணிக்கம்) என்ற ஊரிலுள்ள நானுதேசி நாச்சியாரை மற்றெரு கல்வெட்டும் குறிக்கும். நார்த்தா மலை (நகரத்தார் மலை) ஒரு நகரமாகவும் கொடும்பாளூர் ஒரு மணிக்கிராமமாகவும், குன்றக்குடிக்கடுத்துள்ள நேமம் ஒரு நியமமாகவும் காளையார் கோயில் காளையர் காலப் பெருந்தெருவாகவும், இது போன்று பில்ல மங்கலம்—அளகாபுரி அரச நாராயணப் பெருந்தெருவாகவும், பேரையூர் குலசேகரப் பெருந்தெருவாகவும், சுந்தரம் தேசியுகந்த பட்டினமாகவும் விளங்கியது கல்வெட்டுகளினின்றும் அறிந்த செய்தி.

மற்றும், தனக்குகந்த கணபதிக் கடவுளின் மூர்த்தம் தமிழ்நாட்டில் முதலாவதாகத் தம் பாண்டி நாட்டிலே காணப்படுவது பற்றிப் பெருமைப்படுபவர் திரு. கணேசன். தேவார காலத்துக்கு முன் போந்த சங்க நூல்களில் வழங்கப்பெருத தெய்வங்களில் கணபதியும் ஒன்றாகும். ஆதியிலே, ஆரும் நூற்றுண்டு தொடங்கி, தக்காண சளுக்கியர் (வாதாபி சளுக்கியர்) சிற்பங்களில் கணபதி மூர்த்தம் காணப்படுவதும், சமகாலத்தில் காஞ்சி பல்லவர் சிற்பங்களிற் காணப்படாததும், ஆயினும், இடையிலிருந்த கங்க நாட்டிலும் (மைசூர்) தென்பாண்டி நாட்டுக் குகைக் கோயில்களிலும், அதையடுத்து வெள்ளாற்றுக்கு வடக்கில் உள்ள பகுதியில் முத்தரையர்களின் குகைக் கோயில்களிலுமே காணப்படுவதும் பற்றி இவ்வழிபாடு, தமிழ்நாட்டில் தெற்கே பாண்டி நாட்டிற்கு, கங்கநாடு வழி வந்து, பின்னரே அக் காலத்து வடதமிழ்ப் பகுதியான பல்லவர் நாட்டைச் சென்றடைந்தது என்பதும் புலப்படும். பல்லவரது இறுதிக்காலத்தில், அதாவது, கி. பி. எட்டாம் நூற்றுண்டுத் தொடக்கத்தில் இராஜசிம்ம பல்லவனல் கட்டப்பட்ட காஞ்சி கைலாஸ நாதர் கோவிலில்தான் இவ்வழிபாடுடைய மூர்த்தம் முதலாவதாகத் தொண்டைநாட்டுக் கோவில் ஒன்றில் அவ்வரசனல் சேர்க்கப்பட்டது காணலாம். பிள்ளையார்பட்டி, திருக்களாக்குடி, குன்றக்குடி, நச்சாந்து பட்டியடுத்த மலையக் கோவில், தேவர்மலை, இன்னும் தெற்கே திரு நெல்வேலி மாவட்டத்தில் திருமலாபுரம், வீரசிகாமணி, வெள்ளாற்றின் வடகரை, திருக் கோகர்ணம், குடுமியான்மலை, குன்றுண்டார் கோவில், மலையடிப்பட்டி, திருச்சிராப்பள்ளி உச்சிப்பிள்ளையார் மலையின் அடிவாரத்திலுள்ள குகைக்கோயில் ஆகிய குகைக் கோயில்களில் இம்மூர்த்தம் செதுக்கப்பட்டுள்ளது. இச்சிற்பச்

சான்றுகளின் வாயிலாகக் கணேசர் மரபு வல்லபர்களின் வாதாபியினின்று கங்கநாடுவழித் தமிழ்க் கன்னி நாடு புகுந்து, பொன்னி நாடு கடந்து, தொண்டை நாடு இருந்து அண்டைக் கீழ்க்கடல் நாடுகளுக்குப் பரவியது என்பது விளக்கம். இத் துறையில் தம் இஷ்ட தெய்வமான கணேசர் இருக்கும், தம் பிள்ளையார்பட்டிக் கோவிலைப் பற்றித் திரு. கணேசனார் எழுதியுள்ள நூலைக் குறிப்பிடலாம்.

இத்தகைய ஆராய்ச்சிப் பண்பு கொண்ட திரு. கணேசனின் செயலாற்றல்களும் குறைவானவையல்ல. அவர் ஆண்டுதோறும் சிறப்புடன் எடுக்கும் கம்பன் விழா ஒன்றே இதற்குச் சான்றாகும். மற்றும் கலைப்பொருள்களின் திறனாராய்ந்து தரப்படுத்திக் கண்காட்சி அமைத்து அதை நிர்வகிக்கும் இவருடைய திறனை, 1968-ல் நடந்த உலகத்தமிழ் மாநாட்டுக்கண்காட்சியைக் கண்டவர் உணர்ந்திருக்கலாம். தஞ்சையில் இராசராச சோழன் சதய திருவிழாவில் பெருவுடையாருக்குப் பெருமுழுக்குக் காரியங்களைத் திறம்படத் திட்டமிட்டு ஆகமரீதி வழுவாது செய்தும் காட்டியுள்ளார். சிற்ப நூல்களிற் காணப்படாததும் இலக்கணங்கள் வகுக்கப்படாததுமான கண்ணகி மூர்த்தம் வடித்துக் கொடுக்கும் சோதனையான பணியில் தம் உற்ற நண்பரும்,தேர்ந்த ஸ்தபதியுமான திரு. கணபதி ஸ்தபதியாரின் துணைகொண்டு சங்க நூல்களிலும் சிலப்பதிகாரத்திலும் கூறப் பட்ட அணி, உடை, ஆபரணச் சிறப்புகளைச் செவ்வனே ஆராய்ந்து, அச்சிலைக்குகந்த பிரதிமாலக்ஷணம் கற்பித்துத் தெய்வக்களை பொருந்திய அவ்வொன்றை அழகுறச் செய்தும் வைத்த பெருமை இவரையே சாரும். இத்துடன் பூம்புகாரில் கண்ணகி கோயிலுக்கென இடம் பார்த்தும், கோயிலமைப்பைத் திட்டமிட்டும், இப்படிமத்தைப் பிரதிஷ்டை செய்வதிலும் உதவியுள்ளார். இப்பணிகள் இத்துறைகளில் அன்னாருக்கிருக்கும் சிரத்தையையும் அநுபவத்தையும் கைப்பழக்கத்தையுமே காட்டி நிற்கும்.

"தந்தை சா. கணேச ஸ்தபதி"

திரு. வை. கணபதி ஸ்தபதி

தந்தை சா. கணேசன் அவர்கள் நாடறிந்த பேரறிஞர். அப்புனிதரைப் பல திறப்பட்ட அறிஞர்கள் தத்தமக்கு உரியவராகக் காண்பார்கள். அவர்களைத் தமிழறிஞராகவும், புலவராகவும், அரசியலறிஞராகவும், ஆசிரியராகவும், பேச்சாளராகவும், எழுத்தாளராகவும், சிந்தனையாளராகவும், இலட்சியவாதியாகவும், தியாகியாகவும், ஆராய்ச்சியாளராகவும் காண்பார்கள். பொதுவாக உயர்நிலையிலுள்ள பேரறிஞர்கள் இப்படித்தான் காட்சியளிப்பார்கள். அம்முறையிலே சிற்பியாகிய நான் தந்தை சா. கணேசன் அவர்களை ஒரு சிற்ப அறிஞராகவே காண்கிறேன்.

கலைக்காவலர் பரம்பரை :

தமிழகம் கண்ட ஐம்பெரும் கலைகளில் சிற்பக் கலை ஒன்று. நமது தமிழகத்தில் பல்லவ, சோழ, பாண்டிய, விஜயநகர, நாயக்க மன்னர்கள் இக்கலையை ஆதரித்துப் போற்றி வளர்த்தமை வரலாறு அறியும். ஆனால், தனிப்பட்ட சமூகங்கள் இக்கலையைப் போற்றி வளர்த்த செய்திகள் வரலாற்றில் இன்னும் இடம் பெறவில்லை. தமிழகத்தில் மாமன்னர்களுக்குப்பின் முடிசூடா மன்னர்களாகத் திகழ்ந்து இக்கலையைப் போற்றி ஆதரித்த தன்னிகரற்ற சமூகம், 'நகரத்தார்' என்று கௌரவித்து அழைக்கப்படும் நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் சமூகம் ஆகும். இப்பெருங்குடி மக்கள், ஈட்டிய செல்வத்தின் பெரும் பகுதியினைப் பழைமையான திருக்கோயில்களைப் புதுப்பித்தல், புதிதாக நிறுவுதல், புதியன சேர்த்தல் போன்ற நற்பணிகளில் அர்ப்பணித்திருக்கிறார்கள். கோடிக்கணக்கான ரூபாய்களை இத்தகைய பணிகளுக்கு வாரி வழங்கிய வேறொரு சமூகம் தமிழகத்தில் இன்னும் தோன்றவில்லை.

பரம்பரைச் சிறப்புகள் :

வள்ளன்மையும், கலை ஆர்வமும், தெய்வ பக்தியும் கொண்ட அப்பெருமக்கள் சிற்பிகளைப் போற்றி ஆதரித்த முறை, நினைத்து நினைத்து இன்புறத்தக்கது. அவர்கள் சிற்பிகள்மீது நிறைந்த வாஞ்சை கொண்டவர்கள் ; அவர்களோடு நெருங்கிப் பழகுவதில் பிரியமும், பெருமையும் உடையவர்கள். ஆனால், இப்பெருமக்கள் விஷயத்தில் சிற்பிகளாகிய நாங்கள் மற்றவர்களிடையே கண்டிராத ஒரு தனிப்போக்கைக் கண்டிருக்கிறோம். புரவலரும் புலவரும் போன்று, சிற்பிகளோடு நெருங்கிப் பழகியதன் பயனால் சிற்பக் கலையின் நுணுக்கங்களை ஆர்வத்துடன் ரசித்துச் சிற்பிகளோடு வாதிட்டு ஆழ்ந்த உண்மைகளையும், இரகசியங்களையும் வெளிக் கொணர்ந்து ஒவ்வொருவரும் சிற்ப அறிவுக் களஞ்சியமாகவும் திகழ்ந்திருக்கிறார்கள். கோவிலுக்கு அளவு நிர்ணயம் செய்தல், கோவில் உறுப்புகளில் அடக்க, சுருக்க, கழற்றிகள் ஒழுங்குபடுத்துதல், மண்டபப் பத்திகள், உயரங்கள் ஆகியவற்றை அழகுபட வகுத்தல், பிராகாரங்கள், கோபுரங்கள் நிர்மாணித்தல், இன்னோரன்ன பல தொழில் நுணுக்கங்களைச் சிற்பிகளோடு நல்ல கலை உணர்வுடனேயே ஏற்றுச் செய்வித்திருக்கின்றார்கள். சிலர் சாஸ்திர ஞானமும் ஆகம நூலறிவும், நடைமுறைத் தொழில் நுணுக்கங்களும் சிறந்த அளவில் கைவரப்பெற்றுப் பிறர் வியக்கும் பேரறிவு படைத்தவர்களாகவும் விளங்கி இருக்கிறார்கள். திருப்பணிகளில் இவர்கள் நிர்வாகம் செய்த முறைகளைப்பற்றித் தனித்த ஒரு நூலே எழுதலாம். நிர்வாகத்திறன் அவர்களின் உடன்பிறப்பு.

கலை உள்ளமும் ரசனையும் :

இத்துணை சிறப்புகள் வாய்ந்த இவ்வணிகப் பெருங்குடியில் அவதரித்தவர், தந்தை சா. கணேசன் அவர்கள். பரம்பரைச் சிறப்புகள் அனைத்தையும் ஒருங்கே பெற்றிருப்பதுடன், மற்றவர்களிடம் காணாத தனிச் சிறப்புகளும் வாய்க்கப்பெற்றவர்கள், அவர்கள். தமிழ் இலக்கியத்தில் ஈடுபாடும் ரசனையும் எவ்வளவு

அவர்களிடம் காணப்படுகின்றனவோ, அவற்றை விடச் சிற்பக்கலையில் ஈடுபாடும் ரசனையும் அவர்களிடம் மேலோங்கியிருக்கக் காணலாம். சிற்பங்களைப் பார்த்துப் புரிந்து ரசிப்பது எல்லோராலும் இயலாது. ஒன்று, சிற்பியாக இருத்தல் வேண்டும்; அல்லது சிற்பங்களை அடிக்கடி பார்த்து, ஆராய்ந்து, அவற்றின் உட்கருத்தையும் நயத்தையும் அறியும் கலை உள்ளம் வாய்ந்தவர்களாக இருத்தல் வேண்டும். இத்தகைய உள்ளம் கொண்டோர் நம் நாட்டில் மிகமிகக் குறைவு. என் வாழ்க்கையில், சிற்பத் துறையில் பல வேறு அலுவல்களின் ஈடுபட்டிருக்கும், பல நிலைகளில் உள்ளவர்களைச் சந்தித்துப் பேசியும் இருக்கின்றேன். அவர்களின் ரசிகத்தன்மையை ஓரளவு அறிய முயன்றுமிருக்கிறேன். ஆனால், தந்தை சா. கணேசன் அவர்களிடம் கண்ட கலை உள்ளத்தின் பரப்பையும் ஆழத்தையும் வேறு யாரிடத்திலும் நான் காணமுடியவில்லை. ஒரு சிற்பத்தின் சிறந்த கலைக் கூறுகளை, அதனைக் கண்டவுடன் தொட்டுப் பேசும் ஆற்றல் அவர்களுக்கே உரிய தனிச் சிறப்பாகக் காண்கிறேன். எங்கெங்கு மற்றவர்கள் தயங்குகிறார்களோ, பிறர் கருத்தை எதிர்பார்க்கிறார்களோ அங்கெல்லாம் நயத்தோடு எடுத்துரைக்கும் ஆற்றல் நிரம்ப அவர்களிடம் இருக்கின்றது. தந்தை சா. கணேசன் அவர்களுடன் எத்தனையோ கோவில்களுக்கும் கலைக்கூடங்களுக்கும் சென்று வரும் பேறு பெற்றிருக்கிறேன். ஆங்காங்கே உள்ள சிற்பங்களைப் பார்த்து அவர்கள் பேசுவதை—அவர்கள் தரும் புது விளக்கங்களை—சுட்டிக் காட்டும் நயங்களைக் காதாரக் கேட்டு, உள்ளம் மகிழ்ந்து, வியந்துமிருக்கிறேன். இவர்களுக்கு மட்டும் இத்துணை ரசிகத் தன்மை எங்ஙனம் தோன்றியது என்று நான் துணிந்து இதுவரை அவர்களைக் கேட்க முடியவில்லை. அவர்களே ஒருமுறை பிறரிடம் இதுபற்றிச் சொல்லிக்கொண்டிருந்த உண்மை என் மனதை நெகிழச் செய்து விட்டது. அவர்கள் சொன்னதெல்லாம் இது தான்: ''கம்பன் ஒரு சகலகலா வல்லவன். அவனைப் புரிந்துகொள்ள நான் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பலமுனைப்பட்டவை. இதனால் ஒன்றல்ல, பல துறைகளைப்பற்றி ஆழ்ந்து ஆராய வேண்டியதாயிற்று. இவையெல்லாம் கம்பன் கொடுத்த பிச்சை.''

கலை வளம் பெற - உயர :

ஒரு சிறந்த ரசிகர், ஒரு சிறந்த கலைஞருக்கு ஒப்பாவார். ஓர் உண்மைக் கலைஞன் இத்தகைய ரசிகரைத்தான் தேடித் திரிவான். எத்தனை ஆயிரம் சாதாரண மக்கள் அவனது படைப்புகளைப் புகழ்ந்துரைத்தாலும், ரசிகர்களில் மேதையாக விளங்கும் ஒருவரின் புகழுரைக்கு ஈடாக அவன் வேறு எதையும் பெரிதாக நினைப்பதில்லை. ஒரு படைப்பில் கலைஞன் வைத்த பொருள் நயங்களையும்உருவ அமைப்பு நயங்களையும் கண்டுணர்ந்து அவற்றையே சுட்டிக் காட்டிக் காட்டி ரசித்து இன்புறும் உள்ளமே சிறந்த ரசிக உள்ளம். இத்தகைய ரசிக உள்ளத்தை லட்சத்தில் ஒருவரிடந்தான் காணமுடியும். தந்தை சா. கணேசன் அவர்களிடம் இவ்வுள்ளம் பேரளவில் அமைந்திருப்பதைக் கண்டேன். இத்தகைய பெருமக்களால்தான் உண்மையாகக் கலை வளமும், வளர்ச்சியும் பெற முடியும்; தொழிற்கரங்களை இயக்கவும் முடியும். அவர்களால்தான் கலைப்படைப்புகளின் தரமே உயர்கிறது, சிறந்த இலக்கியங்களுக்கு உரையாசிரியர்கள் காணும் சிறப்பான விளக்கங்களை போல.

கலை நூலறிவு :

சிற்பங்களைச் செம்மையாக இயற்றுவதற்கு ஒரு சிற்பிக்குத் துணை புரிவன சிற்ப நூல்கள். பெரும்பாலும், சிற்பிகளே அவற்றை விரும்புவர். அவை அவர்களுக்கே உரியவை, இலக்கணம், இலக்கிய கர்த்தாவிற்கு உரியது போல. அவற்றை மற்றவர்கள் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதில்லை. என்றாலும், ஆய்வு உள்ளம் படைத்த தந்தை சா. கணேசன் அவர்கள் சிறந்த சிற்ப நூல்களையெல்லாம் திரட்டி, அவற்றை விரும்பிப் படித்தும் உள்ளார்கள். ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளில் வெளிவந்த எல்லா நூல்களுமே அவர்களிடம் இருக்கின்றன. ஏன், சிற்பிகளிடம் இல்லாத நூல்களும் இவர்களிடம் உண்டு என்றால் மிகையாகாது. அலகாபாத் பல்கலைக் கழக சமஸ்கிருதப் பேராசிரியர் திரு. பி. கே. ஆச்சார்யார் அவர்கள் பதிப்பித்த 'மானசாரம்' என்ற சிற்ப நூலின் சமஸ்கிருத மூலம் மட்டுந்தான் எங்கள் வீட்டிலுண்டு. ஆனால், தந்தை சா. கணேசன்

அவர்களிடம் மூலத்துடன் அதைப்பற்றிய பிற ஆறு துணை நூல்களும் இருக்கின்றன. அந்த நூல்களை அவர்களிடம் வாங்கிப் புரட்டிப் பார்த்தால் அவர்கள் அவற்றினுள்ளே புகுந்து படித்துப் பலவித கேள்விக் குறிகளையும், கருத்துரைகளையும் ஆங்காங்கே எழுதி இருப்பதைக் காணலாம். புத்தகங்களை வாங்கி, அலமாரியில் அடுக்கி வைத்து அழகு பார்ப்பதில்லை. படித்த பின்னரே அவை அடுக்கி வைக்கப்படுகின்றன. அது மட்டுமல்ல, நூல்கள்மீது அவர்கள் கொண்ட ஆசை கொஞ்சநஞ்சமல்ல, எதை வேண்டுமானாலும் கொடுப்பார்கள். ஆனால், புத்தகங்களை மட்டும் கொடுக்கமாட்டார்கள். அவர்களிடமிருந்து புத்தகத்தைப் பெறுவோர் யாருமிருந்தால் முற்பிறப்பில் நிரம்பப் புண்ணியம் செய்திருக்க வேண்டும். என்னைப் பொறுத்த வரையில் அத்தகைய புண்ணியம் செய்தவனாகவே கருதிக் கொள்கிறேன். காரணம், அவர்கள் கொடுத்த இரண்டு நூல்கள் பத்து ஆண்டுகளாக என்னிடம் இருக்கின்றன. (இவற்றைக் கண்டிப்பாகத் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும் — இது உத்தரவு). சிற்ப நூல்களை மட்டுமல்லாமல் அவற்றிற்குத் துணை நூல்களான ஆகம நூல்களையும், நாட்டியக் கலை நூல்களையும் அவர்கள் நிரம்பக் கற்றிருக்கிறார்கள்.

கருவிகளின் செயல் முறை அறிவு :

கலை உள்ளமும் கலை நூலறிவும் மட்டும் தான் அவர்களிடம் உண்டு என்பதில்லை. அவர்களிடம் கலைத்துறை செயல்முறைக்கு வேண்டிய கருவிகளும் உண்டு. அவர்களுடைய கைப் பெட்டியில் எந்த நேரத்திலும் ஒரு ஸ்கேல், பென்சில், ரப்பர், மேக்னடிக் காம்பஸ், டேப், டிராயிங் பென்சில்,கலர் பென்சில், கருவிப்பெட்டி (Instruments Box), பூதக்கண்ணாடி ஆகியவை எல்லாம் இருக்கும். இவை தொழில் புரிவோருக்கு அல்லவா வேண்டும்? தந்தை சா. கணேசன் அவர்கள் கோவில்களுக்குச் சென்றால் இவைகளெல்லாம் தொழிற்படத் தொடங்கும். எடுத்துக்காட்டாக, அண்மையில் பத்தினித் தெய்வம் கண்ணகிப் பெருமாட்டிக்குக் கோட்டம் நிறுவ மனை தேர்ந்தெடுக்கப் பூம்புகாருக்கு அவர்களுடன் நானும் சென்றிருந்தேன். அவர்களே இடத்தைத் தேர்ந்தெடுத்தது மட்டுமல்லாமல் கோட்டம் நோக்க வேண்டிய திசையையும் 'மாக்னடிக் காம்பஸ்' (Magnetic Compas) கொண்டு தீர்மானித்து, கயிறு பிடித்து, வரை கோடிட்டுக் கூடியிருந்த பெரியோர்கள் வியக்கக் கோட்டத்தின் பார்வை பற்றிய உட்கிடக்கையையும் விளக்கினார்கள் ; கிழக்கு நோக்கிய இக் கோட்டம் ஈசானியப்பார்வை உடையதாக இருத்தலுக்குக் காரணம் ஊர் மக்களின் நல்வாழ்விற்குத் தேவை என்ற சிற்ப ரகசியம் அவர்களுக்கு நன்கு தெரிந்திருந்தமையால்தான்.

படைப்பாற்றல் :

இதுமட்டுமல்ல, ஒரு சிற்பியானவன் ஏற்கனவே உருவாக்கப்பட்டிருக்கும் சிற்ப வடிவங்களின் இலக்கணங்களைக் கற்றிருப்பதுடன் புதிதாக வடிவங்கள் இயற்றத்தக்க பொது அறிவும் கற்பனையும், அவ்வடிவத்தின் அமைதியை நிர்ணயிக்க உருவ அமைப்பு முறையும் தெரியப் பெற்றிருக்க வேண்டும். இவற்றையும் தந்தை சா. கணேசன் அவர்கள் கைவரப் பெற்றிருக்கிறார்கள். காரைக்குடி கம்பன் கழகத்தில் கம்பரின் திருவடிவமும், தமிழ்த்தாயின் வடிவமும் தந்தை சா. கணேசன் அவர்களின் படைப்புகள். கம்பனை ஓர் இலக்கியப் பேராசிரியராகவும் ஒப்பற்ற தமிழ் மகனாகவும் சித்திரித்து, அதற்கேற்ற அமைதியையும் அதில் ஏற்றியிருக்கிறார்கள். தமிழ்த் தாய்க்கு அவர்கள் கொடுத்த வடிவழகும் கருத்தழகும் சிற்ப உலகில் அது உயர்ந்த இடத்தைப் பெறச் செய்துவிட்டது.

பூம்புகாரில் கடவுள் மங்கலம் செய்யப்படவிருக்கும் திருமாபத்தினி கண்ணகியின் வடிவம், அவர்கள் உள்ளத்திலே மலர்ந்த காட்சியின் பிம்பம். அது மட்டுமல்ல, 'சுவாமி சின்மயானந்தா' அவர்களுக்குச் சடை முடி தரித்துப் பிறை சூடி, பாசம் அங்குசம் தாங்கி, ஞான முத்திரை காட்டிய ஞான விநாயகர் ஒன்று அவர்களால் உருவாக்கி அளிக்கப்பெற்றிருக்கின்றது. தமிழ்த்தாயை, என் தந்தையார் திரு. ம. வைத்தியனாத ஸ்தபதி அவர்களும்; கண்ணகி, ஞான கணபதி ஆகிய இரு வடிவங்களை நானும் செதுக்கிக் கொடுத்து, அவர்கள் அடைந்த பெருமையில் பங்கேற்கச் செய்திருக்கிறார்கள் என்பதைப் பணிவோடு இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மேற்குறிப்பிட்ட செய்திகள் அவர்களுடைய படைக்கும் ஆற்றலுக்கு (Creative spirit) மிகச்சிறந்த சான்றுகளன்றோ !

பூம்புகார் நகர அமைப்பை மயன் என்ற தமிழகப் பெருந்தச்சன் ஆதியில் சமைத்ததாக இலக்கியத்தில் குறிப்புண்டு. ஆனால், கடல் கொண்ட அப்பெருநகரத்தை எவரும் கண் எதிரே கண்டதில்லை. சிலப்பதிகார நூலை ஆராய்ந்து, தமிழகத் தொல்பொருள் ஆய்வுத்துறையினர் நிகழ்த்திய பூம்புகார் கலைக்காட்சியில் முதல் முதலாக அப்பட்டினத்தை உருவாக்கி, ஒரு சிறந்த 'மாடல்' மூலமாக நம் கண்ணெதிரே காட்டிய பெருமை, பெருமளவு தந்தை சா. கணேசன் அவர்களையே சாரும் என்றால் மிகையன்று. அதைக் கண்ணுற்ற தமிழறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் அவர்களைப் போற்றிப் புகழ்ந்து பாராட்டினார்கள். தஞ்சைக் கலைக் கூடத்தின் சிருஷ்டி கர்த்தாக்களில் ஒருவரா யிருந்து அவர்கள் ஆற்றிய பணியை அறிஞர் உலகம் நன்கறியும்.

சிற்பக்கலை ஆராய்ச்சி :

தந்தை சா. கணேசன் அவர்களுக்குச் சிற்பத்துறை ஆராய்ச்சி தேனினும் இனியது. கோலாலம்பூரில் நடைபெற்ற முதலாவது உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கில் தமிழகச் சிற்பக் கலை பற்றிச் சிறந்த ஆராய்ச்சி உரை (Research Paper) ஆற்றிய ஒருவர், தந்தை சா. கணேசன் அவர்களே. இதனைச் சிற்பியர் உலகம் ஊடுருவிக் கவனித்துக்கொண்டிருந்தது; அளவற்ற பெருமையும் கொண்டது. இதனைத் தொடர்ந்து இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டிலும் அவர்கள் கலைக் காட்சியை உருவாக்கி யதன்மூலம் தமிழகம் எத்தனையோ கலை பற்றிய அரிய செய்திகளைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பையும் அவர்களால் பெற்றது.

சிற்பத்துறையில் ஈடுபடுவோருக்குத் தைரியமாக வாதிட்டுத் தெளிந்த முடிவு காணும் ஆற்றல் இன்றியமையாதது. இதுவும் தந்தை சா. கணேசன் அவர்களுக்கு வாய்த்திருக்கிறது என்பது அண்மையில் வெளியாயிற்று. மலேசியாவில் (சிங்கப்பூரில்) வெகு நாள்களாக வைத்து வழிபட்ட ஒரு படிமம் திரௌபதியா அல்லது வேறு வடிவமா என்பதை உறுதிப்படுத்த, மலேசியப் பெருங்குடி மக்களால் அவர்கள் அழைக்கப் பட்டதும், அவர்கள் முடிவு கூறி வந்ததும் நாடறியும்.

பக்தியுணர்வும் பணியும் :

தந்தை சா. கணேசன் அவர்கள் எத்தனையோ கும்பாபிஷேகங்களுக்குத் தலைமை தாங்கி, இரவு பகலாகப் பக்தி உணர்வோடு இறைபணியாற்றி உள்ளார்கள். இன்னும் அனேக கும்பாபிஷேகங்கள் அவர்களை எதிர்நோக்கியிருக்கின்றன. சமீபத்தில் ராஜராஜசோழனின் ஆயிரமாவது சதயத் திருநாளைச் சிறப்பாக நடத்தி, தஞ்சைப் பெருவுடையானின் அகம் குளிரக் குடமுழுக்குச் செய்த பேரின்பக் காட்சி கலையுணர்வு, பக்தி யுள்ளம் படைத்த மக்களின் உள்ளத்திலே இன்னும் நிழலிட்டுக்கொண்டிருக்கிறது.

சிற்பிகளிடம் வாஞ்சை :

எல்லாவற்றிற்கும் மேலாகத் தந்தை சா. கணேசன் அவர்களிடத்தில் மெய் சிலிர்க்க நான் கண்ட தனி இயல்பு ஒன்று உண்டு. சிற்பக் கலைமீது அவர்களுக்கு எவ்வளவு பிரியம் உள்ளதோ அதைவிடப் பன்மடங்கு சிற்பிகள்மீது அவர்கள் கொண்டிருக்கும் வாஞ்சை. சிற்பிகளை வலிய இழுத்துப் பெருமையடையச் செய்ய ஆசைப்படுவார்கள் அவர்கள். ஒரு முறை என் தந்தையார் திரு ம. வைத்தியநாத ஸ்தபதி அவர்களுக்குச் 'சிற்ப கலாசாகரம்' என்ற பட்டம் வழங்க வேண்டுமென்று அவர்களின் அன்புள்ளத்தில் தோன்றி ஒரு பொற்பதக்கம் செய்து விட்டு என் தந்தையை அழைத்தார்கள். இதைக் கேட்ட என் தந்தையார் "நான் இதுவரை பெற்ற பேரும் புகழும் தங்களால் ஏற்பட்டதுதான். இவை போதும். தங்களின் உண்மையான அன்பிற்கு நான் ரொம்பக் கடமைப்பட்டவன். என்னை மன்னித்துவிடுங்கள்" என்று கூறி என் தந்தையார் மறுத்துவிட்டார்கள். இதை வெகுநாள்களுக்குப் பின் கூறி, என்னிடம் பதக்கத்தைக் காட்டி, வருத்தத்தைத் தெரிவித்து, "இப்பதக்கத்தைப் பெறுவதற்கு யோக்கியதை உள்ள வேறு யார் வரப்போகிறார்களோ தெரியவில்லை ; அதுவரை இப்பதக்கத்தை வைத்திருப்பேன்" என்று அவர்கள் சொல்லிய பொழுது, அவர்கள் சிற்பிகளின்மீது வைத்திருக்கும் பெருமதிப்பிற்காகவும் காட்டும் ஆதரவிற்காகவும் அவர்களின் திருப்பாதங்களில் விழுந்து வணங்க வேண்டுமென்ற ஆசையே என் உள்ளத்தில் தோன்றியது. நான் என் தந்தையாரிடம் அப்பதக்கத்தை ஏன்

பெற்றுக்கொள்ளவில்லையென்று கடுமையாக வாதிட்டேன். அதற்குத் "திரு. சா. கணேசன் அவர்கள் என் முதலாளியின் மகன். அவர்களிடந்தான் என் வாழ்க்கையையே முதன் முதலில் ஸ்தபதி என்ற முறையில் தொடங்கினேன். அதுமுதற்கொண்டு என் வாழ்க்கை தனிப் பெறும் சிறப்புடையதாகத் திகழ்ந்தது. முதலாளி அவர்கள் (என் தந்தையார், தந்தை சா. கணேசன் அவர்களை இவ்வாறு தான் அழைப்பார்கள்) நகரத்தார்களிலே தலை சிறந்த அறிவாளி. என் வயதும் அவர்கள் வயதும் ஒன்றுதான். இருப்பினும், அவர்கள் என் மீது வைத்துள்ள மதிப்பின் காரணமாக, நான் அவர்கள் இல்லத்திற்குச் சென்றபோதெல்லாம் என்னை 'அண்ணா வாங்கோ' என்று உள்ளன்போடு பல அறிஞர்களுக்கு மத்தியில் அழைத்துப் பெருமைப்படுத்தினார்களே அதைவிடவா சிற்ப கலா சாகரம் என்ற பட்டம் பெரியது? அவர்கள் அண்ணா என்றழைக்க எவ்வளவு புண்ணியம் செய்திருக்க வேண்டும்" என்று உணர்ச்சி வசப்பட்டு என் தந்தையார் அவர்கள் கூறியது என் நெஞ்சை விட்டு இன்னும் அகலவில்லை.

என் தந்தை திரு ம. வைத்தியநாத ஸ்தபதி அவர்கள் அரசினரால் நிறுவப்பட்ட சிற்பக் கலைக் கல்லூரியின் கண்காணிப்பாளராகப் பணியாற்றி வரும் காலத்தில், நான்காவது ஆண்டில் அவர்களுக்குத் திடீரென்று கடுமையான வாத நோய் ஏற்பட்டது. இச்செய்தி கேட்ட தந்தை சா. கணேசன் அவர்கள் கவலைப்பட்டது எவ்வளவென்று என் உள்ளமே அறியும். அவர்கள் மீண்டும் தன்னிலை பெற வேண்டுமென்று கவலைப் பட்டவர்களில் அவர்களுக்கீடாக எவரையும் நான் அந்நேரத்தில் காணவில்லை. சென்னை 'ஜெனரல் ஆஸ்பத்திரி'க்கு நேரடியாக வந்ததோடுமல்லாமல், அன்றடம் பல முறை 'போன்' மூலம் 'டாக்டர்' களோடு தொடர்புகொண்டு விசாரித்து, எனக்கும் செய்திகள் தந்து என்னைத் தேற்றுவார்கள். சென்னையில் குணமடையாத என் தந்தையார் அவர்களைப் பிள்ளையார்பட்டிக்குத் தம் சொந்தச் செலவிலேயே அழைத்துச் சென்றார்கள். அங்குள்ள பிரபல வாத நோய் மருத்துவரிடம் எல்லா வசதிகளையும் செய்து கொடுக்கச் செய்தார்கள். நோயைத் தீர்க்க வேண்டுமென்றும் முழுச்.செலவைத் தாமே ஏற்றுக் கொள்வதாகவும் மருத்துவருக்கு எழுதிக் கொடுத்த கடிதத்தில் அவர்கள் குறிப்பிட்ட செய்தி ஒன்று என் அகத்திலே ஆழப் பதிந்து என்னை அவர்களுடைய அன்பு உள்ளத்திற்கு அடிமையாக்கிவிட்டது. அக்கடிதத்தில், "வைத்தியநாத ஸ்தபதிக்கு வாத நோய் ஏற்பட்டிருப்பது சிற்பக் கலைக்கே வாத நோய் ஏற்பட்டதற்கு ஒப்பாகும்; நீங்கள் அவருக்குப் புத்துயிர் கொடுக்க முடியுமானால் மாபெரும் சிற்பக் கலைக்கே நீங்கள் புத்துயிர் கொடுத்ததற்கு ஒப்பாகும். இதைவிட நான் உங்களுக்கு என்ன சொல்ல வேண்டும்? இனி அவர் உங்கள் பொறுப்பு" என்று அவர்கள் எழுதியிருந்தார்கள். இவ்வார்த்தைகள் எங்கள் குடும்ப வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியவை என்று மதித்து, அன்று அக்கடிதத்தை மருத்துவரிடம் காட்டிவிட்டு, இன்றும் நானே வைத்திருக்கிறேன்.

தொழிலாளர்மீது மாசற்ற அன்பு

தந்தை சா. கணேசன் அவர்கள் எங்கள் மீது மட்டுமல்ல, மற்ற தொழிலாளிகளின்மீதும் உண்மையான அன்புடையவர்கள். எடுத்துக்காட்டாக, அவர்கள் குணத்தை அறிந்தும், சொல்லுக்கு ஏற்றவாறும் நடந்துகொண்டு அவர்கள் இடும் தச்சு வேலைகளைப் பல ஆண்டுகளாகச் செய்து வந்த ஒரு தச்சு வேலைக்காரர் திரு. கணபதி ஆச்சாரி என்பவர். இவர் காரைக்குடியைச் சேர்ந்தவர். அவர்மீது தந்தை சா. கணேசன் அவர்கள் வைத்திருந்த அன்பு மிகமிகப் பெரியது. அத்தொழிலாளி இறந்துவிட்டதும், அவரைப்பற்றித் தந்தை சா. கணேசன் அவர்களின் அன்புப்பேரன் கம்பனிடம் விசாரித்தேன். அதற்குக் கம்பன் வியப்புடனும் பரபரப்புடனும் சொல்லிய செய்தி என் நெஞ்சை உலுக்கிவிட்டது. கம்பன் சொன்னான், 'அண்ணே, கணபதி ஆசாரி செத்துப்போனார். ஐயா ரொம்ப ரொம்பக் கவலைப்பட்டார்கள். இதிலே ஓர் அதிசயத்தைக் கண்டேன். எங்கள் வீட்டில் எத்தனையோ துக்க நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. ஐயா எதற்கும் கலங்கியதே இல்லை. ஆனால், கணபதி ஆசாரி இறந்ததைக் கேட்டு ஐயா கண்ணீர் விட்டார்கள். இது மாதிரி நேரு இறந்த பொழுதுதான் கண்ணீர் சிந்தியதை நான் ஐயாவிடம் பார்த்தேன். எனக்கெல்லாம் ரொம்ப

ஆச்சரியமாக இருந்தது.'' இந்தக் கணபதி ஆசாரி வித்வான் இல்லே. பெரிய கலேஞருமில்லே. ஆனல், கைத்திறன் படைத்த ஒரு தச்சுத்தொழிலாளி. இத்தகையோர்மீதும் அவர்கள் அன்பு கொண்டிருந்தார்கள் என்ருல், அவர்கள் தொழிலாளர்பால் கொண்டிருந்த பாச உணர்வு எவ்வளவு உண்மையும் தூய்மையும் ஆகும்.

தந்தை சா. கணேசன் அவர்கள் கலே உள்ளம், கலே நூலறிவு, கலேத்துறை செயல் முறை அறிவு, கற்பனைத்திறம், படைக்கும் ஆற்றல், ஆராய்ச்சித்திறன், பரம்பரை நிர்வாகத் திறன், நீண்ட அநுபவம், கலேஞர்கள்மீது மாசற்ற அன்பு, அவர்கள் வாழவும் வளரவும் வேண்டுமென்ற உண்மைப் பேரார்வம் ஆகிய எல்லாம் சேர்ந்த ஒரு திருவடிவமாகவே அவர்கள் எனக்குக் காட்சியளிக்கிருர்கள். அவர்களேத் தமிழகத்தின் 'தனிப்பெரும் ஸ்தபதி' என்று அழைத்துப் பேரின்பம் அடைகிறேன்.

எல்லோர்க்கும் தந்தை ஒருவரே. ஆனல், எனக்குமட்டும் இருவர். ஒருவர், என்னேப் பெற்று உணவூட்டி வளர்த்தார். மற்றவர், என்னே ஏற்று உணர்வூட்டி வளர்த்தார். முன்னேயவர் என்னேக் கலேத்துறையில் நட்டு வைத்தார்; விட்டுவிட்டார். பின்னேயவர் அரண் அமைத்து உரமிட்டார், அணேத்துக்கொண்டார். முன்னேயவருக்கு நான் பிள்ளே. பின்னேயவருக்கு நான் மகன். நான் எவ்வளவு புண்ணியம் செய்திருக்க வேண்டும்?

"கலே வாழ, கலேஞர்கள் வாழ—அவர்கள்
புகழ வாழ வேண்டும்!
என் வழிபடு தெய்வத்திடம் இஃதே
என் பிரார்த்தனே.

"கம்பன் அடிப்பொடி" சா. கணேசன்

திரு. சு. குழந்தைநாதன்.

வித்தியாசமான மனிதர் :

"கம்பன் வாழ்க ! கம்பன் புகழ் வாழ்க !
கன்னித்தமிழ் வாழ்க !!!"

எனக் கணீரெனக் குரல் கொடுத்து, அரை நூற்றுண்டளவாகக் கம்பனோடு கன்னித் தமிழை வாழ்வித்துத் தொண்டாற்றிய அமரர் திரு. சா. கணேசன், பதவி மோகமும் சுயநல நாட்டமும் உச்சம் பெற்றுள்ளதொரு கால கட்டத்தில், அன்னவர் தொண்டுக்கே ஆட்பட்டவராய்த் தொண்டருக்கும் தொண்டராய்ப் பணி புரிந்து, "வித்தியாசமானதொரு மனிதராய்" விளங்கினர்.

"நினக்கென வரைந்த ஆண்டுகள் எல்லாம்
மனக்கினி தாக வாழிய"

என்ற கம்பன் வாக்கிற்குச் சிறந்ததொரு இலக்கியமாய் வாழ்ந்த அண்ணல் கணேசனின் வாழ்க்கை ஏடு, எழுபத்தைந்து ஆண்டுகளால் ஆனதொரு சகாப்தமாகி, 28-7-1982 - இல் அமரத்துவம் பெற்றுவிட்டது. தம் புகழைவிடத் தாம் மதித்துப் போற்றும் அன்பர்களின் புகழைப் பரப்பும் ஒரு கருவியாகவே காலமெல்லாம் வாழ்ந்த சா. கணேசனின் உயரிய பண்புகளையும் அரிய தொண்டுகளையும் கொண்டமைந்த அவ் வாழ்க்கைப் பொன்னேடு கம்பன் உள்ளவரை, கன்னித்தமிழ் உள்ளவரை பல்லாயிரவர் வாழ்வுக்கு வழிகாட்டி நிற்கும்.

மூன்று காதல்

மகாகவி பாரதிக்கு "மூன்று காதல்" மூண்டெழுந்ததுபோலத் தம் வாழ்விலும் மூவர்மீது ஆருக்காதல் ஏற்பட்டதென்பார், சா. க. "அதனை வெறும்மோகம் என்பதைவிட ஒருவகை வெறியால் எழுந்த இலட்சிய வேகம்" என்று மனநிறைவுடன் சொல்லிக்கொள்வார். மகான் காந்தியடிகளின் ஊழியனாகித் தேசபக்தர் காதலுற்றுர்; தென்னுட்டுக் காந்தி ராஜாஜியின் மானசீகத் தொண்டனாகிச் சத்தியவேட்கை கொண்டார் ; கம்பனோடு அவருக்கு ஏற்பட்ட அறிமுகம் இலக்கியக் காதலாய் அரும்பி, என்றும் வாழும் தெய்விக உறவாய் மலர்ந்து, கம்பன் அடிப்பொடியாக அவரைக் கனிய வைத்தது! கம்பன் கொடுத்துவைத்தவன். 9-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த அவனை, பெற்ற தந்தையினும் பேணிக்காத்தார், வெண்ணெய்நல்லூர்ச் சடையப்ப வள்ளல். 10 நூற்றுண்டுகட்குப் பின்னர், மறுபடியும் அவன் புகழைப் பரப்பவும், 'கம்பன் அடிப்பொடி' எனத் தம் பெயரையே மாற்றி வைத்துக்கொள்ளவும் ஒருவர் வந்தமைந்தது கம்பனுடைய பேறுதான் !

"நானொரு இந்தியன்"

1908-இல் காரைக்குடி சாமிநாதன் செட்டியாரின் மகனாய்ப் பிறந்து, தமிழ்க்கல்வி பயின்று, தனவணிகத் தொழில் பழகிவந்த கணேசனைக் காந்தி சகம் கவர்ந்திழுத்தது. 1928-இல் சுதந்திரப் போரில் ஈடுபட்டார் ; 1941 சத்தியாக்கிரகத்திலும் 1942 ஆகஸ்டுப் புரட்சியிலும் கலந்துகொண்டு சிறைக்கோட்டம் புகுந்தார். அவரைக் கைது செய்தபோது, அவருடைய பெரிய வீட்டில் இருந்த பொருள்களையெல்லாம் அரசாங்கத்தார் அள்ளிச் சென்றுர்கள் ; அதற்கெல்லாம் அஞ்சாமல், ஏகாதிபத்திய அடக்குமுறை நீட்டிய துப்பாக்கி முனைக்கு எதிராக நெஞ்சை நிமிர்த்திச் சட்டையைத் திறந்து காட்டிச் 'சுடு' எனத் துணிந்து நின்ற தீரர் அவர்.

போலீசார் அவருடைய சட்டையைக் கிழித் தெறிந்து வெறும் மேனியராக நிற்க வைத்தனர்; அதையெல்லாம் சட்டை செய்யாமல் அன்று முதல் சட்டை அணியமாட்டேன் எனும் சங்கற் பத்தைக் கொண்டார். அரையாடை பூண்ட அண்ணல் மகாத்மாவின் உண்மைத் தொண்ட ரான அவர், கடைசிவரை சட்டை போடாக் கணேச ஞகவே வாழ்ந்தார். ஆகஸ்டுப் புரட்சிக்குப் பின்னர், குற்ற விசாரணை நடந்தபோது, வழக்கு மன்றத்தில் "உம் சாதி என்ன?" என்று கேட்ட போது, சாதிப் பெயரைச் சொல்ல மறுத்து "இந்தியன்" என்று ஆணித்தரமாகச் சொன்னர்!

ராஜாஜி பக்தர் :

இராஜாஜியை அரசியல் தலைவராய் மட்டு மன்றித் தம் ஆசானுகவே ஏற்று அவரிடம் அளவற்ற பக்தி பூண்டொழுகினர். 1946-இல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தேர்தலில் காமராஜருக்கு எதிராகச் சா. கணேசன் நிறுத்தி வைக்கப்பட்டார். காமராஜரே வெற்றி பெற்றுர். தேர்தல் முடிந்த பிறகு, காமராஜர் ராஜாஜியிடம் பேசிக்கொண்டிருந்தபோது, "கணேசன் வெற்றி பெற முடியாது எனத் தெரிந்திருந்தும் அவரை ஏன் நிறுத்தினீர்கள்" எனக் கேட்டார். அதற்கு ராஜாஜி, "அதனுல் என்ன? வேறு தக்க நபர் கிடைக்கவில்லை. கணேசனுக்கு இதிலென்ன நஷ்டம்? வெற்றி பெற்ருல் லாபம். தோல்வியுற் ருல் நஷ்டப்பட என்ன இருக்கிறது? கணேசன் எதையும் பொருட்படுத்தமாட்டார்," என்ருராம். அந்த அளவுக்கு ராஜாஜியின் வழிபற்றி வாழ்ந் தார் சா. கணேசன். 1930-1940 வரை காங்கிரஸ் இயக்க வரலாற்றிலும், அதன் பின்னர் நாடு விடுதலை பெற்ற அண்மையிலும் ராஜாஜி பெற் றிருந்த அரசியல் செல்வாக்கை எண்ணி எண்ணி வியப்பார். காங்கிரஸ் வெகுஜன இயக்கம் ஆன பின்னர் அதன் தலைவராகத் தமிழ் நாட்டவரோ தென்னுட்டவரோ வருவது அவ்வளவு எளிதில்லை என்றும், ராஜாஜிபோலச் சிலர் மட்டும் இதற்கு விதிவிலக்காயிருந்தனர் எனச் சொல்லி மகிழ்வார்.

ரசவாத மாற்றம் :

பதவியைத் தேடி ஓடாமல், தம்மை நாடி வரும் பொறுப்புகளை ஏற்றுப் பணிபுரியச் சா. கணேசன் காத்திருந்தார். 1947, 1952 சட்டமன்றத் தேர்தல்களுக்கான வேட்பாளர் பெயர்ப் பட்டியலில் அவருடைய பெயரே முதலில் அறிவிக்கப்பட்டாலும், இறுதியில் வேருெரு வரையே பொறுக்கி எடுத்தார்கள். ஆனல், கணேசன் காந்தியடிகளின் நிர்மாணப் பணிகளில் தீவிர நாட்டம் கொண்டார். அவர் நடத்திய நூற்பு வேள்விகளும், கள்ளுக்கடை, ஷோ கொட்டகை மறியல்களும் காரைக்குடி வரலாற் றில் குறிப்பிடத்தக்கவை. தமிழ்நாட்டில் கோஷ் டிப்பூசல் வலுத்தமையால் சீர்திருத்த காங்கிரஸ் அமைப்பில் சிரத்தை கொண்டார். 1957-இல் காங்கிரஸ் வேட்பாளராக நிறுத்தப்பெற்ற ராஜா சர். முத்தைய செட்டியாரை எதிர்த்துப் பலகட்சி ஆதரவுடன் போட்டியிட்டுத் தோற்ருர். என்றாலும், அத்தோல்வியாலும் தம் புகழைப் பன்மடங்கு பெருக்கிக்கொண்டார். பின்னர்ச் சுதந்திராக் கட்சியைக் கட்டி வளர்க்க அரும்பாடு பட்டார். மறுமுறை தேர்தலில் வென்று சட்டமன்ற உறுப்பினராகவும், மேலவை உறுப்பினராகவும் இயன்றவரை பணியாற்றினர். நாளடைவில் நடைமுறை அரசியல்போக்கு அவருக்கு இசைந்து வரவில்லை. அதைவிட இலக்கியப்பணியே ஏற்ற தெனக்கொண்டு திசை திரும்பினர். அவரிடம் இத்தகைய ரசவாதத்தை ஏற்படுத்தத் தூண்டுத லாயிருந்தவர் ரசிகமணி டி. கே. சி!

தமிழ் இலக்கியத்திற்குப் புத்துயிர் கொடுத்து, அதனைப் பாமரரும் அனுபவிக்க வழிகாட்டிய ரசிகமணியின் "கம்பர் தரும் இராமாயணம்" கல்கி இதழில் வாரந்தோறும் ஒவ்வொரு மலராக மணம் பரப்பி வந்தது; அந்த மணத்தில் கணேசனும் மனம் சொக்கிப்போனர். அவர் பிறந்து வளர்ந்த காரைக்குடிக்கு அருகா மையில் உள்ள நாட்டரசன் கோட்டையில் கம்பன் சமாதி அமைந்தமை அவர் உற்சாகத்தைத் தூண்டியது. அன்பர் சிலருடன் சேர்ந்து 1938-இல் "கம்பன் கழகத்தை"த் தொடங் கினர். அன்றுமுதல் அதன் செயலாளராக அமைந்து, 44 ஆண்டுகள் அயராப்பணி புரிந்

தார். முதன்முதல் தென்னங்கீற்றுக் கொட்ட கையில், 300 ரூபாய்ச் செலவில் நடத்திய திருவிழாவை, சுமார் 30 ஆயிர ரூபாய்ச் செல வீட்டில் கம்பனுக்கென அமைந்ததொரு மணி மண்டபத்திலேயே கோலாகலமாகக் கொண் டாடும் அளவுக்கு உயர்த்தினர். காரைக்குடியில் ஊன்றப்பட்ட கம்பன் கழகம், படர் ஆலமரமாய் நாடெங்கும் 60 கிளைகளாகி, விழுதூன்றி, வித்தகக் கம்பனின் புகழ் பரப்புதல் கண்டு பேருவகை கொண்டார். தனி நபர் ஒருவரின் அயரா ஆர்வமும் தளரா முயற்சியும் எவ்விதம் ஒரு நிறுவனமாக நிலை பெற்று உயரமுடியும் என்ப தற்குக் கணேசனும் கம்பன் கழகமுமே சான்று ஆகும்.

ஒப்பற்ற இலக்கிய விழா !

காரைக்குடிக் கம்பன் திருநாள் எல்லாவகை யிலும் தனிச் சிறப்புடையது. ஒவ்வோர் ஆண்டிற்கும் உரிய பேச்சுத் தலைப்புகளைக் கணேசன் முன்கூட்டியே தீர்மானம் செய்து கொள்வார்; ஒரு முறை வந்த தலைப்பு மறுபடி யும் வராவண்ணம், சுவையும் பயனும் நல்கும் வண்ணம் நிகழ்ச்சி நிரலைத் தொகுப்பார்; விழாவில் பங்கேற்போரைப் பல மாதங்கட்கு முன்னரே தெரிவு செய்து, 'உங்கட்கு இதுதான் தலைப்பு' என எழுதிவிடுவார். தமக்குப் பிடித் தாலும் பிடிக்காவிட்டாலும் அதை ஒரு கட்டளை யாகவே ஏற்று, அன்பர்கள் வந்து சேர்ந்து விடுவர்; அப்படி ஒருவர் வரவியலாது போனாலும் நிகழ்ச்சிக்குத் தடையேற்படாவண்ணம் மற்றொருவரை ஒரு நொடியில் தயாரித்து மேடையேற்றிவிடுவார். கம்பன் விழாக் கவி யரங்கமும் பட்டி மன்றமும் தனிச் சிறப் புடையவை; நாடெங்கும் வளர்ந்து வரும் பல்வேறு இலக்கியப் பணிகட்கு வரம்பாகவும் வழிகாட்டியாகவும் இலங்குபவை. கம்பனை எதிர்க்கவேண்டும் என ஒரு காலத்தில் வாதிட்டோரையெல்லாம் அவன் புகழ் பாடச் செய்த பெருமை காரைக்குடிக்கும் கணேச னுக்குமே சொந்தம்!

காலம் தவறாத விழா :

"கம்பன் விழா என்றால் கடிகாரங்கூடச் சரியாக ஓடும்'' என்பார்கள். அதிலும் கணேசன் கட்டியிருக்கும் கடிகார முள்ளோடு இசைந்து பிறருடைய கடிகாரங்களும் சுழலும் அதிசயத்தை அங்கேதான் காணலாம். யார் வந்தாலும் வரா விட்டாலும் உரிய நேரத்தில், வினாடி பிசகாமல் நிகழ்ச்சியைத் தொடங்கிவிட்டே கணேசன் அமர்வார். முதலமைச்சராயிருந்த கலைஞர் மு. கருணாநிதி, விழாத் தலைமையேற்க இசைந் திருந்தார்; அவர் சரியான நேரத்துக்கு வந்து விட முயன்றும், ரயில் தாமதத்தால் உரியவாறு வரவியலவில்லை. அதற்காக ரசிகர்களைக் காக்க வைக்காமல், நிகழ்ச்சியைக் குறிப்பிட்ட நேரப்படி தொடங்கிவிட்டார் கணேசன். நிகழ்ச்சிக்குத் தாமதமாகச் செல்வதைக் கிட்டத்தட்ட வழக்க மாக்கிக்கொண்ட கவியரசு கண்ணதாசன்கூட, கவியரங்கத் தலைமை ஏற்க உரிய நேரத்தில் விரைந்தோடி வந்துவிட்டார்! காலம் போற்று வதில் கணேசன் அவ்வளவு கண்டிப்பாயிருந்தார்!

ஆனால், காலமெல்லாம் தொண்டுக்கே ஆட்பட்ட கணேசனின் அறுபதாம் ஆண்டு நிறைவு மணிவிழாவை உரிய காலத்தில் அன்பர் களால் கொண்டாட முடியவில்லை (அவர் கொண்டாட இசையவில்லை) எப்படியும் அவர்க்கு விழாவெடுக்கத் தீர்மானித்த அன்பர் கள், அவரது 62 ஆம் வயதில், கம்பன் விழாவின் ஒரு தனிப்பகுதியாக, 1970-இல் நிகழ்ச்சியைத் தயாரித்துக்கொண்டனர். மாலை 4 மணிக்குத் தொடங்கவேண்டிய மணிவிழா நிகழ்ச்சியில் பங்கேற்க இருந்த அமைச்சர்கள் உரிய நேரத்தில் வந்து சேரவில்லை. "கம்பன் திருநாளை வினாடி பிசகாமல் நடத்தி வரும் கணேசனுக்கு எடுக்கப்பெறும் பாராட்டு விழா மட்டும் தாமதம் ஆகலாமா?'' என ஓரன்பர் கணேசன் காதில் விழும்படியாகவே வாய்விட்டுச் சொல்லிவிட்டார். இதைக் கேட்ட கணேசன், "நிகழ்ச்சி அழைப்பிதழில் என் கையெழுத்திருந் திருப்பின் காலம் தவறியிருக்காது; கையெழுத் துப் போட்டவரைக் கேளுங்கள்!'' என்றார்.

மணிவிழா மாண்பு :

அந்த மணிவிழா சா. கணேசனின் புகழுக்குப் பொன்முலாம் பூசியது. அன்பர்கள் ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் நிதி தொகுத்து

வழங்கிய போது, “என்மேல் உள்ள அன்பினைக் கம்பன்மீதும் காட்டுங்கள்; அவன் புகழும் தமிழ்ச் செல்வமும் பரவ ஆக்கம் தாருங்கள்” என நயந்து கேட்டு, தமக்களித்த நிதியைக் கொண்டு “கம்பன் அறநிலை”யினைத் தொடங்குவதாக அறிவித்தார். அன்று தந்நலமற்ற தொண்டுலகில் ஒரு புதிய வரலாறு பிறந்தது; அது கம்பன் மணி மண்டபமாக, தமிழ்த்தாயின் கோயிலாகக் காரைக்குடியில் வளரத் தொடங்கிற்று; கணேசனைப் பொறுத்தவரை அது ஒரு தெய்வ வேள்வியாகவே உருப்பெற்று வந்தது!

சுமார் 20 லட்ச ரூபாய் மதிப்பீடுடைய கட்டடப் பணிக்கு ஈராண்டிற்குள் 5 லட்ச ரூபாய் வரை நிதி திரட்டி, அதன் மனை மங்கல வாழ்வை 1972 இல் சிறப்புற நடத்திவிட்டார் கணேசன்! அந்தப் பணிக்கு ஆட்பட்ட நாள் முதல், தம் பெயரையும் ‘கம்பன் அடிப்பொடி’யாக்கிக் கொண்டார்; கம்பனுக்கு உதவிட விழையும் அன்பர்களின் திருவடிகளையெல்லாம் தம் சிரத்தால் தாங்கிச் சேவை செய்யக் காத்திருந்தார்!

மணி மண்டபம் :

140 அடி நீளமும் 100 அடி அகலமும் கொண்ட, நடுவில் தூண்களேதுமற்ற, மாபெரும் மணி மண்டபமாக அது எழுந்தது; பழைய கலை மரபும் புதிய பொறியியல் மெருகும் கலந்தமையச் சடையன் பெருவாயிலும், சேர சோழ பாண்டியத் திருவாயில்களும், தமிழ்ச்சான்றோர் பெயரமைந்த 18 கலை வாயில்களும் கொண்ட பெரியதொரு கலை மாளிகையாக அது வளர்ந்தது. அதனருகில் தமிழ்த்தாய்க்கென அமைந்ததொரு அழகிய கோயிலும் கலைப் படைப்பாய் உருவாகத் தொடங்கியது. கம்பன் மணி மண்டபத்தில் கம்பராமாயணத்தையும் தமிழ்க் கலைகளையும் ஆய்வு செய்யும் தனிப் பல்கலைக்கழகம் ஒன்றனைக் காலப்போக்கில் நிறுவுவதற்கான திட்டங்களையும் கணேசன் உருவாக்கி வந்தார்.

பல்கலைக்கழகம் :

கணேசனையும் “ஒரு பல்கலைக்கழகம்” என்றே அவரிடம் நெருங்கிப் பழகிய அன்பர்கள் மதித்துப் போற்றுவார்கள். தமிழ் இலக்கியத்திலும் பாவியல் வகைகளிலும் அவருக்குத் தெரியாத நுணுக்கமில்லை; கம்பன் கவியரங்கிற்கு எழுதி அனுப்பப்பெறும் கவிதைகளை ஆங்காங்குத் திருத்திக் கவிஞரின் மனம் கோணாமல் மெருகூட்டித் தருவது அவருக்கே உரிய தனிக்கலை; கம்பனை எழுத்தெண்ணிக் கற்று, இராம காதைக்கு மக்கள் பதிப்பொன்றினைக் கொணர அவர் மேற்கொண்ட அயரா உழைப்பு ஒரு தனி இலக்கிய வரலாறு. அவர் ஆண்டுதோறும் வெளியிட்டு வரும் “கம்பன் மணி மலர்” வரிசை, தமிழ் இலக்கிய வளத்திற்குச் செய்யப்பெறும் ஒப்பரிய திருப்பணி!

அறிவுக் களஞ்சியம் :

கல்வெட்டுக் கலையில் அவர் ஒரு ‘அத்தாரிட்டி”யாகவே மதிக்கப்பட்டார். சிற்ப, படிமக் கலைகளிலும், ஆலய, ஆகம முறைகளிலும் அவருக்கிருந்த ஈடுபாட்டிற்கு ஈடு சொல்லவே முடியாது. சென்னை உலகத் தமிழ் மாநாட்டில் அவர் உருவாக்கிய காட்சிக் கூடம், அவருடைய பரந்துபட்ட பல்துறை அறிவுக்கெல்லாம் சான்றாக விளங்கியது. கம்பன் பணியொடு கல்விப் பணியிலும் நாட்டம் கொண்டார். அழகப்பரின் கல்விப் பணிகளுக்கெல்லாம் தோன்றாத் துணைபுரிந்தார்; அவர் நடத்தும் “கற்பகம்” தமிழ்நாட்டுக் கல்விமுறைக்கமைந்ததொரு பரிசோதனை முயற்சி எனத் துணிந்து சொல்லலாம். பிறமொழி வெறுப்பில் பொழுதை வீணாக்காமல், தாய்மொழியை ஊக்கியும் ஊட்டியும் வளர்க்க வேண்டும் என்பார். தமிழில் அறிவியல் கலைச்சொற்களை உருவாக்க, அமரர் ராஜாஜி கொணர்ந்ததொரு திட்டத்திற்குத் துணை நின்றார். நீதிபதி மகராஜன் ஒரு முறை பாராட்டியது போல, கணேசன் பலருக்கு அறிவுக் களஞ்சியமாகவும் தமிழ் மரபுக் காவலராகவும் இலங்கினார்.

நட்புச் செல்வம் :

“குகனொடும் ஐவரானோம் : நின்னொடும் அறுவரானோம்” எனக்காண்டந்தொறும் வளர்ந்த இராமகாதை நட்புப் போல, கணேசன் ஆண்டு

தோறும் நட்புச் செல்வத்தைப் பெருக்கிக் கொண்டார்; பழைய நண்பர்களை மறவாமலே புதிய நண்பர்களை உறவுப் பாலங்களாக்கிக் கொண்டார். இவ்வாறு பாங்கறிந்து பழகும் அவருடைய பண்பால் கவரப்பட்ட அறிஞர் பெரு மக்கள் எண்ணற்றோர் ஆவர். டி.கே.சி.யை இந்த நூற்றாண்டுக் கம்பனாகக் கொண்டார்; பன் மொழிப்புலவர் தெ. பொ. மீ. யைக் குருநாதராக மதித்தார். அழகப்பரின் கொடை நெஞ்சத் திற்குத் தலை வணங்கினார். 'அசீரா'வின் ஆங்கில இலக்கியப் பார்வையிலும் வாரியாரின் ஆன்ம இலக்கிய உரையிலும் தம்மை மறப்பார். இத் தகைய ஆழமான நட்பினை அரசியல் உலகில் அவரால் பேண முடியவில்லை. அவருடைய கண்டிப்பும் கடமை நாட்டமும் பலருக்குப் பிடிக் காமையால், அரசியல் நட்புகள் பாதரசம் போலவே ஏறி இறங்கின. ஆனால், சுதந்திராக் கட்சி அறிமுகத்தால் நெருக்கமான தொழிலதிபர் திரு. ஜி. கே. சுந்தரம் போன்றோருடன் கொண்ட நட்பு, கணேசனைப் பொறுத்தவரை "சுந்தரகாண்ட நட்பாகவே" கடைசிவரை நீடித் தது. அவருக்கு இறுதிவரை ராஜவைத்தியம் செய்து, ஈமக்கிரியைகளில் கண்ணீர் மல்க உடன் நின்று, நட்புக்கெல்லாம் உயரியதோர் உதாரண மாகவே அமைந்தார், திரு. ஜி. கே. எஸ்.

அமர யாத்திரை !

29-7-82-இல் காரைக்குடியில் கம்பன் மணி மண்டபத்தில் கணேசனின் உடல் கிடத்தப் பட்டிருந்தது. அவர் மணி நாவோசையால் கிடுகிடுத்த அம்மணி மண்டபம், சோகப்பதுமை யாய்க் களையிழந்து கிடந்தது. அவரது உடல் மீது இராட்டை பொறித்த மூவண்ணக் கொடி போர்த்தப்பட்டிருந்தமை தேச பக்திக்கு என்றும் மரியாதை உண்டு என்பதை மௌன மாய்ப் புலப்படுத்தியது. தமிழ்நாடெங் கணுமிருந்து வந்த அன்பர்களும் அறிஞர் பெரு மக்களும் தம் இறுதி அஞ்சலியைக் கண்ணீரால் கசிந்துரையால் துயர் தோயத் தெரிவித்தனர். அன்று மாலை பல்லாயிரவர் கம்பன் அடிப்பொடியின் சடலத்தை ஏந்திச் சென்று தகனம் செய்தனர். தமிழே தழுவி வாழ்ந்த அப்பொன்னுடலத்தை, தொண்டால் பொழுதளந்த தூய சடலத்தைத் தணல் தழுவிக்கொண்டது.

கம்பனுக்குப் புகழ் அஞ்சலி செலுத்தியவர் கள் எல்லோரும், அவர் விட்டுச் செல்லும் பணி களை எடுத்து முடிக்கவேண்டும் என்று ஒரு குரலில் பேசினர். அவர்கள் பேசவில்லை; கணேச னின் ஆவி, அவர்களுக்குள் இருந்து அவ்வாறு பேசியது. "ஆண்டவன் அருளால், அன்பர்களின் உதவியால்" இத்திருப்பணி நிறைவுபெறும் என அடிக்கடி சொல்லும் கணேசனின் குரலின் எதி ரொலியாகவே அஞ்சலியுரை அமைந்தது. கம்பன் மணி மண்டபமும் தமிழ்த்தாய்க் கோயிலும் பூரணம் பெற்று, கம்பன் பல்கலைக் கழகம் அங்கு நிலை பெறும்போதே கணேசனின் ஆன்மாவும் சாந்தி பெறும் !

கணேசன் வாழ்க !

'கம்பன் என்றொரு மானிடன்' வாழும் காலம் வரை, "கணேசன்" எனும் தொண்டனின் புகழும் நிலை பெற்று நிற்கும். "கம்பன் வாழ்க, கம்பன் புகழ் வாழ்க! கன்னித்தமிழ் வாழ்க" என அரை நூற்றாண்டுக் காலமாகக் கணேசன் பரப்பிய மந்திரச் சொற்களோடு, "கணேசத் தொண்டு வாழ்க !" என்பதும் இனி வரிசை சேர்ந்து கொள்ளும். வாழ்க கம்பன் அடிப்பொடி !

நான் கண்ட கணேசனும் கம்பன் விழாக்களும்

திரு. கோவை அ. கிருஷ்ணசுவாமி

நம்மிடையே 74 ஆண்டுகள் வாழ்ந்து, சென்ற ஜூலைத் திங்கள் 28-ம் நாள் கம்பன் அடிப்பொடி என்ற சா. கணேசன் அவர்கள் அமரரானார். காரைக்குடியில் நடந்த அன்னாரது இறுதிச் சடங்கில், தமிழ்நாட்டின்கண் உள்ள அனைத்துக் கம்பன் கழகக் குடும்பத்தினர் ஒன்று கூடி, அப்பெருமகனாருக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். அதுவரையிலும் காரைக்குடியே கண்டிராத அளவில் வெள்ளம் போல் தமிழர் கூட்டம்—வேறெங்கும் காணாக் கூட்டம் என்ற வகையில் அமைந்தது, அன்னாரின் புகழுக்கு ஒரு சான்று. சீலத்தின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய், தியாகத்தின் சின்னமாய், சான்றாண்மையின் இலக்கணமாய், தமிழுக்காகவும், குறிப்பாகக் கம்பனுக்காகவும் வாழ்ந்து காட்டியவர் அன்னார். எத்துணையோ தமிழறிஞர்கள் கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்த்தார்கள். ஆனாலும், அவர்கள் கற்றோர்களின் இதயத்தை மாத்திரந்தான் களிப்புறச் செய்தார்கள். கணேசன் அவர்களோ, தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற பாங்கில், படித்தறியாதவர்களையும் பாமர மக்களையும் ஈடுபடச் செய்து, சூரியப் பிரகாசம் போன்று, அவர்களின் உள்ளங்களில் எல்லாம் கம்பன் எனும் ஜோதியை—சுடரொளியை ஏற்றிவைத்து விட்டார். இவற்றிற்கெல்லாம் அச்சாணியாக — அஸ்திவாரமாக அமைந்தது, அவர் ஆரம்பித்த கம்பன் கழகம் என்ற அமைப்பேயாகும். அந்த கழகமானது சத்தாகி, வித்தாகி, செடியாகி, கொடியாகி ஆலமரம் போல் வேரூன்றி, விழுதுகள் விட்டுத் தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், கடல் கடந்த நாடுகளிலும் பரந்து விரிவடைந்துள்ளது.

இன்றைக்குச் சரியாக 6422 ஆண்டுகட்கு முன் இராமபிரான் திருவவதாரம் செய்தான். வால்மீகிமுனிவனின் இராமாயணம் தோன்றியது, 6361 ஆண்டுகட்கு முன். அதன் பின்னர் இராம காதை மக்கள் உள்ளத்தில் சிறிது சிறிதாகப் பதியலாயிற்று. சுமார் 5000 ஆண்டுகட்குப் பின் கம்பன் வால்மீகியின் ஆதி காவியத்தை நம் நாட்டின் பண்பாட்டிற்கேற்பத் தமிழிலே ஆக்கித் தந்தான்.

கம்பன் 9-ஆம் நூற்றாண்டில், சடையப்ப வள்ளல் காலத்தில் வாழ்ந்தவன் என்பது நாமெல்லோரும் அறிந்ததே. ஆனால், அப்பெருமகன் பிறந்த தேதி நமக்குத் தெரியாது. விசுவாவசு ஆண்டு பங்குனி மாதம் 4-ஆம் தேதி புதன்கிழமைக்குச்சரியானகி.பி. 886-ஆம் ஆண்டு பிப்ருவரி மாதம் 23-ஆம் தேதி அஸ்த நட்சத்திரத்தில், திருவெண்ணெய்நல்லூரில் சடையப்ப வள்ளல் உட்பட அறிஞர்களும், பொதுமக்களும் கூடியிருந்த அக்கண்ணியமிக்க அவையிலே, கம்பன் தனது காப்பியத்தை அரங்கேற்றினான். அன்றுதான் மக்கள் அவனுக்குக் கவிச்சக்கரவர்த்தி என்று பட்டம் சூட்டினார்கள். கம்பன் பிறந்த நாளை நாமறியாவிடினும், கவிச்சக்கரவர்த்தி பிறந்த நாளை அறிவோம்.

கம்பன் ஏன் பங்குனி மாதத்தைத் தன் நூலுக்கு அரங்கேற்றம் செய்யத் தேர்ந்தெடுத்தான் என்பதை எண்ணிப் பார்க்கலாம் அல்லவா? பங்குனி மாதத்தில், குரு பகவானின் ஆட்சி வீடாகிய மீன ராசியில், சூரியன் ஆரோகண கதியில் வாசம். அந்த மாதத்தில், உத்திர நட்சத்திரத்தில், பௌணர்மி திதி. கல்விகாரகனாகிய

மூலத்திரிகோண அதி உச்சம் பெற்ற புதனது வீடாகிய கன்னியில் வளர்பிறைச்சந்திரன் பூரணத்தில் வாசம். உத்திரம் இகத்திற்கும் பரத்திற்கும் உரிய ஒரு நட்சத்திரம். அஸ்தம் படிப்பு, வித்தை, பேர், புகழ் ஆகிய இவைகளுக்கு அடையாளமாய் விளங்குவது. மேலும், சூரியனுக்கும் சந்திரனுக்கும் ஸப்தம கேந்திரப் பார்வை. ஆகவே, இந்த ராசி நிலையில் செய்யும் எந்தச் செயலும் நீண்டு வளரும் என்பதற்கு ஐயமில்லை.

'அலகிலா விளையாட்டு உடையார்' என்று காப்பியத்தைத் தொடங்கியவன் கவிஞன். காப்பியம் பூரணமானவுடன், ஆடவல்லானின் நடனங்களான ஆனந்தக் கூத்து, அற்புதக் கூத்து, அவிநயக் கூத்து, தில்லைக்கூத்து ஆகியவைகளை எண்ணிப் பார்க்கின்றான். அவனது தாண்டவம் சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம், மறைத்தல், அருளல் ஆகிய பஞ்ச கிருத்தியத்தை உணர்த்துகிறது. பங்குனி உத்திரத் திருநாளில் நடராஜப்பெருமானின் ஆனந்தத் தாண்டவம் அற்புதமாய் நிகழ்கிறது. அண்ட சராசரங்களில் உள்ள உயிர்கள் எல்லாம் அதனால் ஈர்க்கப்படுகின்றன. மண்ணுளோரும் விண்ணுளோரும் அந்தப் பெருமானின் பூத ஆகாசத் தாண்டவக் காட்சியில் தம்மை மறந்து நிற்கின்றனர். மஹான்கள் ஞான ஆகாசமான சிதாகாச தாண்டவத்தில் திளைக்கின்றார்கள். இந்த அற்புதக் கூத்தைத் திருமூலர் அழகாகப் பாடுகிறார்.

"தத்துவம் ஆடச் சதாசிவம் தானாடச்
சித்தமும் ஆடச் சிவசத்தி தானாட
வைத்த சராசரம் ஆட மறையாட
அத்தனும் ஆடினான் ஆனந்தக் கூத்தே."

ஆகவே, இந்த ஆனந்த மயமான திருநாளிலே தனது காப்பியத்தை மக்கள் முன்னே வைக்கின்றான். ஒரு செயல் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் நின்று, நீண்டு வளர வேண்டுமானால் அதை அஸ்த நட்சத்திரத்திலே செய்ய வேண்டும் என்று சாஸ்திரம் அறிந்தோர் சொல்லியுள்ளார்கள். ஆகவேதான், சகல கலைகளையும் கற்றுணர்ந்த கவிச்சக்கரவர்த்தி தனது காப்பியம் சிரஞ்சீவியாக இருக்க வேண்டுமென நினைத்து, மீனத்தில் சூரியனும், கன்னியில் உத்திரமும் அஸ்தமும் கூடியதோடு சந்திரனும் நின்ற நாள்களைத் தன் அரங்கேற்றத்திற்கு எடுத்துக்கொண்டான் என்று சொல்லலாம்.

இந்தத் தத்துவத்தையெல்லாம் நன்கு புரிந்துகொண்டவர், கணேசன் அவர்கள். ஆகவேதான், தம் ஆசானாகிய கம்பன் எந்த உத்திரத் திருநாளிலும், எந்த அஸ்தத் திருநாளிலும் அரங்கேற்றம் செய்தானோ, அதே முறையைப் பின்பற்றிக் காரைக்குடியில், 1939 - ஆம் ஆண்டு பங்குனி மாதத்தில் கம்பன் விழாவினைத் தொடங்கினார். எத்துணையோ இன்னல்களுக்கிடையிலும், கம்பன் விழாவைத் தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு, கட்டுப்பாட்டுடன் காலம் தவறாமல், கண்ணியமான முறையில் 44 ஆண்டுகள் நடத்தி வந்தார்கள். பட்டி மண்டபம் உட்பட பல புதிய நிகழ்ச்சிகளையும் உருவாக்கினார்கள். காரைக்குடி கம்பன் அரங்கம், பேச்சுக் கலைக்குச் சரசுவதி தேவியின் பூரண அருள் பெற்ற இடம் எனத் திகழ்ந்தது. திருவையாற்றுத் தியாகய்யா அவர்களின் ஆராதனை விழாவில் வித்வான்கள் கலந்துகொண்டு எப்படி பிரபல்யமடைந்தார்களோ, அதே போன்று, காரைக்குடி கம்பன் அரங்கத்தில் பல தமிழன்பர்கள் தோன்றிப் பேரும் புகழும் வாழ்வும் பெற்றார்கள்.

1956-ஆம் ஆண்டுவரை, கணேசன் அவர்கள் நடத்தி வந்த கம்பன் விழாவைப்பற்றிக் கோவை மக்களுக்கு விவரம்தெரியாது. அப்போது முதன் முதலாகக் கோவையிலே கலெக்டரின் நேர்முக உதவியாளராகப் பணியாற்ற, அமரர் தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் வந்தார். அதுசமயம் அவரிடம் நேரடியாகப் பணி புரியும் வாய்ப்பு அடியேனுக்குக் கிட்டியது. தமிழிலே சிறிது ஆர்வம் இருந்ததால் எங்கள் இணக்கம் நெருக்கமாயிற்று. தேவாரம், திருவாசகம், திவ்யபிரபந்தம் போன்ற பக்தி நூல்களையே படித்து வந்தவனை, இலக்கியத்தைப் படிக்கும்படி தூண்டினவர் அவர்தான். கம்பனை இப்படித்தான் படிக்கவேண்டும், துய்க்க வேண்டும் என்று சுட்டிக்காட்டிய பெருமை அவரையே சாரும். கலையுள்ளம் படைத்த அவரிடம் கல் பேசும்;

செம்பு இசை பாடும்; சுதைகள் நடமாடும். நண்பர்களையெல்லாம் கையைப் பிடித்துக் கொண்டு போய்க் கலைச்செல்வங்களின் முன்னே கொண்டு நிறுத்தி, அதி அற்புதமான விளக்கம் கொடுக்கும் வித்தையில் கைதேர்ந்தவர். கலைக் கோயிலின் பெயரால் அவர் வெளியிட்ட 'வேங்கடம் முதல் குமரி வரை' என்ற நூலின் வாயிலாக, எண்ணற்றவர்களின் மனத்தில் கடவுள் நம்பிக்கையையும், தெய்வ பக்தியையும் மிளிரச் செய்த புண்ணியத்தைக் கட்டிக்கொண்டவர். காரைக்குடியில் நடக்கும் கம்பன் விழாப்பற்றி அடிக்கடி சொல்லுவார்கள். அப்போதுதான் கோவையிலே ஏன் அத்தகைய விழாவைக் கொண்டாடக்கூடாது என்கிற எண்ணம் உதயமாயிற்று. நன்னெறியில் ஈடுபட்டவர்களும், அறத்துறையில் சிறந்தவர்களும் இலக்கிய அறிஞர்களும் கோவையில் இருந்த போதிலும், அவர்களையெல்லாம் ஒருங்கு சேர்த்து, கம்பனுக்கு விழாவெடுக்க வேண்டும் என்கின்ற நினைவு யாருக்கும் தோன்றவில்லை. காரணம், தூண்டுகோல் இல்லையென்பதே. அந்த நேரத்தில் கைகொடுத்தவர் தொண்டைமான் அவர்கள் ஆவர்.

கொங்கு நாடு கொடைத்தன்மைக்கும் விருந்தோம்பலுக்கும் சிறந்த ஒரு பகுதியாகும். கொங்கு என்றால் மணம் என்று பொருள். தேன் என்று இன்னொரு பொருளும் உண்டு. மணம் வீசும் இனிய நாடு என்றும் கூறலாம். கம்பனையும் அவனது பெருங்காப்பியத்தையும் இணைத்துக் கொண்டால், இக்கொங்கு நாடு மேலும் மணம் வீசும் எனக் கருதி, கம்பனுக்கு விழாவெடுக்க முன்னோடியாக ஒரு கூட்டம் கூட்டினோம். அப்போது கோவையில் கலெக்டராக இருந்தவர், திரு. P.K. நம்பியார், I.A.S. அவர்கள். கம்பனைப் பற்றியும் தமிழைப்பற்றியும் தொண்டைமான் பேசிய பேச்சால் கவரப்பட்ட அவர், கம்பன் விழா நடத்துவதற்கு ஆதரவு அளித்ததுடன் தமது கேம்ப் அலுவலகத்திலேயே அக்கூட்டத்தை நடத்த ஒத்துக்கொண்டார்கள். அதில் பல அறிஞர்கள், தொழில் மேதைகள், தன வணிகர்கள் கலந்துகொண்டார்கள். பாஸ்கரத் தொண்டைமான், கணேசன் அவர்களை முறைப்படி அறிமுகம் செய்து வைத்தார். கூட்டத்தினரின் வேண்டுகோளுக்கு இணங்க, கணேசன் அவர்கள் கம்பன் விழா அமைப்பு, பட்டி மண்டபப் பாங்கு —இவைகளையெல்லாம் விஸ்தாரமாக எடுத்துச் சொன்னார்கள். அவர் கருத்தை ஏற்றுக்கொண்டு 1956-இல் முதன்முதலாக கோவை C.S.W.Mills கல்யாண மண்டபத்தில் கம்பன் விழாவை நடத்துவதெனத் திட்டம்தீட்டினோம். இவற்றிற்கெல்லாம் பொருளாளராக - செயலாளராக இருந்து உழைத்தவர், அருமைச் சகோதரர் க. கு. கோதண்டராம கவுண்டர் அவர்கள். கீழ் மட்டத்தில் மண்டபத் அமைத்தல், அழைப்பிதழ் அச்சிட்டு விநியோகம் செய்தல் முதலிய எடுபிடி வேலைகளையெல்லாம் அடியேன் கவனித்தேன். இதில் ஓர் தனித் தன்மை என்னவென்றால், கோவையில் அதுவரையிலும் நடந்த எந்த விழாவிற்கும் இல்லாத பெரியதோர் அளவில் செய்த விளம்பரந்தான். நகர் எங்கினும் கம்பன் விழாப்பற்றிய பேச்சுத்தான்.

1957-ஆம் ஆண்டு, இரண்டாவது கம்பன் விழா, கோவை சன்மார்க்க சங்க கட்டடத்தில் சீரும் சிறப்புமாக நடந்தேறியது. பின்னும் பல ஆண்டுகள் தொடர்ந்து விழா நடந்தது. எல்லாவற்றிலும் பங்கேற்றவர் கணேசன். கோவையில் ஆரம்பித்த கம்பன் விழாவானது கொங்கு நாடெங்கிலும் பரவலாயிற்று. பட்டி தொட்டிகளில் எல்லாம் பட்டி மண்டபம் மயம்.

தொண்டைமான் போன்ற கலைஞர்கள் கூட்டம் கோவையில் கலைந்து போனதால் கம்பன் கழகம் செயல்படுவதில் இடைக்காலத்தில் சிறிது உற்சாகம் குறைந்தது. உலகம் போற்றும் மூதறிஞர் இராஜாஜியின் உத்தம சீடராக இருந்த கணேசன் அவர்கள், அன்னாரின் அரசியல் அணியில் தளபதியாக இருந்தார். அது சமயம், இராஜாஜி அவர்களின் சிந்தனைகளிலே கவரப்பட்டு, அவர் வழியைப் பின்பற்றியவர் கோவை வள்ளல் திரு. G. K. சுந்தரம் அவர்கள். இவர்கள் இருவரும் அரசியல் கொள்கைகளில் ஒத்த மனத்தவராய் இருந்து, இலக்கிய நண்பர்களாக மாறினவர்கள். 1973-இல் மீண்டும் கோவையில் கம்பன் கழகம் G. K. S. அவர்கள் தலைமையில் உருவாயிற்று. அதற்குக்

கம்ப இராமாயண நூலையும், பல ஆண்டுகளுக்கு முன் கம்பன் பணிக்கெனவே சேர்த்த வெள்ளி நாணயங்களையும் சீதனமாகக் கொடுத்து நல்லாசி வழங்கியவர், கம்பன் அடிப்பொடி அவர்கள். தொட்டதெல்லாம் துலங்கும் கைராசியுடைய G. K. S. அவர்கள் தலைமையில், சென்ற 11 ஆண்டுகளாகக் கோவைக் கம்பன் கழகம் மணி மேல்நிலைப்பள்ளியில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இவற்றிற்கெல்லாம் காரணமாய் இருந்து வழிகாட்டிய பெருமை, அடிப்பொடி அவர்களையே சாரும். இக்கம்பன் கழகம் நன்கு வளரப் பணியாற்றி வருபவர்களில் குறிப்பானவர்கள் நண்பர்கள் வெங்கடேசனும் நஞ்சுண்டனுந்தான். அரசுப் பணியில் இருந்து ஓய்வு பெற்று கோவைக்கு வந்தவுடன், தலைவர் அவர்களது நல்லாசியுடன் அடியேனையும் அவர்களது குழுவில் சேர்த்துக்கொண்டனர்.

ஆண்டுக்கொருதரம் கம்பனை நினைவுகூர்வதோடு மட்டுமல்லாமல், மாதந்தோறும் கம்பன் காப்பியத்தை ஒவ்வொரு பகுதியாகப் பார்க்க வேண்டும் என்கின்ற ரீதியில், தலைவர் அவர்கள் ஏற்றிப் போற்றி வழிபாடு செய்யும் பாப்ப நாயக்கன்பாளையம் சீனிவாசப் பெருமாள் கோவிலில், மாதாமாதம் இரண்டாவது சனிக்கிழமைதோறும் தொடர் சொற்பொழிவு ஏற்பாடு செய்து, கடந்த 2½ ஆண்டுக் காலமாக நடைபெற்று வருகிறது. இதற்குப் பிள்ளையார் சுழி போட்டவரும் கம்பன் அடிப்பொடியேதான். ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு அறிஞர் பேசுகிறார். சீனிவாசன் கோயிலுக்கு வருவதில் பெருமாள் சேவை மட்டுமல்ல, இராகவன் புகழைக் கேட்பதற்கும் மக்களுக்கு ஒரு வாய்ப்பு. இதற்கு வரும் இராமாயண அன்பர் கூட்டம் தனித் தன்மை வாய்ந்தது.

1975-இல், மதுரையில் அடியேன் பணியாற்றியபோது, ஒரு கம்பன் கழகம் நிறுவலாமென யோசனை செய்து அறநிலையத் துறையில் இணை ஆணையாளராகப் பணியாற்றிய வரும், என் நண்பருமாகிய திரு. முருகேசன் அவர்களுடன் சேர்ந்து மதுரைத் தமிழ்ச் சங்கக் கட்டடத்தில் கூட்டம் போட்டோம். அவ்வாண்டு ஜூலை மாதம் 26-ஆம் தேதி சனிக்கிழமை மாலை மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்துள் திருக் கல்யாண மண்டபத்தில் கம்பன் அடிப்பொடி அவர்கள் தொடங்கிவைக்க, ஜஸ்டிஸ் இஸ்மாயில் தலைமையில் கம்பன் விழா பொலிவோடு நடந்தது.

1975-ஆம் ஆண்டு இறுதியில் புதுக் கோட்டைக்குமாற்றப்பட்டேன். அம்மாநகர் நீண்ட காலமாகத் தனித்து சமஸ்தானமாக இயங்கி வந்ததாலோ அல்லது வேறெந்தக் காரணத்தினாலோ, அண்மையில் கோலாகலமாய்க் காரைக்குடியில் நடக்கும் கம்பன் விழாவில் தன்னைஈடுபடுத்திக்கொள்ளவில்லை. ஆகவே, அங்கு ஒரு கம்பன் கழகம் நிறுவலாமென எண்ணம் எழலாயிற்று. புதுக்கோட்டையில் உள்ள தமிழறிஞர்களையும், இலக்கிய ஆர்வம் கொண்ட அன்பர்களையும் ஒன்றுசேர்த்துப் பூர்வாங்கமாகப் பல கூட்டங்கள் நடத்தி, கருத்துகளைப் பரிமாறி, சிலரைக் காரைக்குடிக்கு அழைத்துக்கொண்டு போய்க் கம்பன் அடிப்பொடி அவர்களுக்கு அறிமுகப்படுத்தினேன். அதன் பின்தான் உற்சாகம் பிறந்தது. கம்பன் கழகம் அமைக்க உறுதுணையாக இருந்தவர்கள், சித்ரா ஜவுளி ஸ்டோர்ஸ் திரு. கந்தையா, புலவர் மலையப்பன், தாசில்தார் கருப்பையா, மாவன்னு மாணிக்கம் போன்றவர்கள். 21—6—1976-இல் முதல் கம்பன் விழா புதுக்கோட்டை மாநகர் மண்டபத்தில் குதூகலத்துடன் ஆரம்பமாகியது. தொடக்கி வைத்தவர் அன்றைய புதுக்கோட்டை கலெக்டராக இருந்த பால்ராஜ், I. A. S. அவர்கள். விளக்கேற்றி வைத்தவர், புதுக்கோட்டை இளையராஜா விஜய ரகுநாத பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள். தமிழறிஞர்கள் கி. வா. ஜா., ஜஸ்டிஸ் இஸ்மாயில், ராமராசன், கோதண்டராம கவுண்டர், இராதா கிருஷ்ணன், சத்தியசீலன், அறிவொளி, இராஜ கோபால் முதலியோர் பங்கேற்றனர். சீதனம் கொடுத்து வாழ்த்துரை வழங்கியவர் கம்பன் அடிப்பொடி அவர்கள். இறை பணிக்கென்றே தம்மை அர்ப்பணித்துக்கொண்ட சாயிமாதா பிருந்தாதேவி அவர்கள் இவ்விழாவில் முக்கியப் பங்கேற்றதுடன், அன்றைய நண்பகலில் விழாவினில் பங்கேற்றவர்களுக்கும், கழக அங்கத்

தினர்கட்கும் தம் சொந்தப் பொறுப்பில் பெரியதொரு விருந்து படைத்தார்கள். இதன் விளைவு, சூருவளி வேகத்தில் புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் மாதாமாதம் கம்பனுக்கு விழா. புதுக்கோட்டை குலபதி பாலையா பள்ளியில் ஞாயிறு தோறும் தொடர் சொற்பொழிவுகள். நகரத்தார்கள் வாழும் நச்சாந்துபட்டி, பனையபட்டி போன்ற சிறு ஊர்களிலுங்கூட, விழாக் காலங்களில் பட்டி மண்டபத்துடன் கூடிய கம்பன் விழா நடைபெற்றது.

சர்வ சாதாரணமாய் இருந்தவர்களுங்கூடக் கம்பன் அடிப்பொடி அவர்கள் பேச்சைக் கேட்டவுடன் அதில் ஈடுபாடு கொண்டு கம்பனுக்கு விழா வெடுத்தனர். வெறும் புலவர் மலையப்பனாக இருந்தவர் தற்போது இலக்கியத்தில் மலையளவு உயர்ந்துவிட்டார். சின்னஞ்சிறு தீவுத்திடல் இராமேஸ்வரத்தில் நண்பர் இராஜகோபால் சாஸ்திரி, கம்பனுக்கு விழாவெடுக்கிறார். இரட்டையர்களான வெங்கடேசனும், நஞ்சுண்டனும் விழா அமைப்பில் ஈடுபடுவதோடு மட்டுமல்லாமல், பாங்கறியும் பட்டி மண்டப மேடைகளிலே தோன்றியும், கம்பன் புதையல் போன்ற நிகழ்ச்சிகளை வானொலியில் நிகழ்த்துவதற்கும் உறுதுணையாய் நிற்கிறார்கள். பட்டுக்கோட்டை நண்பர் அன்பு வேதாசலமும், காவிரிப்பூம் பட்டினம் தாசில் பண்ணை திரு. ராஜசேகரனும், சேலம் சீத்தாபதியும், வேலூர் கம்பன் கழகத் தலைவர் திரு. S. N. குப்புசாமி முதலியார் அவர்களும் கோவை சடகோபால் நாயுடு அவர்களும் காரைக்குடி கம்பன் விழாவில் தவறாமல் கலந்து கொள்ளும் அன்பர்கள். எல்லோரையும் சொல்வதென்றால் பட்டியல் நீண்டுகொண்டே போகும்.

25 ஆண்டுகட்கு முன், நண்பர் ஒருவருடன் காரைக்குடிக்கு வந்த புலவர் அருணகிரி, தற்செயலாக மீனாட்சி உயர்நிலைப் பள்ளியில் நடந்த கம்பன் விழாவிற்குச் சென்றார். அந்த இலக்கிய இன்பத்திலே ஈர்க்கப்பட்டதால் 3 நாள் காரைக்குடியிலே தங்கிவிட்டார். பின்னர் ஆண்டுதோறும் வரஆரம்பித்து, பேச்சாளர்களைப் பற்றிய குறிப்புகள், விமரிசனம் தயார் செய்து கொண்டு வந்தார். புதுவையில் ஜஸ்டிஸ் மகராஜன் அவர்கள் 1965-இல் பணியாற்றி வந்த சமயம், அவரை அருணகிரி அணுகி, தாம் சேகரம் செய்த கம்ப இராமாயண காரைக்குடி விழா பற்றிய குறிப்புகளைக் காட்டி, தம் பேச்சுத் திறத்தால் அவரை மயங்கச் செய்து பாண்டிச்சேரியில் கம்பன் கழகம் அமைக்க அவர் நல்லாசியையும் பெற்றார். அதே சமயம், புதுவையில் I. G.ஆக திரு. பொன் பரமகுரு அவர்களும் பணிபுரிந்து வந்தார். அவர் ஒத்துழைப்பும் ஒன்றுசேர அமைந்தது. அன்று முதலமைச்சராக இருந்த திரு. வெங்கடசுப்பா ரெட்டியார் அவர்களைத் தலைவராகவும், நா. கோவிந்தசாமி அவர்களைப் புரவலராகவும் வைத்து 1966-இல் கம்பன் கழகம் தொடங்கினார். கம்பன் அடிப்பொடி அவர்கள் பாண்டிச்சேரி விழாவில் ஆண்டுதோறும் பங்கேற்றனர்.

கொங்குநாட்டின் வேளாளர் பகுதிகளுக்குச் சிகரமாக விளங்கும் கோபிச்செட்டிபாளையம் சீதா கல்யாண மண்டபத்தில் தங்கமணி, திரு.K. முத்து வேலப்ப கவுண்டர், திரு P. N. நஞ்சப்பன் உள்ளிட்ட பெருந்தகையாளர் குழுவுடன் ஆண்டு தோறும் மார்கழி மாதம் 2-ஆம் நாள் விழாவாக கவிச்சக்கரவர்த்தி கம்பனுக்குக் கடந்த 19 ஆண்டுகளாக விழா எடுத்து வருகிறார், சகோதரர் திரு. க. கு. கோதண்டராம கவுண்டர். The Oriental Vellalas have been noted for their hospitality என்று ஆங்கிலேயனின் அந்தக் காலத்திய கணிப்பின்படி, வேளாண்குடி மக்களின் உன்னதமான விருந்தோம்பலின் உயர்வை, அங்கு கம்பன் விழாக் காண வருவோர் இன்றுகூட உணருகிறார்கள். அடுத்து, 3-ஆவது நாள் கம்பன் விழாவை வைகுண்ட ஏகாதசியன்று, கள்ளிப்பட்டி ஸ்ரீராம விண்ணகர ராமபிரான் ஆலயத்தில் நடத்தி வருகிறார்கள். காரைக்குடி எப்படித் தமிழறிஞர்களுக்குத் தாய்வீடோ அதே போன்று கள்ளிப்பட்டி கவுண்டர் வீடும். கம்பன்பேரால் பக்தியை வளர்க்கிறார் கள்ளிப்பட்டியில். இந்த 3-ஆம் நாள் விழாவிலும் கம்பன் அடிப்பொடியும் தவறாது பங்கேற்று வந்துள்ளார்கள்.

சா. கணேசன் அவர்கள் தம் இயற்பெயரில் நிற்கும் வரையில், தமிழில் எங்கு குற்றம் குறை

கண்டாலும், கண்டிக்கத் தவற மாட்டார். புலவர்களிலே நக்கீரனுகத் திகழ்ந்தார். பாஸ்கரத் தொண்டைமான் அவர்களே சொல்லுவார்கள், கணேசன் முன்னிலேயில் சர்வ ஜாக்கிரதையாகப் பேச வேண்டும் என்று. கணேசன் அவர்கள் நீண்ட நெடுங்காலம் கம்பனில் தோய்ந்து, கம்பனுக்கே அடிமையாகி,

கம்பன்தான் எழுதும் எழுத்தாணி ஆகேனே
கம்பன்தான் பிடிக்கும் கையேடாய் ஆகேனே
கம்பன்தன் சந்நிதியிற் ஏதேனும் ஆகேனே

என்று அடிக்கடி சொல்லிக்கொண்டு வந்தார்கள். கம்பனேயே குருவாகக்கொண்டு கம்பனது மானசீக நல்லாசியுடன் 'கம்பன் அடிப்பொடி' என்ற தாஸ்ய நாமம் பூண்டார். தாஸ்ய நாமம் பூண்ட பின் சாதுவிலும் சாதுவாகிவிட்டார். குற்றமே செயினும் குணமெனக் கொள்ளும் பாங்கினைப் பெற்றார். எல்லோரையும் வாழ்த்தி மங்களகரமாக இருக்க வேண்டும்—நடக்க வேண்டும் என்று சொல்லி வந்தார்கள்.

1982-இல் கம்பனின் நிறைவு நாள் விழா நாட்டரசன் கோட்டையில் நடந்த சமயம் கம்பன் அடிப்பொடி அவர்களின் உடல் நலம் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. நண்பர்கள் எல்லாம் அவரை அணுகி, "ஐயா, உங்கள் பணியை நாங்கள் செய்கிருேம் ; தாங்கள் ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள்" என்று சொன்னதைச் சிறிதும் செவிமடுக்கவில்லே அவர். அதுமட்டுமல்ல; அதற்கு ஒரு அழகான, நெஞ்சைத் தொடும் விளக்கம் ஒன்றையும் சொன்ஞர்கள்:

"செட்டிநாட்டில் பிறந்ததற்காக மகிழ்கிறேன். எத்துணேயோ துன்பங்களே அனுபவித்ததற்காக மகிழ்கிறேன். எந்தக் காரணத்தைக் கொண்டும் யாருக்கும் எந்த விதமான துன்பத்தையும் தரவில்லேயென்று நினேத்து மகிழ்கிறேன். தமிழனுகப் பிறந்ததற்காக வாங்கிய அமானுஷ்யக் கடனே இந்த 50 ஆண்டுகளாகத் தமிழுக்காகவும் கம்பனுக்காகவும் உழைத்துத் திருப்பிச் செலுத்திவிட்டேன் என்பதில் மகிழ்ச்சியடைகிறேன். எல்லாவற்றிற்கும் மேலாகக் கடைசி மூச்சிருக்கும் வரை கம்பன் நாமம் சொல்லுவேன் என்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்."

இறுதியாக அவர் எழுந்து நின்று நன்றி கூறும் போது உடைந்தேவிட்டார். குரல் தளர்ந்து விட்டது; பேச்சு வரவில்லே. கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர். பக்கத்தில் இருந்த நாங்கள் சில பேர் அவரைத் தாங்கிப் பிடித்துக்கொண்டோம். சில நிமிஷங்கள் கழிந்தன. ஆசுவாசப்படுத்திக் கொண்டார். கூடியிருந்தவர்களேயெல்லாம் பார்த்து இரு கைகளேயும் தலேக்கு மேல் வைத்துத் திசை நோக்கித் தொழுது,"காரைக்குடி விழாவை அடுத்த ஆண்டில் நீங்கள் எல்லோரும் நடத்த வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். அப்படியே ஏகோபித்த குரலில் சபதம் செய்தோம். அடுத்த விழாவிற்குத் தாம் இல்லே என்பதைத் தம் உள்ளுணர்வு அவருக்குக் காட்டிவிட்டதை உணர்ந்துகொண்டார்.

கம்பனேப் பரப்புவதிலும், கம்பன் அடிப்பொடி அவர்கள் வழியில் நின்று பணியாற்றுவதிலும் தீவிரம் காட்டுபவர்கள், திருநெல்வேலி கம்பன் கழகத்தினர். கம்பன் அடிப்பொடி அவர்களது திருவுருவச் சிலேயை, அன்னரது ஞாபகார்த்தமாக இந்த ஆண்டு காரைக்குடியில், இன்று நடக்கும் விழாவில் வைத்து, அதைத் திறக்க உள்ளார்கள். அத்தகையோரது சிறந்த சேவைக்குக் கம்பன் கழகத்தினர் மட்டுமல்ல, தமிழினமே அவர்களுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

கம்பன் அடிப்பொடி அவர்கள் வழியில் நின்று, அவர் கட்டிக் காத்த கலேக்கோயிலே மேலும் மேலும் மெருகேற்றி ஒளிவீசக் கம்பன் கழகத்தினர் அனேவரும் ஒருமைப்பாட்டுணர்வுடன் செயல்படுவோமாக. கம்பன் வாழ்க ! கம்பன் அடிப்பொடி நாமம் வாழ்க !

“முதல்வர்”

திரு. “கம்பன் அடிசூடி”

ஐந்து கரத்தனை, யானை முகத்தனை, இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை, நந்தி மகன்தனை, ஞானக் கொழுந்தினை நாம் நாளும் புந்தியில் வைத்துப் போற்றியே நாளைத் தொடங்குகிறோம், இல்லையா? எந்த ஒரு காரியத்தையோ, முயற்சியையோ தொடங்கும் போது முன் நின்றருள்பவர் கணேசர். அந்த ‘வேழமுகனை’ப் போலவே, காரைக்குடிக் கற்பக நிலையத்துக் கணேசனாரும் எந்தத் துறையிலும் முன் நிற்பவர் மட்டுமல்ல; முன்னோடியாய், (Pioneer) விளங்கியவருமாவார்.

நாட்டு விடுதலையா? சட்டையையே கழற்றி எறிந்து போராடி, அதையே கடைப்பிடித்தவர். சமுதாய சீர்திருத்தமா? விதவா விவாகத்தை ஆதரித்த நகரத்தார். சமயத்துறையா? இவர் இல்லாமல் பெரும்பாலான தமிழ்நாட்டுக் கடவுளர் கும்பாபிஷேகம் செய்துகொண்ட தில்லை. தவ முனிவர் காஞ்சிப் பெரியவர் ஏவ வித்வத் சதஸை முதலில் நடத்திக் காட்டியவர். தொல்பொருளாய்வுத் துறையா? தமிழகத்தில் முதன்முதலில் தொல்பொருள் ஆய்வுக்கெனத் தனித்துறையை ஏற்படுத்தக் காரணமாயிருந் தவர். தமிழ்மாநாடா? கண்டோரெல்லாம் வியக்கும் வண்ணம் கலைக் காட்சியை முதலில் நடத்தி, ‘கையேட்’டை வெளிக் கொணர்ந்தவர். படிமக்கலையா? கண்ணகிக்கு முதலில் வடிவம் அமைத்த பெருமைக்குரியவர். சிற்பக் கலையா? இன்றைக்கும் கம்பீரமாய் நிற்கும் காந்தி மண்டபம். பொறியியல் நிபுணத் துறையா? பொறியியல் வல்லுநர்களே வியக்கும் போர் நினைவுச் சின்னத் தம்பம். இலக்கியத் துறையா? கம்பனுக்கு (இராமனுக்கு அல்ல!) முதலில் விழா எடுத்து, அதையே ஜீவ வேள்வியாய் நாற்பதாண்டுகட்கு மேலாய்த் தொடர்ந்து நடத் தியவர். இப்படி எந்தத் துறையிலும் முன் நிற்பவர் மட்டுமல்ல; அந்தத் துறையில் தம் செயலால் தம் தனி முத்திரையைப் பதித்த சாதனையாளருங்கூட. “தோயாத் துறையிலான்” என்று தம் தெய்வமாம் கம்பனை அவர் போற்றி னரே, அதையேதான் நாமும் பெய்து அவருக்குப் போற்றி சொல்ல வேண்டும்.

* * *

தனி முத்திரையாய் அவர் பதிக்கக் காரணம்? தாம் கொண்ட கொள்கையிலே அவருக்கு இருந்த பிடிப்புத்தான்!

கம்பன் சொன்னனே,

“இறப்பினும், திருஎலாம் இழுப்ப எய்தினும்
துறப்பிலர் அறம்எனில் சூரர் ஆவதே”

என்று, அப்படி எந்தக் காலத்திலும் அறம் துறவாத சூரர் அவர். இல்லாவிட்டால், அன்றைய முதலமைச்சராயிருந்த கலைஞர் அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்தவிருந்த கம்பன் விழா அன்று காலை, குறித்தபடி 9-30 மணிக்கு அவர் விழா மேடைக்கு வர இயலாதபோதும், தம் கொள்கை தவறாது விழாவை ஆரம்பித்திருக்க முடியுமா? இல்லாவிட்டால் கலைஞரே “ஆள்களுக் காக நிகழ்ச்சிகள் என்றில்லாமல், நிகழ்ச்சிகளுக் காகவே ஆள்கள் என்று காலந்தவறாது கணேச னார் நடத்துவதை நான் போற்றிப் பாராட்டு கிறேன்” என்றிருப்பாரா? வேறு எத்துணைப் பெரிய மனிதரும் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத தீரச் செயல் இது. இதன் மூல காரணம் ‘காலந்தவறாமை’ என்ற அவர்தம் கொள்கைப் பிடிப்பே!

* * *

பிறிதொரு முறை, இன்றைய முதல்வர், எம். ஜி. ஆர். அவர்கள், செட்டி நாட்டிற்கு ஒரு திருமணத்திற்காக வந்தவர்கள், இலக்கிய ஆர்வம் காரணமாய், முன்னறிவிப்பு ஏதுமின்றிக் கம்பன் விழாப் பட்டி மண்டப நிகழ்ச்சியின்போது வந்தார்கள். அவர் மிகவும் ஜாக்கிரதையாய், சாதாரண ரசிகர் ஒருவரைப் போல், எந்த ஒரு கெடுபிடியும் விளம்பரமுமின்றி, ஓசைப்படாது, கணேசனுருக்கே தெரியாது வந்தமர்ந்தார்கள். சிறிது நேரத்தில் விஷயம் காட்டுத்தீ போல் பரவிக் கூட்டம் சேர ஆரம்பித்தது. விழா முடிந்து அவர்கள் வெளியில் வரும்போது, அவரைப் பார்ப்ப தற்காகத் தாள முடியாத அளவு, காரை நகரே திரண்டு வந்துவிட்டது. அப்போது சிலர், 'விழா முடிந்ததும் அவர்களை மேடையிலேற்றி இரண் டொரு வார்த்தைகள் பேசும்படி செய்தால் கூட்டம் கலைந்துவிடும்' என்று மிகவும் எடுத்துரைத்தார்கள். ஆனுல் கணேசனுரோ, நிகழ்ச்சி நிரலில் இல்லாமல், அவர்களை மேடை யில் ஏற்றுவதோ, விழாவுக்குத் தொடர்பில்லாது அவர்களைப் பேசச் செய்வதோ தோன்றச் செய் வதோ கம்பன் மேடைக்கு உகந்ததல்ல என்ற காரணத்தாலும், எம். ஜி. ஆர். அவர்களும் அதற்கு இசையாததாலும், எப்படியும் கூட்டத்தைக் கலைத்து மற்ற அன்பர்கள் செல்லவேணும் என்ற கடமை உணர்வால், எம். ஜி. ஆர். அவர்களை மேடைக்கு வெளியே பந்தலில் ஒரு நாற்காலி இட்டு, அதில் ஏறிக் காட்சியளிக்க ஏற்பாடு செய் தார்கள். முறைமையை மீறுவது எக்காலத்தும் எக்காரணத்துக்காகவும் இல்லை என்ற உறைப் புடையவர் அவர் என்பதை தெள்ளத் தெளிவாக் கினுர்கள்.

* * *

செயலாளன், பட்டி மண்டபம், மேல் முறை யீட்டுப் பட்டி மண்டபம், நற்றமிழ் முற்றம் முதலிய சொற்களை முதலில் உபயோகப்படுத்தி யதும், நிகழ்த்திக் காட்டியவர்களும் அவர்களே. அவர்கள் நிகழ்ச்சி நிரல் அமைக்கின்ற பாங்கு, ஆள்களைத் தேர்வு செய்கின்ற பான்மை - இவை யெல்லாம் தனிக் கலைகள். அவர்களிடம் எத்தனையோ ஆண்டுகள் படித்தாலும் நமக்கு எளிதில் வாராச் சித்துகள் அவை! பஞ்சிங் மிஷினில் ஒரு தாளையோ கடிதத்தையோ துளை யிடுவதற்குக்கூட நறுவிசாகச் செய்யத் தனி முறைகள் சொல்லித்தருவார்கள். அவர்கள் ஒரு நடமாடும் பல்கலைக் கழகம் மட்டுமல்ல! நடை முறை என்சைக்ளோபீடியாவுங்கூட! அருட்கவி ஐந்திற்குப் பண்ணைமைப்பதிலிருந்து, சாந்தி விகார் நானையும், க்ரீம் சூப்பையும் தயாரிப்பது எப்படி என்பது வரை எல்லாமே கைவந்த கலை; அத்து படியான விஷயங்கள். தாஜ் கொரமண்டலில் நூடுல்ஸை ஸ்டிக்கினுல் ஒன்றுகூடக் கீழே விழாமல் சாப்பிடுகிறலாகவமும், மெரினுவில் கண்ணில் நீர் பீற்றியெடுக்கச் செய்யும் மிளகாய் பஜ்ஜியையும் சிரித்துக்கொண்டே சாப்பிடுகிற பதவிசாகட்டும் —இரண்டுமே எளிவந்த கலை அவருக்கு.

* * *

இளையவர்களை, புதியவர்களை ஆர்வத்தோடு வாய்ப்பளித்து ஊக்குவிப்பதில் அவருக்கு நிகர் அவரே! அவர்களுக்கு ஆசானுய் இருந்து ஒவ்வொரு படியிலும் கைகொடுத்து அழைத்துச் செல்வதில் அவர் ஒரு மேதை.

"தந்ததுன்தனை கொண்டது என்தன்னை" என்றுரே, அப்படி தம்மைக் கொடுத்துப் பிறரைப் பெறக் கற்றுக்கொண்டவர். அப்படியானுல் யார் சதுரர்? நாம்தானே? இல்லை, இல்லை; அடிப்பொடியார் அப்படியொன்றும் சளைத்த வரல்ல! தம் ஒருவரைத் தந்து, நம்மைப் போல் எத்துணைப் பேரையோ கொண்டவர்கள். நாம் பெற்றது அந்தமொன்றிலா ஆனந்தந்தான் என்றுலும், அவர் பெற்றது அளவில்லாத பேரா னந்தம். நம் 'உள்ளம் கவர் கள்வன்' அல்லவா அவர்?